96/2000

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

மார்ச் 9, 2000 தொகுதி 89

எண் 2

©

V2,11,31 ;00
P00.89.2
[illegible]172

வெளியீடு 1-11-2000 Issued 1-11-2000

879

96/2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மார்ச் 9, 2000 – தொகுதி 89 – எண் 2

**Thursday the 9th March, 2000 – Volume 89 – No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

விலை ரூ. *3.00*] [Price Rs. 3.00

D
V211,31 'P00
P00·87-2
இ22772
96
2000

9-3-2000

## உள்ளடக்கம்

பக்கங்கள்

1. தகவல் கோரல் —

*உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை* 145

2. அறிக்கைகள் அளித்தல் —

*பொது நிறுவனங்கள் குழு* 146

3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம் — *தொடர்ச்சி* 146 - 254

*திரு. ஐ. கணேசன்* 146 - 162

*திரு. ஜி. பழனிசாமி* 162 - 180

*திரு. சோ. பாலகிருஷ்ணன்* 181 - 212

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி* 206, 212 - 253

4. அரசினர் தீர்மானம் —

*பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெற்று ஒத்திவைக்கப்பெறுதல்* 254 - 255

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 255 - 257

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## மாசி 26, பிரமாதி - திருவள்ளுவர் ஆண்டு 2031

## 2000 மார்ச் 9, வியாழக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்

கவிகைக்கீழ்த் தங்கும் உலகு."

காதை குடையக்கூடிய கடுஞ்சொற்களையும் பொறுத்துக் கொள்கிற பண்பாளரின் அரசுக்குத்தான் மக்களிடம் மதிப்பு இருக்கும்.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

### 1. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை

**திரு. இரா. தாமரைக்கனி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஏற்கெனவே என்னுடைய அறையிலே வந்து கேட்டீர்கள். விளக்கம் கேட்ட பிறகு என்னுடைய உத்தரவைக் கொடுப்பேன் என்று சொல்லியிருக்கிறேன். இப்போது நீங்கள் பேசுவது முறையல்ல. உங்கள் பேச்சு, குறிப்பேட்டில் ஏறாது.

பொது நிறுவனங்கள் குழுவின்... (குறுக்கீடு) நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். உங்கள் கூற்றை சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு அனுப்பி, அவருடைய பதிலை வாங்கி உங்களுக்குத் தகவல் சொல்வேன். உட்காருங்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

## 2. அறிக்கைகள் அளித்தல்

### பொது நிறுவனங்கள் குழு

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. வ. வேலுசாமி, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

*திரு. வ. வேலுசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆம் ஆண்டுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் 99 முதல் 101 வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம் — தொடர்ச்சி

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதமும் பதிலுரையும். திரு. ஐ. கணேசன்.

*திரு. ஐ. கணேசன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புத்தாயிரம் ஆண்டு முதல் கூட்டத்திலே இம்மாமன்றத்தில் உரையாற்றுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. பி. ஆர். சுந்தரம்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புத்தாயிரம் ஆண்டு தொடங்கிவிட்டதா?

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* அவர் கணக்கிற்குத் தொடங்கியிருக்கிறது. என்னை ஏன் கேட்கிறீர்கள்? உட்காருங்கள்.

*திரு. ஐ. கணேசன்:* புத்தாயிரம் ஆண்டு மட்டுமல்ல, இன்னும் பத்தாயிரம் ஆண்டு ஆனாலும், முதல்வர் டாக்டர் கலைஞரின் நல்ல சாதனைகளை யாராலும் மறைக்க முடியாது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) சுவரொட்டி மீது சாணி அடிக்கலாம், சூரியன் மீது சாணி அடிக்க முடியு[illegible]சையைத் தட்டும் ஒலி) அரிய பல நல்ல திட்டங்களை இந்த ஆளுநர் [illegible]விளக்கும்போது, என்ன செய்வது?



உங்களுக்கு அன்று முதல் இன்று வரை உள்ள கைராசி, உங்களாலே பெரும்பலன் அடைந்தவர்களின் விமர்சன வேலியைத் தாண்டித்தான் நீங்கள் வெற்றி நடைபோட வேண்டியிருக்கிறது. கலைஞரே, விமர்சன வேலியைத் தாண்டித்தான் நீங்கள் வெற்றி நடை போட வேண்டியிருக்கிறது.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* முதலமைச்சர் என்று சொல்ல வேண்டும். முதலமைச்சர் கலைஞர் என்றும் சொல்லலாம். முதலமைச்சர் என்று சொல்லுங்கள்.

*திரு. ஐ. கணேசன்:* சென்னையிலே ஆட்கள் இல்லாமல் அல்லும் பகலும் ஓடிக்கொண்டிருக்கிற ஆகாச இரயில் கட்சிக்காரர்கள் உங்களை விமர்சிக்கலாம்; வியர்வைத் துளிகளைத் தீர்த்தமாக எண்ணும் பாட்டாளி வர்க்கம், பாட்டாளி மக்கள் கட்சி தங்கள் அரசின் செயல் திட்டங்களைப் பாராட்டியே தீரும். மனசாட்சி உள்ளவர்கள் வாழ்த்தி வணங்குவார்கள். இந்த ஆண்டு தொடக்கத்திலே, முப்பால் கண்ட திருவள்ளுவருக்கு முக்கடல் சூழும் குமரிமுனையில், அதிகாரம் கண்ட திருவள்ளுவருக்கு தனது ஆட்சி அதிகாரத்தின் மூலம் வானளாவிய 133 அடி சிலை அமைத்ததை நெஞ்சாரப் பாராட்டுகிறேன்.

'குறள் சிறிது, கோட்டம் பெரிது' என்று வள்ளுவர் கோட்டம் அமைத்து, குறளோவியம் எ ழுதிய முதல்வர் கலைஞரே, கண்ணகிக்கு பூம்புகார் கண்ட முதல்வரே, தமிழ் வளர்ச்சியிலே வானத்தைப்போல உயர்ந்து நிற்கிறீர்கள்.

'கண்ணுபடப் போகுதய்யா'

என்று பாடத் தோன்றுகிறது. (மேசையை தட்டும் ஒலி) இந்த ஆளுநர் உரையிலே எங்களுக்குப் பிடித்த அம்சம் - எங்கள் பாட்டாளி மக்கள் கட்சி தேர்தல் பிரச்சாரத்திலே, எங்கள் கவிஞர் பங்குனி உத்திரன்,

"தமிழ்நாடு என்னடா புறம்போக்கா
அதைத் தடுக்காமல் விடாது பா.ம.க."

என்று எழுதிய ஒரு பாடல் பட்டிதொட்டியெல்லாம் பாடப்பட்டது. இந்த மண்ணுக்கே சொந்தமில்லாதவர்கள் முதல்வர் ஆகலாம்; அமைச்சர் ஆகலாம்; அவ்வாறு இருந்த மாநிலம் இது; இன்னும் இருக்க

ஆசைப்படக்கூடிய மாநிலம் இது. ஆனால் இந்த மண்ணுக்குச் சொந்தமான ஏழை மக்கள் கட்டாயமாக வாக்களித்து, ஜனநாயகத்தை வாழ வைக்கும் குடிசை வாசிகளுக்குப் புறம்போக்கு நிலம் சொந்தம் என அறிவித்தீர்களே, புத்தாயிரம் ஆண்டில் பத்தாயிரம் கோடி முறை பாராட்டினாலும் தகும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனை எங்கள் இயக்க இதயம் டாக்டர் ஐயா அவர்கள் வெகுவாகப் பாராட்டியிருக்கிறார்கள்.

"யானை வரும் பின்னே
மணியோசை வரும் முன்னே"

என்று பாராட்டியிருக்கிறார்.

முற்பகல் 9-35

நான் சொல்கிறேன், மனோன்மணியத்தில் சுந்தரம்பிள்ளை, தமிழுக்குச் சொன்னதை, நான் முத்தமிழ் அறிஞர் கலைஞருக்குச் சொல்கிறேன். உங்கள் திறன் வியந்து செயல்மறந்து வாழ்த்துகிறேன். 'ஞானபீடம் விருது'க்குச் சமமாக 'குறள் பீடம் விருது', 'தமிழ் அகாடமி விருது', வழங்குவோம் என்று அறிவித்திருக்கிறீர்கள். சிறந்த மேதைகளுக்கு நீங்கள் தந்திருக்கும் நன்கொடையே இந்த விருதுகள். அதேபோன்று, 'உருது அகாடமி விருது' தருவது நீங்கள் சிறுபான்மை மக்கள் மீது கொண்டிருக்கக்கூடிய பாசத்தையும், அன்பையும் எடுத்துக் காட்டுகிறது. ஆனால், ஒரு சில மாதங்களுக்கு முன்னால் நடந்த சத்திய சோதனையையும், வேதனையையும் நான் இம்மாமன்றத்திலே எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்.

"முன்னை இட்டதீ முப்புரத்திலே,
பின்னை இட்டதீ தென்னிலங்கையிலே,
அன்னை இட்டதீ அடிவயிற்றிலே,
யானும் இட்டதீ மூள்கமூள்கவே"

என்று பட்டினத்தார் பாடினார் அன்று. ஆனால், தீயினும் கொடியவர்கள், ஒரு குற்றத் தீர்ப்புக்காக சம்பந்தப்பட்டவர்கள் தண்டனை பெறாமல் இருக்கும்போதேகூட, தருமபுரியில் வேளாண் கல்லூரி மாணவிகளை, தர்ம தேவதைகளை, தீயிலே வைத்துக் கொளுத்தினார்கள், பாவிகள், தீயவர்கள். நினைத்தாலே நெஞ்சம்



பதறுகிறது; உலகமே கண்ணீர் விட்டு அழுகிறது; வெந்து வேதனைப்பட்டது தமிழ் மக்களின் மனங்கள். எரியும் பஸ்ஸில் விலா எலும்புகள் வெடித்தன. வேதனை ஓலம்; அக்கிரமத்தின் அடங்காத புகை, ஒவ்வொரு குடும்பமும் கதறித் தீர்த்தது. அங்கமெல்லாம் கண்ணாகி நாடே அழுதது. ஆனால், பொய்யிலே புழுத்த பணத் தோட்டப் பேய்கள், தங்களுக்குச் சம்பந்தமே இல்லை என்று சொல்லுகிறார்கள். எங்களது முன்னாள் அருமைத் தலைவர் பெரிய எம்.ஜி.ஆர்.தான் அவர்களைத் தண்டிக்க வேண்டும். இத்தனை அக்கிரமங்களுக்குப் பிறகும், அவர்கள் மயிலாப்பூருக்கும் மாமண்டூருக்குமுள்ள நீளத்திற்கு சுவரொட்டிகளை அடித்துக் கொண்டு, தமிழ்நாட்டிலே இருக்கிறார்கள் என்றால், தலைவர் அவர்களே, கேவலம், கேவலம்.

தமிழ்நாட்டை ஆள வேண்டும்; தமிழ்நாட்டின் பணத்தைக் கோடி கோடியாகக் கொள்ளையடிக்க வேண்டும்; ஆனால், தமிழுக்கு மட்டும் வாழ அருகதை இல்லை என்று அறிக்கை விடும் துரோகிகள் வாழும் நாட்டிலே, எங்கள் டாக்டர் ஐயா அவர்கள், டெல்லியிலே மகாநாடு போட்டு, தமிழை ஆட்சி மொழியாக்கிட வீர முழக்கம் இட்டார். அதை நீங்கள் அப்படியே ஆளுநர் உரையிலே வழிமொழிந்துள்ளீர்கள் என்பதால் எங்கள் பாட்டாளி மக்கள் கட்சி உங்களுக்குப் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறது.

வான்புகழ் கொண்ட வள்ளுவன் குறளில் இரண்டாம் இடம் பெற்ற வான் உங்களுக்குச் சிறப்புச் செய்தது. உங்கள் ஆட்சிக்கு மாசு வராமல், மாசியிலேகூட மாமழை பொழிந்து தாகம் தீர்த்து, தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I am on a point of order. Governor உரையின் மீது பேசலாமா, படிக்கலாமா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்களும் அப்படித்தான் செய்தீர்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்களும் அப்படித்தானே செய்தீர்கள், உட்காருங்கள்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** குறிப்பெடுத்துப் பேசுவது என்பது வேறு.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* நீங்கள் குறிப்பெடுத்துப் பேசினீர்களா, எழுதிப் படித்தீர்களா என்பது எனக்குத் தெரியாது.

*திரு. ஐ. கணேசன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவரும் குறிப்பெடுத்து வைத்துப் பேசுவதுபோல, நானும் பேசிக்கொண்டிருக்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

*திரு. ஐ. கணேசன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சிக்கு நெருக்கடியை அரிசி மூலம் கொண்டு வரலாம் என்று ஒரு சிலர் அரிசி விலையைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள், ஆண்டொன்றுக்கு ஆயிரம் கோடி ரூபாய் அரிசியினுடைய சுமையைத் தூக்கியது போதாது என்று, மத்திய அரசு அரிசி விலை ஏற்றப்படும் என்று சொன்னவுடனே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏழை மீதும், ஏழைத் தாய்மார்கள் மீதும் பற்றுள்ளம் கொண்டு, இயேசு சுமப்பது போல, அந்த 300 கோடி ரூபாயையும் சுமக்கத் தயார் என்று இந்தத் தமிழ்நாட்டிலே அறிவித்தார்களே, (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு அந்த ஏழையெளிய தமிழ் மக்கள், அந்தத் தாய்மார்கள் எத்தனை கோடி முறை நன்றி சொன்னாலும் தகும் என்பதனை நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 9-40

ரூ.3.75-க்கும், ரூ.3.50-க்கும் உள்ள வித்தியாசம், மூன்று கிலோ அரிசி 2.00 ரூபாய், பதினேழு கிலோ அரிசி ரூ.3.75, மொத்தம் இரண்டு பையிலே, மொத்தம் வாங்க வேண்டிய பணத்திலே, நாலணா, வெறும் 25 பைசாதான் வித்தியாசம் என்பதனை மறந்து, அரிசியிலே அரசியலை நடத்தியிருக்கிறார்கள். நடிகையிடம் சரணடைந்த போர்வழிகள், நியாயமான பிரதமர் வாஜ்பாயை நடிகன் என்று சொல்கிறார்கள். இந்தக் காமாலைக் கண்களுக்குக் காலம்தான் பதில் சொல்லும், காலம்தான் பதில் சொல்லும்.

பண்புள்ளம் கொண்ட கார்கில் காவலர் வாஜ்பாய் ஆட்சியில், எங்கேயாவது ஒரு மூலையிலே சிறுபான்மையின மக்கள் தாக்கப்பட்டிருக்கிறார்களா? எங்கேயாவது ஒரு மூலையிலே



சிறுபான்மையின மக்கள் தாக்கப்பட்டார்களா என்பதைச் சொல்லட்டும்.

சுதந்திர இந்தியாவிலே பதவியினாலே, அறிமுகப்படுத்தப் பட்டவர்கள் சூரியனுக்கே தார் பூசி அழிக்கப் பார்க்கிறார்கள். சூரியனுக்கே தார் பூசி அழிக்கப் பார்க்கிறார்கள். தங்கத் தாமரையைத் தாழ்த்திப் பேசுகின்றார்கள். தங்கத்தையே அடமானம் வைத்த சண்டாளர்கள் அவர்கள். ஆன்மீகத் தொண்டன் திருநீலகண்டனுக்கு வந்த ஒரு திருவோட்டுப் பிரச்சினைபோல, பாரதப் பிரதமர் வாஜ்பாய்க்கு ஒரே ஒரு ஓட்டுப் பிரச்சினையை உண்டுபண்ணி, ஏழை நாட்டில் ஓராண்டிலே தேர்தலைக் கொண்டு வந்து, இந்த நாட்டிற்கு இரண்டாயிரம் கோடி ரூபாயைத் தண்டச் செலவு வைத்த அவர்கள் சமூகப் பொறுப்பைப் பற்றி, நாட்டுப் பற்றைப் பற்றிப் பேசுகின்றார்கள். இதை எண்ணும்போது சிரிப்பதா, அழுவதா, இல்லை அழுதுகொண்டே சிரிப்பதா என்று எனக்குப் புரியவில்லை. (சிரிப்பு) பேரறிஞர் அண்ணாவின் தாரக மந்திரமான..

*டாக்டர் தே. குமாரதாஸ்:* அதாவது உங்களுக்குத் துதி பாடுவதிலே எங்களுக்கு ஆட்சேபம் இல்லை. ஆனால், த.மா.கா.வை மறைமுகமாகக் குத்துவதை நாங்கள் எதிர்க்கிறோம். (குறுக்கீடுகள்)

*திரு. க. மணிவர்மா:* சபாநாயகர் அவர்களே, 2006-லே பா.ம.க. ஆட்சி என்று அவருடைய தலைவர் சொல்கிறார். அந்தக் கொள்கையைப் பற்றிச் சொல்லட்டும்.

*திரு. சி. ஞானசேகரன்:* மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள் ...

*திரு. கே. சுப்பராயன்:* பேரவைத் தலைவர் அவர்களே, ...

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* எல்லோரும் கொஞ்சம் உட்காருங்கள். நான் எழுந்து நிற்கிறேன், எல்லோரும் உட்காருங்கள்.

*திரு. கே. சுப்பராயன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* நீங்களும் உட்காருங்கள். நான் நிற்கிறேன். அரசியல் ரீதியாக விமர்சனம் பண்ணுவதற்காகத் தான் இந்தச் சட்டமன்றம். நாடாளுமன்றத்திலே ஒரு ஓட்டினாலே

வாஜ்பாய் தோற்றார் என்பது ஒர் அரசியல் விமர்சனம். தனிப்பட்ட முறையிலே, யாரையும் லஞ்சம், ஊழல் என்று குற்றச்சாட்டு சொன்னது கிடையாது. ஆகையினாலே, அரசியல் விமர்சனம் தாங்கக்கூடாது என்று நீங்கள் எப்படிச் சொல்ல முடியும்?

**திரு. க. மணிவர்மா:** யார் தயவும் இல்லாமல் பா.ம.க. ஆட்சி என்று சொன்னார்கள். அதைப் பற்றிச் சொல்லட்டும். 2006-ல் ஆட்சி வரும் என்று சொல்கிறார்கள். அதைப் பற்றிச் சொல்லட்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணிவர்மா, நீங்கள் உட்காரப் போகிறீர்களா, இல்லையா?

**டாக்டர் தே. குமாரதாஸ்:** தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், பாரதிய ஜனதாவைக் கண்டித்து ஒரு கோடி கையெழுத்து இயக்கம் ஆரம்பித்தார்கள். முதல் கையெழுத்திட்டதே முதலமைச்சர் அவர்கள். இரண்டாவது கையெழுத்திட்டது எங்கள் தலைவர் மூப்பனார் ஐயா அவர்கள். நீங்கள் எங்களிடம் சொல்லாமல் இரவோடு இரவாகச் சென்று வாஜ்பாய்க்கு ஆதரவு அளித்தது எந்தவிதத்திலே நியாயம் என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்குப் பேச வாய்ப்புக் கிடைத்தபோது நீங்கள் கேட்டிருக்கலாம். இப்போது நீங்கள் அமைதியாக உட்காருங்கள். அரசியல் ரீதியான விமர்சனத்தை அனுமதிப்பேன். (குறுக்கீடு) இது அரசியல் ரீதியான விமர்சனம். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகரிகமுள்ள அவையில் சண்டாளர்கள் என்று மற்றவர்களைத் தனிப்பட்ட முறையில் பேசுவது என்ன நியாயம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனிப்பட்ட முறையிலே யாரையும் சொல்லவில்லை. நீங்கள் உட்காருங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** சண்டாளர்கள் என்று சொன்னது எங்களைக் குறிப்பிட்டது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களைக் குறிப்பிட்டதாக நீங்கள் நினைக்கக்கூடாது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அவர் எங்களைக் குறிப்பிடவில்லையென்று நீங்கள் ஒத்துக்கொண்டால் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்ன ஏற்றுக்கொள்வது? அவர் அரசியல் ரீதியாக விமர்சனம் பண்ணுகிறார். வார்த்தைகளைக் கொஞ்சம் தடித்தனமாக உபயோகிக்காமல் பேசுங்கள். (குறுக்கீடு) இப்போது உட்காருங்கள். கணேசன், நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுந்தரம் எழுப்பிய அதே point of order-ஐ எழுப்புகிறேன். இப்போது அவர் பேசுகின்றாரா? படிக்கின்றாரா? படிப்பதைப் பற்றி ஆட்சேபணை இல்லை.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்கிறேன், கொஞ்சம் தயவுசெய்து உட்காருங்கள். நீங்கள் கேட்பது நியாயமான கேள்வி. ஆனால் பெரும்பாலும் இங்கே நடப்பதே படிப்பதுதான். பல நேரங்களிலே துணை வினா கேட்கும்பொழுதுகூட, எழுதித்தான் படிக்கிறார்கள். எழுதிப் படிப்பது கூடாது என்பது மரபு. ஆகவே, முன்வரிசையிலே இருக்கிறவர்களாவது அதைப் பின்பற்ற வேண்டும். சுந்தரமும் கையிலே தாளை வைத்துக்கொண்டுதான் பேசுகிறார். ஆகையினாலே...

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுந்தரம் பேசுகிறாரா, ஐ. கணேசன் பேசுகிறாரா, வேறு எந்த உறுப்பினர் பேசுகிறார் என்பது பற்றி நான் கேள்வி கேட்கவில்லை. நான் தங்களிடமிருந்து ruling கேட்கிறேன். பார்த்துப் படிப்பது என்பது சரியான நடைமுறைதானா அவை விதிகளின்படி? அப்படி இல்லை என்றால், தாங்கள் இல்லை என்று சொல்ல வேண்டும் என்றுதான் நான் எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இதிலே என்ன புதிதாகக் கேள்வி கேட்கிறீர்கள்? (குறுக்கீடு) திரு. சுந்தரம்,

உட்காருங்கள். நான் அவர் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டும். நீங்கள் உட்காருங்கள். சுப்பராயனுக்கு ஏன் இந்த ஐயப்பாடு வந்தது என்றே எனக்குத் தெரியவில்லை. துணை வினா கேட்கும்போதுகூட எழுதிப் படிப்பதை நான் கண்டிக்கிறேன். நிச்சயமாக எழுதிப் படிக்கக் கூடாது. யாராக இருந்தாலும் எழுதிப் படிக்கக் கூடாது. அதிலும் குறிப்பாக முன்வரிசையிலே இருப்பவர்கள் எழுதிப் படிக்கக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன் எழுதிப் படிக்காமல் அப்படியே சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மனப்பாடம் செய்து படிப்பதானால் படிக்கட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது சரி. நீங்கள் சொல்வதை ஏற்றுக்கொள்கிறேன். ஐ. கணேசன், நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர்களும் பார்த்துப் படிக்கக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் என்ன சொல்கிறேன் என்றால், முன் வரிசையிலே யாரும், முதலமைச்சராக இருந்தாலும் கூட, எழுதிப் படிப்பது தவறு. அதெல்லாம் இந்த அவையிலே முன்னால் நடந்திருக்கிறது, எனக்குத் தெரியும். அது தவறு; அதைப் பின்பற்றக் கூடாது. திரு. ஐ. கணேசன், நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) வேலாயுதன், நீங்கள் உட்காருங்கள். ஐ. கணேசன், நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள். உங்களுடைய ஆற்றலுக்கு, எழுதிப் படிக்கிற குற்றச்சாட்டுக்கு நீங்கள் ஆளாகக் கூடாது. நன்றாக, அருமையாகப் பேசுகிறீர்கள். (சிரிப்பு) சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டினுடைய நிலைமையை ஆணித்தரமாக, புள்ளிவிவரமாக வரிசைப்படி எடுத்துச் சொல்வதற்குக் குறிப்புகள் வைத்துக்கொள்வதில் ஒன்றும் தவறில்லை. ஏதாவது ஒன்று சொல்லவேண்டும் என்பதற்காக இடையிலே புகுந்து ...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிலே நான் ruling கொடுத்துவிட்டேன். அதைப் பற்றி நீங்கள் திரும்பப் பேசக் கூடாது. (குறுக்கீடு) நான் ruling கொடுத்ததிலே நீங்கள் பேசக் கூடாது. சீக்கிரம் உங்கள் பேச்சை முடியுங்கள். நான் அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்கப் போகிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** நன்றி. பேரறிஞர் அண்ணாவின் தாரக மந்திரமான 'மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு' என்ற வாசகம், பொய்யாகப் போனதாகச் சரித்திரம் இல்லை. அது ஒரு நாளும் பொய்யாகப் போகாது. மூன்று என்ற சொல்லுக்குப் பல நூறு அர்த்தங்களைச் சொன்னவர் நம்முடைய முத்தமிழ் அறிஞர், முதல்வர் கலைஞர் ஆவார். முக்கனி, முத்தமிழ், மூவேந்தர், முப்பால் என்று வரிசைப்படுத்தி, அதையே பேரறிஞர் அண்ணா அவர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று தாரக மந்திரங்களை எடுத்துரைத்தார். மூன்று என்ற சொல், நம்முடைய முதல்வருக்கு மிக, மிக ராசியான ஒரு சொல். மூன்று - உங்கள் நண்பர், 40 ஆண்டு கால நண்பர் -- புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வாயசைத்துப் பாடிய பாடலில்

'மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும்'

என்ற ஒரு பாடல், அது அப்படியே உங்களுக்குப் பலித்துவிட்டது. கலைஞரே, அது அப்படியே உங்களுக்குப் பலித்துவிட்டது. மூன்று இடங்களுக்கு பெருவாரியான வாக்குகளை அளித்த பொது மக்களுக்கு, (மேசையைத் தட்டும் ஒலி) வாக்காள தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு நன்றி, நன்றி, நன்றி என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகச் சொல்லிக்கொண்டு, தருமபுரியிலே தர்மத்தைக் கொளுத்தினால், அறந்தாங்கியிலே அது பழிவாங்கும் என்பதை உலகம் அறிந்து கொண்டிருக்கிறது. மக்கள் மட்டும் ஏமாந்து போய் இருந்தால், சாதாரண ஏழை மக்கள் ஒரு மூக்குத்தி வாங்கக்கூட நகைக் கடையில் தங்கம் இல்லாமல் அனைத்தும் ஒட்டியாணமாக ஆகி இருக்கும், (சிரிப்பு) அனைத்தும் ஒட்டியாணமாக ஆகியிருக்கும் என்பதனை இந்த நேரத்தில் சொல்லிக்கொண்டு ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

முற்பகல் 9-50

**திரு. ஐ. கணேசன்:** தலைவர் அவர்களே, கொஞ்சம் பொறுங்கள். பழனிசாமி அண்ணனுக்குப் பிடிக்கும். போயஸ் தோட்டத்திலே மாடுகள் பால் கறக்கவில்லை என்றால்கூட தி.மு.க., ஆட்சி உடனே விலகவேண்டும் என்று தினம், தினம் அறிப்பெடுத்து அறிக்கை விடுகிறார்கள். மாடுகள் பால் கறக்க வேண்டுமானால் புல்லும், வைக்கோலும், பருத்திக் கொட்டையும், புண்ணாக்கும் வைக்க வேண்டும். ஆனால், அவர்கள் தங்கத்தையும் வைரத்தையும் வெள்ளித் தொட்டியிலே வைத்து, மாடு பால் கறக்க வேண்டுமென்றால், அது எப்படிக் கறக்கும் என்று நாட்டு மக்கள் நன்றாகப் புரிந்து கொண்டுவிட்டார்கள். ஆனால், இந்த அவையிலே உள்ளவர்கள் கல்யாணம் ஆகாத பெண்களைப் போல ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முறையாகப் பேசி, சீக்கிரம் உங்கள் பேச்சை முடியுங்கள்.

**திரு. ஐ.கணேசன்:** இந்த அவையிலே உள்ளவர்கள், கல்யாணம் ஆகாத பெண்கள் 'ஸ்ரீராமஜெயம்' எழுதுவது போல 'ராஜிநாமா செய், ராஜிநாமா செய், ராஜிநாமா செய், ராஜிநாமா செய்' என்று அடிக்கடி அறிப்பு எடுத்தவர் போலச் சொல்வது தர்மமா, நீதியா, நியாயமா? தலைவர் அவர்களே, நீங்களே இதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னைப் போய் சிக்க வைக்காதீர்கள்.

**திரு. ஐ. கணேசன்:** தலைவர் அவர்களே, நீதிதேவன் கண் திறந்து விட்டான். மக்கள் அதைத் தெரிந்துகொண்டு விட்டார்கள் என்பதனை இந்த மாமன்றத்தின் மூலமாக உங்களுக்கு மிக அழகாக நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள், நான்காவது முறையாக முதலமைச்சர் பொறுப்பேற்ற பிறகு, இந்த நாட்டிலே எத்தனையோ பல சாதனைகளைச் செய்து காட்டினார்கள். உதாரணமாக, ஒரு குண்டூசி தயாரிப்பவன் கூட தன்னுடைய பொருளுக்கு ஒரு நிர்ணய விலை வைக்கும்போது 10 மாதம் படாத பாடுபட்டு, தான் உற்பத்தி



செய்யக்கூடிய விளை பொருளுக்கு விலையை நிர்ணயிக்க முடியாத விவசாயிகள், கிட்டத்தட்ட இந்த நாட்டிலே பல கோடி விவசாயிகள் எண்ணி கண்ணீர் வடித்தார்கள். புரோக்கர்களும், லஞ்ச லாவண்யம் மிக்கவர்களும், வியாபாரிகளும்தான் விலைகளை வைக்கிறார்கள். இதை மாற்ற எங்களுடைய டாக்டர் ராமதாஸ் ஐயா அவர்கள் பலமுறை பேசியிருக்கிறார்கள். விவசாயி உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு அந்த விவசாயியே விலை நிர்ணயிக்க வேண்டுமென்று பலமுறை சொல்லியிருக்கிறார்கள். இதைத் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அத்தனை விவசாயிகளும் சொன்னார்கள். தலைவர் அவர்களே, அந்த உழவர் சந்தைகள் மூலம் விவசாயிகளுடைய கண்ணீரைப் போக்கிய உத்தமர் நம்முடைய முதல்வர் அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) கலைஞர் அவர்கள் என்று நாட்டில் இருக்கக்கூடிய கோடானுகோடி விவசாயப் பெருங்குடி மக்கள் பாராட்டுகிறார்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** Point of clarification. பேரவைத் தலைவர் அவர்களே, விளை பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்வது பற்றி மாண்புமிகு பா.ம.க. உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் பேசினார்கள். நான் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புவது, பாட்டாளி மக்கள் கட்சி மத்தியில் நாடாளுகின்ற ஒரு கட்சி. விவசாயிகளின் விளை பொருளுக்கு விலையை நிர்ணயிக்கிற அதிகாரம் படைத்தது, மத்திய அரசு. மத்திய அரசாங்கம் இந்திய நாடு முழுவதும் விவசாயிகளுக்கு விலையை நிர்ணயம் செய்கிற முறையில் நடவடிக்கை எடுக்க பாட்டாளி மக்கள் கட்சி முன்வருமா? அப்படி மத்திய அரசு விவசாயிகளுக்கு விலை நிர்ணயம் செய்யவில்லை என்றால், மத்திய அரசிலிருந்து ராஜிநாமா செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சொன்னது, உழவர் சந்தைகள் மூலமாக விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கக்கூடிய ஒரு திட்டத்தை முதலமைச்சர் அறிமுகப்படுத்தினார் என்று பாராட்டினார். திரு. கணேசன், நீங்கள் சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு)

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு அமைச்சர் கேள்விக்குப் பதில் சொல்லிக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது ரொம்ப சர்வசாதாரணம்தான் சட்டமன்றத்திலே. திரு. கணேசன், நீங்கள் சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னை உணர்ந்தவன் மற்றவனை உணர்வான் என்று சொல்வார்கள். நம்முடைய அருமை நண்பர், எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த முன்னால் ஒற்றுமையாக இருந்த மாவட்டத்தைச் சேர்ந்த சுந்தரத்திற்கு வரிக்கு வரி, எழுத்துக்கு எழுத்து தூபமூட்ட நம்முடைய சுப்பராயன் கூறுவதா? (சிரிப்பு)

**திரு. கே. சுப்பராயன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே இரண்டு விஷயங்கள் பிரச்சினையாகிவிடும். ஒன்று ** (சிரிப்பு) நான்தான் ஏதோ சொல்லிக் கொடுப்பதாகிறது. இது ஒரு விஷயம். (சிரிப்பு) பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது விஷயம், நான் ஏதோ அவரை lead செய்து கொண்டிருப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார். இதை அவர் நிரூபிக்க வேண்டும். இல்லையென்றால், அவர் அதை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள், சுந்தரத்திற்கு நல்ல நண்பர். பல நேரங்களிலே வழிகாட்டி என்பது எனக்கே தெரியும்.

**திரு. கே. சுப்பராயன்:** தலைவர் அவர்களே, நல்ல நண்பர்தான். நல்ல விஷயங்களுக்கு வழிகாட்டலாம். எல்லா விஷயங்களுக்கும் வழிகாட்ட முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், பேசி முடியுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** சுப்பராயன் அவர்கள், சுந்தரத்தைப் பற்றிக் கூறிய இரண்டு கருத்துக்களை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். ** என்று கூறியது உட்பட.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரத்திற்கு எல்லாம் தெரியும் என்று நான் தீர்ப்பு கூறுகிறேன்.(குறுக்கீடு) சரி, எடுத்து விடுகிறேன். அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடலாம். திரு. கணேசன், நீங்கள் பேசிக்கொண்டே இருக்காதீர்கள், முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** தொகுதியைப் பற்றி மட்டும் பேசுகிறேன். வேறு எதுவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொகுதியைப் பற்றி முதலிலேயே பேசியிருக்கலாம்.

**திரு. ஐ. கணேசன்:** இவ்வளவு serious-ஆக போகக்கூடாது. இத்தனை இடர்பாடுகளுக்கு மத்தியிலே நம்முடைய முதல்வருக்கு, தாயுள்ளம் கொண்டவருக்கு, தர்ம தேவதை குடியிருக்கும் அந்த நெஞ்சத்திற்கு என்னுடைய எடப்பாடி தொகுதியினைப் பற்றி ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) இருக்கிறது. நாங்கள் என்ன chit-ஆ நீட்டுகிறோம்? எனது தொகுதியிலே கொங்கணாபுரத்திலே டி.சி.எம்.எஸ். சொசைட்டியைப் பிரிக்க வேண்டும். நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் முதல்வர் ஒப்புதலோடு, இந்த ஆண்டு பிரிக்கப்படும் என்று; அமைச்சர் புன்னகையோடு தலையாட்டுகிறார் ; நிச்சயமாகப் பிரிக்க வேண்டும். அது தனிச் சங்கமாக ஆக்கப்படுவதுதான் தர்மம் என்பதனைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற நிதியாண்டிலே எடப்பாடி பேருந்து நிலையத்திற்கு அருகிலே பாலம் கட்டுவதற்கு tender விடப்பட்டது. ஆனால், இன்னும் வேலை தொடங்கப்பட வில்லை. உடனடியாக அந்த வேலையைத் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போது, நம்முடைய முதல்வர் அவர்களிடத்திலே மிக முக்கியமான விஷயம்.

(மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையிலிருந்து வெளியே செல்ல முனைந்தவர், உறுப்பினர் பேசியதைக் கேட்டுவிட்டு, திரும்பி வந்து அமர்ந்தார்)

மன்னித்துக்கொள்ளுங்கள். முதலமைச்சர் அவர்கள் எழுந்து போவதை நான் பார்க்கவில்லை. சிரமம் கொடுத்துவிட்டேன். என்னுடைய தொகுதி மக்களுடைய வேண்டுகோள், 4 ஆண்டு காலம் ஆகிவிட்டது. எடப்பாடியில் தாலுகா அலுவலகத்திற்கு நீங்கள் அனுமதி அளித்து. அதற்கு அரசுக் கட்டடம் இதுவரை கட்டப்படவில்லை. சபாநாயகருடைய அறையிலே நான் உங்களிடத்திலே எடுத்துச் சொன்னேன். வீட்டு வசதி வாரியத்தின் மூலம் சுமார் 400 எக்கர் கையகப்படுத்தி, 50, 60 ஏக்கரில்தான் வீடுகள் கட்டி, 360 ஏக்கருக்கு மேலே சும்மா இருக்கிறது. அந்த இடம், ஒரு தாலுகா அலுவலகம், ஒரு கருவூலம் மற்றும் தாலுகா அலுவலகத்தில் பணியாற்றக் கூடியவர்களுக்குக் குடியிருப்பு முதலியவை அனைத்தும் கட்டுவதற்குத் தகுதியான இடம்; காவிரி குடிநீர் செல்லக்கூடிய இடம்; பேருந்து போக்குவரத்து இருக்கக்கூடிய இடம். அந்த இடத்திலேயே அரசு அலுவலகங்கள், தீயணைப்பு நிலையம் உட்பட அத்தனையையும் கட்டித் தரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

தமிழ்நாட்டில் மிகவும் மோசமான ஒரு நகராட்சி எது என்றால், அது எடப்பாடி நகராட்சிதான். அங்கு பாதைகள் மிக மிக மோசமாக இருக்கின்றன. நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் என் மேல் கருணை வைத்து ஒரு முறை என்னுடைய தொகுதிக்கு வந்து, அந்தச் சாலைகளை எல்லாம் பார்க்க வேண்டும் என்று பலமுறை அழைத்திருக்கிறேன். அவர் என் வரவில்லை என்று தெரியவில்லை. இந்த ஆண்டாவது அவர் வந்து அந்தச் சாலைகளை எல்லாம் பார்க்க வேண்டும் என்பதனைச் சொல்லி அனைத்துச் சாலைகளையும் செப்பனிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய பேரவைத் தலைவருடைய நெருங்கிய நண்பர், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பணிவான வேண்டுகோள். எடப்பாடி நகரைச் சுற்றி 13 சாலைகள் இருக்கின்றன. அத்தனையும் bus route. அத்தனையும் அரசாங்க சாலைகள். ஒரு சாலை கூட சரியில்லை தலைவா. ஒரே ஒரு சாலைகூடச் சரியில்லை. குண்டும் குழியுமாக இருக்கின்றன. கிராமத்திலே புதிது புதிதாக சாலை போடுவதற்கு உள்ளாட்சித் துறை அமைச்சர் அனுமதித்து இருக்கிறார். ஆனால், பழைய bus route எல்லாம் அப்படியே குண்டும்குழியுமாக இருக்கின்றன. தயவு செய்து அவற்றின் மீது



கண்ணும்கருத்தும் வைத்து அடுத்த முறை நான் பட்ஜெட்டிலே பேசும்போது உங்களை எல்லாம் வாயாரப் புகழக்கூடிய அளவிற்கு அந்த 13-ல் 10 சாலைகளையாவது போட்டுக் கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டு எனக்கு இந்த வாய்ப்பினை அளித்த சபை நாயகர் அவர்களுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

முற்பகல் 10-00

நம்முடைய முத்தமிழ்க் காவலர் டாக்டர் கலைஞர் இன்று போல் என்றும் பல்லாண்டு பல்லாண்டு, பல நூறு கோடி ஆண்டு உடல் நலத்தோடு வாழ வேண்டும், தமிழ்நாட்டிலே மீண்டும் ஐந்தாவது முறையாக முதலமைச்சராக ஆக வேண்டுமென்று கூறி, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி, நன்றி, நன்றி.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய நடுநிலைமையை நான் சந்தேகிக்க விரும்பவில்லை. நீங்கள் நடுநிலைமையாளர்தான். அருமை நண்பர் கணேசன் அவர்கள், 30 நமிடம் பேசியிருக்கின்றார்கள். அதிலே எனக்கு எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இல்லை. எங்களுக்கும் அதேபோல, இனிமேல் அவருக்குக் கொடுத்தபடி 30 நிமிடங்கள் இல்லை என்றாலும் 25 நிமிடங்கள் நீங்கள் ஒதுக்கித் தரவேண்டு மென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்றைக்கு 20 நிமிடங்கள் கொடுத்தேன். நீங்கள் உட்காருங்கள்.

திரு. பி.ஆர். சுந்தரம்: இல்லை. 19 நிமிடங்கள்தான் கொடுத்தீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது நீங்களாக முடித்துக்கொண்டது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஆகவே, தயவுசெய்து இதை உங்களிடம் ஒரு கோரிக்கையாக வைக்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, கணேசன், நீங்கள் அதெல்லாம் ஒன்றும் பேசக் கூடாது. (குறுக்கீடு) இல்லை, நீங்கள் அதெல்லாம் ஒன்றும் சொல்லக் கூடாது

**திரு. ஐ. கணேசன்:** தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, நீங்கள் அதெல்லாம் ஒன்றும் சொல்லக் கூடாது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஐ. கணேசன்:** என்ன இது? உரையாற்றத் தொடங்கினால் படிக்கிறேன் என்று சொல்கிறார்கள். பேசினால் அதிக நேரம் பேசிவிட்டேன் என்று சொல்கிறார்கள், என்ன செய்வது?

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரை மீது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துகளைச் சொல்ல நான் விழைகின்றேன். ஆளுகிற கட்சியின் சார்பாக வருகிற ஆண்டில் மக்களுக்குச் செய்யக்கூடிய திட்டங்களைக் கொள்கை அளவிலே அரசால் வைக்கப்பட்டிருக்கிற இந்த ஆளுநர் உரை மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகச் சில கருத்துகளைச் சொல்ல நான் விழைகின்றேன்.

தமிழக அரசு நல்ல பல திட்டங்களை இதிலே உருவாக்கியிருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, தாய்மொழி கட்டாய மொழியாக 1 முதல் 5-வது வகுப்புவரை, பயிற்சி மொழியாக ஆக்க வேண்டும் என்று கொண்டு வந்திருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது, பாராட்டுகிறது. தாய்மொழி கட்டாயமாக ஆட்சி மொழி ஆக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்துவது என்பதற்காக, மாநில அரசு எடுத்திருக்கிற இந்த நல்ல முயற்சியை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது, பாராட்டுகிறது.

அதே நேரத்தில், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொண்ட ஒரு சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி என்பதை வலியுறுத்துவதற்காகத் தொடர்ந்து மாநில அரசு மேற்கொண்டிருக்கிற அந்தக் கொள்கை நிலையிலேயிருந்து, அதாவது மத்தியிலே குவிந்திருக்கிற அரசு அதிகாரங்களை மாநில அரசுக்கு வழங்க வேண்டுமென்பதிலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உங்களோடு சேர்ந்து தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. ஆனால் மத்தியிலே ஒரு கூட்டாட்சி, மாநிலத்திலே தனியாட்சி மத்தியிலே அந்தக் கூட்டாட்சியிலே இடம் பெற்று ,மத்தியிலே இருக்கக்கூடிய ஆட்சியாளர்கள் கொண்டு வருகிற



மக்கள் விரோதக் கொள்கைகளுக்கும் மக்கள் விரோதச் சட்டங்களுக்கும் கூட்டாட்சியிலே இடம் பெற்றிருக்கிற கட்சிகள் தங்கள் கொள்கையிலேயிருந்து விலகி விடக் கூடாது என்பது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய ஆழமான, வலுவான கருத்து.

பாரதிய ஜனதா கட்சி மத்தியிலே ஆட்சிப் பொறுப்பிற்கு வந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட பல்வேறு கட்சிகள் மத்தியிலே அந்த ஆட்சியிலே இடம் பெற்றிருக்கின்றன. அதிகாரம் பெற்றிருக்கிற ஆட்சியிலே இடம் பெற்றிருக்கிற கட்சி, மத்தியிலே இருக்கக்கூடிய ஆட்சி கொண்டு வரக் கூடிய சட்டங்களில் அல்லது மக்கள் விரோதக் கொள்கைகளில் தனக்குச் சம்பந்தம் இல்லை என்று மாநில அரசினர் ஒரு போதும் தட்டிக் கழிக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். அதிலே நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் உறுதியாக இருப்பார்கள். தொடர்ச்சியாக இருந்த நேரு அவர்களுடைய கொள்கைக்கு பாதகமான மக்கள் விரோதக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு பாரதிய ஜனதாவினுடைய மத்திய அரசு முயற்சி மேற்கொண்டிருக்கிறது. பொதுத் துறைகளைத் தனியாருக்குத் தாரை வார்க்கின்ற பணிகளைச் செய்வதில் மிக வேகமாக, இன்னும் சொல்லப்போனால் Internet வேகத்திலே இன்றைய தினத்திலே அது போய்க் கொண்டிருக்கிறது. அவ்வளவு வேகமாகத் தனியார் துறைகளாக ஆக்க வேண்டுமென்று பொதுத் துறைகளை அவ்வளவு வேகத்திலே கொண்டு போகிறார்கள். அதிலே அந்த அமைச்சரவையில் இருக்கிற நமது மாநில அரசு கொள்கை நிலையிலே என்ன சொல்லப் போகிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரையிலே நான் எதிர்பார்க்கிறேன். இப்போது எதை எடுத்துக்கொண்டாலும், தொலைபேசியா, தனியாருக்கு விற்பது, விமான தளமா, தனியாருக்கு விடுவது, வங்கிகளைத் தனியாருக்குத் தாரை வார்ப்பது, பொதுத் துறை ஆலைகளைத் தனியாருக்குத் தாரை வார்ப்பது, விவசாயிகள் பயன்படுத்துகிற உரங்களின் விலைகளை உயர்த்துவது, அரிசி விலையை உயர்த்துவது...

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களை அனுமதிக்க முடியாது. திரு. ஜி. பழனிசாமி, பேசுங்கள்.

*திரு. ஜி. பழனிசாமி:* தலைவர் அவர்களே, மண்ணெண்ணெய் விலையை உயர்த்துவது, டீசல் விலையை உயர்த்துவது என்று செய்கிறார்கள். இதிலே, அந்த அமைச்சரவை யிலே இடம் பெற்றிருக்கிற மாநில அரசு, மத்தியிலே அந்தக் கூட்டாட்சியிலே இடம் பெற்றிருக்கிற அரசு இதற்கு என்ன காரணம் சொல்லப்போகிறது என்பதை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

முற்பகல் 10-05

இன்னும் ஒன்று. மாநில அரசு, மத்திய அரசு உயர்த்தியிருக்கிற அரிசி விலையை மட்டும், 300 கோடி ரூபாயை, அந்த பாரத்தை நாங்கள் சுமக்கிறோம் என்று மட்டும் சொல்லி, மற்றவற்றை நீங்கள் தட்டிக் கழிக்கமாட்டீர்கள் என்று நான் எதிர்பார்க்கின்றேன். ஏனென்றால், மத்தியிலே இருக்கக்கூடிய ஆட்சி இதைப்பற்றியும், மக்களைப்பற்றியும் கவலைப்படவில்லை. ஆக, ஆட்சியிலே இருப்பவர்கள் இதையெல்லாம் தனியாருக்குத் தாரை வார்க்கலாம் என்ற முறையில் பெரும் முதலாளிகளைப் பாதுகாக்கின்ற ஓர் அரசாக இருக்கிறதே தவிர, சாதாரண மக்களை, ஏழையெளிய மக்களை, உழைக்கிற மக்களை, ஆசிரியர்களை, அரசு ஊழியர்களை பாதுகாக்கின்ற அரசாக அது இல்லை. ஆகவே, அப்படிப்பட்ட ஓர் அரசுக்கு, இந்த அரசு என்ன சொல்லப் போகிறது என்று நான் எதிர்பார்க்கின்றேன்.

விவசாயிகள் படுகிற வேதனை. எந்தவொரு ஆட்சியிலும் இல்லாத அளவிற்கு, 450 விவசாயிகள் செத்து மடிந்திருக்கிற, தற்கொலை செய்து கொண்டிருக்கிற நிலை இருக்கிறது. நம்முடைய தேசத்தில் யூரியா விலை உயர்ந்திருக்கிறது. யூரியா விலையுயர் வினால் சாதாரண விவசாயிகள் பெரிய அளவிற்குப் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். இதற்கு மத்திய, மாநில அரசுகளுக்கு பொறுப்பு உண்டா, பொறுப்பு இல்லையா என்பதை அவர்கள் விளக்க வேண்டும்.

அதேபோன்று, அரிசி விலை ரூ.3.50. 1,300 கோடி ரூபாய் நம்முடைய மாநில அரசு ஏற்றுக்கொள்கிறது. ஆனால், ரூ.3.50க்கு விற்கக்கூடிய அரிசி ரூ.5.85 ஆக உயர்ந்திருக்கிறது. இதை மத்திய அரசு கொண்டு வந்திருக்கிறது.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, இதே அவையிலே சொன்னார்கள். நாங்கள் எல்லாம் பேருந்துக் கட்டணத்தைப்பற்றிக் கேட்டபோது, மாண்புமிகு மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்கள் நாங்கள் பேருந்துக் கட்டணத்தை 2001 ஆம் ஆண்டு வரையிலேயும் உயர்த்தமாட்டோம் என்று சொன்னார்கள். அதற்குப் பின்னால் மத்தியிலே வந்திருக்கிற பாரதிய ஜனதா ஆட்சி - டீசல் விலையை உயர்த்தியதற்குப் பின்னாலும் - மத்தியிலே இருக்கிற ஆட்சி டீசல் விலையை உயர்த்தியது. ஆகையினால், பெரும் சுமையை மாநில அரசு ஏற்றுக்கொள்ள முடியாது, எனவே, பேருந்துக் கட்டணத்தை உயர்த்த வேண்டிய அவசியம் எங்களுக்கு வந்திருக்கிறது என்று சொன்னீர்கள். ஆக, இதுபோன்று படிப்படியாக மத்திய அரசு கொண்டு வந்திருக்கிற விலைவாசியை மாநில அரசு முழுமையாக ஏற்றுக்கொள்ளப் போகிறதா, உயர்த்தப் போகிறீர்களா என்பதைத் தாங்கள் விளக்க வேண்டும்.

சாதாரண, இடைப்பட்ட மக்கள், Gas வைத்திருக்கக் கூடியவர்களுக்கு விலை உயர்ந்திருக்கிறது. Gas வைத்திருந்தால் மண்ணெண்ணெய் கிடையாது என்று சொல்லக்கூடிய அபாயம் வந்திருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட ஒரு நிலையிலேயிருந்து நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இரண்டாவதாக, 69 சதவிகித இட ஒதுக்கீட்டை நாங்கள் அமல்படுத்துவோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதியோடு இருப்பவர்கள், தொடர்ந்து வலியுறுத்தி வந்தவர்கள். ஆனால் 69 சதவிகித இட ஒதுக்கீடு சம்பந்தமாக ஓர் அரசினுடைய கொள்கை நிலையைக் குறிப்பிடாமல் இருப்பதற்கு என்ன காரணம்? தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட மக்கள் அந்த நிலையிலிருந்து உங்களிடம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்களே, அதற்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள் என்று நான் கேட்கிறேன்.

இதைவிட இன்னொன்று. நான் உங்களுக்குச் சொல்வது என்பதை எங்களுடைய பிரதான கடமையாகக் கருதுகின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் என்ன நிலை வந்திருக்கிறது, என்ன ஒரு வருத்தமான சம்பவம்? அநேகமாக, கர்நாடகா ஜூன் மாதம் முதல்

செப்டம்பர் மாதம் வரை 135 T.M.C. ft. தண்ணீர் வழங்க வேண்டும். ஆனால் சென்ற ஆண்டு 1999 ஆம் ஆண்டு, 85 T.M.C. ft. தண்ணீர்தான் வழங்கியிருக்கிறார்கள். ஆனால், நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் என்ன சொல்கிறார்? ** ஆனால், அங்கே இருக்கக்கூடிய கர்நாடகத்தினுடைய நிலை என்ன தெரியுமா? ஏதோ அங்கே மிதமிஞ்சிய அளவில் overflow ஆகிய தண்ணீரை தமிழ்நாட்டுக்கு வருகிறபோது ஒரு கணக்கு எடுக்கிற அரசாகவும், துறையாகவும் பொதுப் பணித் துறை இருக்கிறது. ஆக, நம்முடைய உரிமையை இடைக்காலத் தீர்ப்பில் கொடுத்திருக்கிற 205 T.M.C. ft. தண்ணீரைப் பெறுவதற்கு, மாதந்தோறும் பெறுவதற்கு, மாறாக அவர்கள் தேவையில்லையென்று அனுப்பக்கூடிய தண்ணீரை மட்டும் நாம் கணக்கு எடுக்கின்ற ஒரு சூழ்நிலை தமிழ்நாட்டிலே வந்திருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலேதான் நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ...

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இடைக்காலத் தீர்ப்பின் அடிப்படையில் நமக்குத் தரவேண்டிய 205 T.M.C. ft. தண்ணீர் இந்த ஆண்டு நமக்கு வரவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி கருதுகிறாரா?

**திரு. ஜி. பழனிசாமி:** வரவில்லை.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, ** நான் தரத் தயாராக இருக்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** கொடுங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** இரண்டே இரண்டு மாதத்திலேதான் அவர்கள் தர வேண்டிய அளவைவிட குறைவாகத் தண்ணீர் வந்திருக்கிறது. இரண்டாவது, இன்னொன்றைச் சொல்கிறேன். மழைத் தண்ணீர் வந்தது, மழைத் தண்ணீர் வந்தது என்று சொல்கிறார். எந்தத் தண்ணீராக இருந்தாலும் மழை மூலமாகத்தான் தண்ணீர் வரும். கபினியிலே வருவதும் மழைத் தண்ணீர்தான்; காவிரியிலே வருவதும் மழைத் தண்ணீர்தான். மழை இல்லாவிட்டால் எந்த நதியிலும் தண்ணீர் வராது.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது



முற்பகல் 10-10

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** மாண்புமிகு உறுப்பினர் தீரன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, காவிரி நதி நீர் சம்பந்தமாக, அதனுடைய நடவடிக்கைகளைப்பற்றி வெள்ளை அறிக்கை ஒன்றை இந்த அவையில் வையுங்கள். பாரதப் பிரதமரோடு நான்கு மாநில முதலமைச்சர்களும் உட்கார்ந்து பேசி எடுக்கப்பட்ட முடிவுகளை, ஓர் ஆண்டுக்கு நான்கு முறை கூடிப் பேசி, அதிலே தீர்வு காண்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளை, அதிலே என்னென்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம் என்பதையெல்லாம், இந்தக் கூட்டத்தில்கூட அல்ல, வரவு-செலவுக் கூட்டத் தொடரில்கூட இந்த அவையில் வெள்ளை அறிக்கையாகச் சமர்ப்பியுங்கள். இதிலே என்னவென்றால், கர்நாடகத்திற்குத் தேவையில்லை என்ற வகையில், உபரி தண்ணீர்தான் நமக்கு அனுப்பப்பட்டு, அதுதான் கணக்கெடுப்பில் வந்திருக்கிறதே தவிர, மாதந்தோறும் வழங்கப்பட வேண்டிய தண்ணீரை மாதந்தோறும் அவர்கள் வழங்கவில்லை என்பதை நான் உறுதியாகச் சொல்கிறேன். அதில் மாறுபட்ட எந்தக் குறிப்பைச் சொன்னாலும் அதை எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மன்னிக்க வேண்டும். காவிரியைப்பற்றித் தெரிந்த திரு. பழனிசாமி அவர்களே ஒரு தவறான தகவலை இந்த அவைக்குத் தரக் கூடாது. சென்ற ஆண்டில் ஜூன் மாதம் 10.76 T.M.C. ft. தண்ணீர் வர வேண்டும். அது வந்திருக்கிறது. ஜூலை மாதத்திலும் இன்னொரு மாதத்திலும் மட்டும்தான் நமக்குக் குறைவாக வந்திருக்கிறது. ஆனால் ஒட்டுமொத்தமாக நாம் பார்க்கும்போது ** அதுபற்றி அறிக்கை வைப்பதற்கும், எந்த விவாதத்திற்கும் இந்த அரசு தயாராக இருக்கிறது. கஷ்டம் என்றால் கஷ்டம் என்று சொல்கிறோம். முடியவில்லை என்றால் முடியவில்லை என்று சொல்கிறோம். முடிந்ததை முடிந்தது என்று சொல்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்தை ஏற்றுக்கொள்ளலாம். நான் பேசுகிறபோதும் அந்தச் செய்தியைக் குறிப்பிட்டுச் சொன்னேன். காவிரி நீர் ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் அந்தத் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது என்பதற்கு, கர்நாடக அரசுக்கும் தமிழ்நாடு அரசுக்கும் அதிகார பூர்வமான அறிவிப்பின் மூலமாகத் தண்ணீர் வந்திருக்கிறதா என்று சொல்கிற செய்தியோடு, இன்னொன்றையும் நான் கேட்க விரும்புவது, நடுவர் மன்றம் அமைத்து, அதன் தீர்ப்புகளை நிறைவேற்றுவது பற்றிய முயற்சிகளைப் பற்றியோ அதைப் பற்றிய கருத்துகளைப் பற்றியோ இல்லாதபோது, இங்கே ஏற்கெனவே பத்திரிகையில் வந்த செய்தியைப் பொறுத்தவரையில், அது என்னவென்றால், அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் அவர்கள் காவிரியில் தண்ணீர் விட்டிருப்பார்கள் போல் தெரிகிறது என்று பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய செய்தி , எல்லா பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, தண்ணீரை மாதாமாதம், வாராவாரம் இவ்வளவு திறந்துவிட வேண்டுமென்று சொன்னார்கள். நாம் ஒட்டுமொத்தமாக மாதக் கணக்கை வைத்துப் பார்க்கிறோம். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் சொல்வது என்னவென்றால், ஒப்பந்தப்படிதான், அந்தத் தண்ணீர் திறக்கப்பட்டதா என்று கேட்கிறார்கள். இனிவேண்டுமானால், அப்படித் தண்ணீர் திறக்கிறபோது, தண்டோரா போடச் சொல்லலாம். ஒப்பந்தப்படிதான் தண்ணீர் திறக்கப்படுகிறது என்று வேண்டு மானால் தண்டோரா போடச் சொல்லலாம். ஒட்டுமொத்தமாக இந்த மாதம் இவ்வளவு தண்ணீர் வரவேண்டுமென்றால் — 70 T.M.C.ft. தண்ணீர் வரவேண்டும் என்றால் அது வந்திருக்கிறதா இல்லையா என்பதைத்தான் கணக்கிட வேண்டுமே தவிர, அந்த ஒப்பந்தப்படிதான் தண்ணீர் வரவேண்டும் என்றால் black-ல்கூட தண்ணீர் வருமோ? ஒப்பந்தப்படிதான் வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.



திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழை பெய்தால்தான் தண்ணீர் வருகிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான் என்றாலும்கூட, நமக்குத் தண்ணீர் தரக்கூடிய அந்த ஒப்பந்தத்திற்குப் பின்னாலும் தண்ணீர் தரக்கூடிய பிரச்சினையில், கர்நாடக மாநிலத்தினுடைய பாசனத் துறை அமைச்சர் அவர்களும், கர்நாடக மாநிலத்தில் இருந்த முன்னாள் முதல்வர் அவர்களும் என்ன சொன்னார்கள் என்றால், இன்னும் பதினைந்து நாட்கள் போகட்டும் என்று சொல்லி, தள்ளிப்போட்டார்கள். அந்த பதினைந்து நாட்கள் எதற்காக என்றால், மழை அப்போது வருவதற்கான ஒரு வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லி, அதை வைத்துத்தான் அந்த அமைச்சர் அவர்களும், கர்நாடக முன்னாள் முதலமைச்சர் அவர்களும் அப்படிச் சொன்னார்கள். ஆக, மழை அதிகமாகப் பெய்கின்றபோது மட்டும்தான் அதை அவர்கள் தேக்கி வைக்க முடியாத நிலையில், அந்த தண்ணீரைத்தான் நமக்குத் தருகிறார்களே தவிர, தரப்பட்ட இடைக்கால ஒப்பந்தப்படி அந்த 205 T.M.C. ft. தண்ணீர் தரப்படவில்லை என்பதை எங்களுக்கு கிடைத்திருக்கின்ற தகவல்களை வைத்து சொல்கிறோம். வேண்டுமானால் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நாங்கள் தர இருக்கிறோம்.

அதே நேரத்தில், இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். 11.2 இலட்சம் ஏக்கருக்கு மேல் பாசனப் பகுதி விரிவுபடுத்தக் கூடாது என்று கர்நாடக மாநிலத்திற்கு இப்போது போடப்பட்டுள்ள எந்த ஒப்பந்தமும் வற்புறுத்தவில்லை என்று கர்நாடக பாசனத் துறை அமைச்சர் திரு. நாகே கௌடா அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, இதிலேயிருந்து எல்லாம் தெரிவதை வைத்து, நமக்குக் கிடைக்க வேண்டிய பங்கை உரிய முறையில் நமக்குப் பெற்றுத் தர அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா, எடுக்குமா என்பதையே நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11 இலட்சம் ஏக்கருக்கு மேல் கர்நாடகப் பாசன நில விஸ்தரிப்பு நடவடிக்கை கூடாது என்று சொல்லி அதையெல்லாம் அந்த ஒப்பந்தம் ஏன் வற்புறுத்தவில்லை என்று கேட்டார். இடைக்காலத் தீர்ப்பே மூன்று அம்சங்களைக் கொண்டதுதான்.

1) தமிழ்நாட்டிற்கு 205 T.M.C. ft. தண்ணீரைத் தர வேண்டும்.

2) கர்நாடகம், 11 இலட்சம் ஏக்கருக்கு மேல் தன்னுடைய பாசனப் பரப்பைப் பெருக்கக் கூடாது.

3) இந்த 205 T.M.C. ft. தண்ணீரில், 6 T.M.C. ft. தண்ணீர் பாண்டிச்சேரி மாநிலத்திற்குத் தர வேண்டும் என்பதுதான்.

அதுதான் இடைக்காலத் தீர்ப்பு. அந்த இடைக்காலத் தீர்ப்பை நிறைவேற்றச் செய்வதற்காகத்தான் ஆணையம். அதிலே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு உணர்ச்சிபூர்வமான பிரச்சினைகள். அங்கே இருக்கிறவர்கள், அந்த மாநிலத்தின் உணர்ச்சிபூர்வமான பிரச்சினையாக மாற்றிவிட்டதால், பிரச்சினை அப்படி மாறிவிட்டதால், சில நேரங்களில் அந்த மக்களை மகிழ்விக்கிற வகையில் அங்கே இருக்கிற அமைச்சர்கள் சில அறிக்கைகளைத் தருகிறார்கள்.

முற்பகல் 10-15

நான் ஒன்றை மட்டும் தெளிவாகக் குறிப்பிடுகிறேன். ஏதோ மிகச் சுலபமாக, அதாவது திட்டமிட்டபடி எல்லாம் நடக்கிறது என்பதல்ல. போராடிப் போராடித்தான் சில நேரங்களில் பெற்றுக்கொண்டு இருக்கிறோம். அதைச் செய்வதும் கலைஞர் அரசுதான். காரணம் இந்த காவிரிப் பிரச்சினையில் நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும், காணுகிற தீர்வும் நிரந்தரமாக்கப்பட வேண்டும், சட்டபூர்வமாக்கப்பட வேண்டும் என்பதற்காக இந்த அரசு பல தொல்லைகளுக்கு இடையிலே பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நிச்சயமாக இந்த அரசு அதிலே வெற்றி பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுகுறித்து அடுத்து நீண்ட விவாதம் வேண்டுமென்றாலும் நான் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு) திரு. சந்தானம், உட்காருங்கள். உங்களுக்கும், காவிரிக்கும் என்ன சம்பந்தம்? நீங்கள் மதுரைக்காரர். உட்காருங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது விவாதிக்க வேண்டிய பொருள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொகுத்துரைத்தால்கூட விவாதிக்கலாம். அடுத்ததாக நான் நிறைய பேச வேண்டிய விஷயம் இருக்கிறது என்ற காரணத்தால் ..



***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம், உட்காருங்கள். (குறுக்கீடு) என்ன முக்கியமான பிரச்சினை? நீங்கள் காவிரியைப்பற்றி முக்கியமான பிரச்சினையாக என்ன clarification கேட்க முடியும்?

**திரு. லா. சந்தானம்:** நான் காவிரியைப் பற்றித் தெரிந்து கொள்ளக் கூடாதா? நானும் தமிழ்நாட்டின் ஒரு பிரதிநிதி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் கேளுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இடைக்காலத் தீர்ப்பாக 205 T.M.C. ft. தண்ணீரை நாம் கர்நாடகாவிலிருந்து பெறுகிறோம். ஆனால், அதைக் கணக்கு எடுக்கின்ற நிலை, அதைக் கணக்கு எடுக்கின்ற அதிகாரம் தமிழ்நாட்டிற்கு இல்லை. கர்நாடகாவிலேதான் கணக்கு எடுத்து அதை நமக்குச் சொல்கிறார்கள் என்று நான் அறிகிறேன். அந்தக் கணக்கு எடுக்கின்ற நிலை நமக்கு இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** முதலமைச்சருடைய பதிலில் இருக்கிறது. தலைவரவர்களே, நடுவர் மன்றம் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது. '205 T.M.C. ft. ensured at Mettur' என்று சொல்லியிருக்கிறது. மேட்டூரில்தான் 205 T.M.C. ft. தர வேண்டும் என்று தெரிவித்திருக்கிறது. அதை எதிர்த்து கர்நாடக அரசு appeal-க்குப் போனபோதுகூட, மறுத்துவிட்டது. எனவே, கணக்கு எடுப்பது நம்முடைய மேட்டூரில்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தென்னக நதி இணைப்பு குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்க வேண்டும் என்பது கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்து. ஏனென்றால், மகாநதி, வைகை ஆகியவை மத்திய அரசால் ஆய்வு செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றன. இப்போது ஆந்திராவிலேகூட, பாசனத்

துறை அமைச்சர் பண்டிலால் வெங்கட்ராவ் அவர்கள் கங்கை-காவிரி இணைப்பு என்பது எவ்வளவு அவசியம் என்பதை வலியுறுத்தி, அதை அந்த அரசும் வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. ஆகையால், ஒரு அரசாங்கத்தினுடைய கொள்கைப் பிரச்சினையாக இருக்கிற காரணத்தால், கங்கை-காவிரி இணைப்புப்பற்றி நம்முடைய ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஐ.நா. சபை நீர்வள ஆய்வுகூட, தமிழகத்தில் வருங்காலத்தில் நீர்த் தட்டுப்பாடு என்பது பெரிய அளவில் பாதிப்பினை உருவாக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தும். ஆகையால், இந்த அபாயத்திலிருந்து தமிழகம் போன்ற மாநிலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று சொல்வதோடு இந்த கங்கை-காவிரி நதிகள் இணைப்பு என்பதில் தொடர்ந்து தென் மாநிலங்கள் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஆலோசனை கூறியிருக்கிற சூழ்நிலையில், அதை நாம் கொண்டு வரவேண்டும். தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, ஒரிசா போன்ற மாநிலங்களில், 335 இலட்சம் ஏக்கர் இதனால் பயன்பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில், 25 இலட்சம் ஏக்கர்கள் இதனால் பயன்பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்று அந்த ஆய்வு அறிக்கை இப்போது கூறியிருக்கிறது. ஆகையால், இதையும் நம்முடைய ஆளுநர் அறிக்கையில் கொண்டு வந்திருக்க வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம்.

அரசாங்கத்தினுடைய கொள்கை நிலையிலிருந்து இன்றைக்கு மத்தியிலே இருக்கக்கூடிய பாரதிய ஜனதா அரசு சமீபத்திலே சேது சமுத்திரத் திட்டத்தை பெரிய விளம்பரமாகக் கொண்டு வந்தது. அநேகமாக, சேது சமுத்திரத் திட்டத்தில் கால்வாயை ஆழப்படுத்து கின்ற முயற்சி மிகப் பெரிய ஒரு தேர்தல் பிரச்சாரமாகக்கூடப் பயன்படுத்தப்பட்டது. இப்போது, மத்திய அரசினுடைய நிதிநிலை அறிக்கையில்......

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மன்னிக்க வேண்டும். தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி கேட்டபோது,** ஆகவே, அருள்கூர்ந்து பேரவைத் தலைவர் அவர்கள்,

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



** அவற்றைமட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடுவது நல்லது. பத்திரிகையில் வராமல் இருப்பது நாட்டுக்கு நல்லது என்பதற்காகச் சொல்கிறேன்.

முற்பகல் 10-20

**திரு. ச. அழகிரி:** தலைவர் அவர்களே, ** அது குறிப்பேட்டில் இருக்கலாம்.

**திரு. ஜி. பழனிசாமி:** ** இடம் பெற வேண்டியதில்லை.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் அழகிரி அவர்களுக்குத் தெரியாதது அல்ல. மழைத் தண்ணீர், மழை மூலம்தான் கொண்டு வர முடியும், artificial-ஆக பண்ண முடியாது. அது எல்லாம் இப்போது விவாதம் அல்ல. ** என்ற காரணத்திற்காகத்தான் தெரிவித்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோள் ஏற்கப்பட்டது. அந்த அளவு, குறிப்பிலே இடம் பெறாது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேது சமுத்திர கால்வாய்த் திட்டம் மத்திய அரசால் அறிவிக்கப்பட்டது. ஆனால், வந்திருக்கிற மத்திய அரசினுடைய நிதிநிலை அறிக்கையில் இது சம்பந்தமாக எந்த ஒரு நிதி ஒதுக்கீடு அதில் தென்படவில்லை. அநேகமாக, அது ஒரு தேர்தல் பிரச்சாரத்திற்காகப் பயன்படுத்தப்பட்டு கானல் நீர் போன்று இன்றைய தினம் காட்சியளிக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஓர் அரசாங்கத்தினுடைய ஆளுநர் உரையில் அதையும் இணைத்திருக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்டம் குறித்து மிகப் பெரிய அளவில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. அவை எல்லாம் நடந்து முடிந்திருக்கின்றன. இந்தக் கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்டம் நிறைவேற்றப்படுமா அல்லது நிறைவேற்றப்படாமல் தடுத்து நிறுத்தப்படுமா என்ற நிலைமை

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இருக்கிறது. காரணம் என்ன என்று சொன்னால், கிழக்குக் கடற்கரைச் சாலை வரும் என்று சொல்லி, சுமார் 1,000 கிலோமீட்டர் தூரம் இருக்கக் கூடிய அந்தச் சாலைகள் இப்போது பராமரிப்பு இல்லாமல் படு மோசமான நிலையில் இருக்கிறது. இந்த மோசமான நிலையிலிருந்து மாறுபடுவதற்கு அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படுமா, நிறைவேற்றப்படாதா என்பதைத் தாங்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1969 ஆம் ஆண்டு முதலமைச்சராக வந்த காலத்திலேதான் அந்தக் கிழக்குக் கடற்கரைச் சாலைக்கு உயிரே வந்தது. அது இராமநாதபுரத்தைத் தாண்டிக்கூட போடப்பட்டது. அதற்குப் பிறகு அந்தச் சாலை கவனிப்பாரற்று வீணாகப் பாழடிக்கப்பட்டது. இப்போது மீண்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு அந்தக் கிழக்குக் கடற்கரைச் சாலைக்கு உயிர் வந்திருக்கிறது. அவர் சொன்னதுபோல, ஆய்வுகள் எல்லாம் முடிந்திருக்கின்றன. இது உலக வங்கி நிதி ஆதாரத்துடன் செயல்படுத்தக்கூடிய திட்டம். சுற்றுப்புறச் சூழல் அமைச்சகத்திலிருந்து Environmental clearance என்று சொல்லக்கூடிய ஒப்புதல் கிடைக்க வேண்டும். மத்திய அரசுக்குப் போய் இருக்கிறது. மத்தியில் இருக்கும் சுற்றுப்புறச் சூழல் அமைச்சரகம் அதற்கு ஒப்புதல் அளித்திருந்தாலும், சுற்றுப்புறச் சூழல் குழுமம் என்று ஒன்று இருக்கிறது. அது above the Government. அங்கே போய் இருக்கிறது. அதன் clearance கிடைத்த பிறகு உலக வங்கியினுடைய நிதி ஆதாரம் கிடைக்கும். அதற்கிடையிலே இந்தச் சாலைகளை ஆங்காங்கே பழுதுபார்க்கின்ற சிறிய பணிகள் நடைபெறுகின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பணிகளை வேகமாகச் செய்ய வேண்டும். ஏற்கெனவே பாதிப்புக்கு உள்ளாகிய சாலைகளை, நாகப்பட்டினம் போன்ற நெடுஞ்சாலை கோட்டங்களில் பலகோடி ரூபாய்க்கு ஒப்பந்தக்காரர்கள் வேலை செய்தும்கூட இன்னும் பணம் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நான் குற்றம் சொல்வதற்காக இதைச் சொல்லவில்லை. இப்போது நாகப்பட்டினம் சாலை என்பது படுமோசமான நிலையிலே எந்த ஒரு வாகனப் போக்குவரத்தும் போக முடியாத அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நம்முடைய ஆட்சி பொறுப்புக்கு வந்த பின்னால், கிராமப்புறத்திலே இருக்கிற பஞ்சாயத்துச் சாலைகளைச் செப்பனிட ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிகமான நிதி ஆதாரங்கள் தந்து நிறைய சாலைப் பணிகளை நாம் மேற்கொண்டோம். அதை இல்லையென்று மறுக்க முடியாது. இன்றைக்கு அந்தச் சாலைகளில் பிரதான சாலைகள் தவிர, கிராமப்புறச் சாலைகள் எல்லாம் மிகவும் படுமோசமான நிலையிலே இருக்கின்றன. ஆகவே, உள்ளாட்சிகளுக்கு, ஊராட்சி மன்றங்களுக்கு, மாவட்டப் பஞ்சாயத்துக்களுக்கு நீங்கள் அதிகமான நிதியை ஒதுக்கித் தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு 27 இலட்சம் ரூபாய், 16 இலட்சம் ரூபாய், 18 இலட்சம் ரூபாய்தான் நிதியாக வருகிறது. அதை வைத்துக்கொண்டு அவர்கள் எந்தப் பணிகளையும் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகையால், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு, ஊராட்சி மன்றங்களுக்கு அதிக நிதியை நீங்கள் ஒதுக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு, எனக்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் விவசாயக் கடன்களைப் பற்றிப் பேசுகிறபோது நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்தார்கள். 11 அல்லது 12 ஆம் தேதி விவசாயிகளை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்துவேன் என்று சொன்ன பின்னால், அநேகமாக தஞ்சை மாவட்டம் மட்டும் அல்ல, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் இருந்த திருவாரூர், நாகப்பட்டினம் திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளெல்லாம் பெருமகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள். ஆகவே, உங்களிடமிருந்து நிவாரணங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளை அழைத்துப் பேசி அவர்கள் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு காண வேண்டுமென்று அழைப்பு எல்லாம் போய் இருப்பதால்,

மாண்புமிகு முதலமைச்சருக்கு அவர்கள் அநேகமாக இப்போதே நன்றி சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். அவ்வளவு எதிர்பார்ப்போடு...

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எங்கள் மாவட்ட விவசாயிகள் எல்லாம் வரக் கூடாதா?

**திரு. ஜி. பழனிசாமி:** உங்களுக்கும் சேர்த்து, மதுரை மாவட்டத்திற்கும் சேர்த்து, இல்லை தமிழ்நாடு முழுமைக்கும் ஒரு நிவாரணம் கிடைக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். அதை நீங்கள் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சில அறிக்கைகளைப்பற்றி இன்றைய தினம் நான் மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மழை விட்டாலும் தூவானம் விடாததுபோல, நாடாளுமன்றத்தைக் குலுக்கிய ஆர்.எஸ்.எஸ்.சினுடைய குஜராத் பிரச்சினை ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட இன்றையதினத்திலே நன்றி தெரிவித்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கண்டிருப்பதை நான் வரவேற்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே எல்லோருக்குமே உடன்பாடு உண்டு. யாரும் இல்லையென்று சொல்லிவிட முடியாது. ஆனால், தமிழ்நாட்டில் எந்தவொரு விளம்பரமும் இல்லாத, எந்தவொரு ஆடம்பரமும் இல்லாத இதுபோன்ற ஒருவகையான இயக்கம் இன்றைய தினத்திலே தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; மிக அபாயகரமான சூழ்நிலையிலே போய்க் கொண்டிருக்கிறது. அது எந்த அளவுக்குப் பாதாளம் வரை பாயும் என்று எனக்குத் தெரியாது. காரணம் இன்றைக்கு...

**திரு. சி. வேலாயுதன்:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் எதைப் பற்றிப் பேசப் போகிறார் என்று தெரியாமல் எப்படிக் கேட்கிறீர்கள்? அவர் பேசிய பிறகு நீங்கள் கேட்கலாம். திரு. பழனிசாமி, நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** நான் மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என்பது, நான் ஆதாரம் இல்லாமல் விசாரிக்காமல் அல்லது அந்தச் சம்பவங்களை ஒரு மலிவான



பத்திரிகை விளம்பரத்திற்காக உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவில்லை. ஆசிரியர்களிடையே இதுபோன்ற ஆர்.எஸ்.எஸ்.. இயக்கங்களுக்கு ஆள் பிடிக்கின்ற பணிகள் இப்போது வேகமாக தமிழ்நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இது தமிழகத்தை எந்தச் சூழ்நிலைக்கு, எந்த அபாயத்தில் கொண்டுவிடும் என்று நீங்கள் சொல்ல முடியாது. ஊரான் வீட்டுப் பிள்ளையை கட்டி கிணற்றில் விட்டு ஆழம் பார்ப்பது போன்ற மதவாத சக்திக்கு இப்போது அந்த மத உணர்வுகளை ஆசிரியர்கள் மூலமாகப் புகுத்தக்கூடிய அளவுக்கு எல்லா இடங்களிலும் ஆசிரியர்களை ஆங்காங்கே ஒருவரை, இரண்டு பேரை பிடித்துப் பயிற்சி முகாம்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த அபாயம் சாதாரணமான அபாயமல்ல; தமிழகத்தில் மிக சோதனைக்குரிய அபாயம். இது மாண்புமிகு முதலமைச்சருடைய தகவலுக்கு வராமல் இருப்பதற்கு வாய்ப்பில்லை. வந்திருக்கும். அதை எந்த வகையிலே தடுத்து நிறுத்தலாமோ அந்த வகையிலே நீங்கள் தடுத்து நிறுத்துங்கள். இல்லையென்று சொன்னால், இது சாதாரணமானதல்ல...

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்.எஸ்.எஸ்.சினுடைய சக்தி வளர்வதுபற்றி ஒரு விஷமத்தனமான கருத்து பேசப்படுகிறது. உண்மையிலேயே...

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. சி. வேலாயுதன்:** நான் பேசி முடித்த பிறகு பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்ன முறை? குமாரதாஸ் போன்ற உறுப்பினர்கள் இந்த மாதிரி முறைகேடாக நடக்கக் கூடாது. ஏற்கெனவே,. ஒரு point of order கேட்டுக் கொண்டிருக்கும்போது, நீங்கள் எழுந்து நின்றால் என்ன அர்த்தம்?

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1963 ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேரு அவர்கள்கூட

ஆர்.எஸ்.எஸ்.சினுடைய சேவையைப் பாராட்டி குடியரசு தின விழாவிலே அழைத்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆர்.எஸ்.எஸ். பற்றி மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி சொல்கிற கருத்து, அவருடைய கட்சிக் கருத்து, அவருடைய சொந்தக் கருத்து. அந்தக் கருத்தில் உங்களுக்கு உடன்பாடு இல்லாமல் இருக்கலாம். ஆகையினால் இது point of order-ல் வராது. பழனிசாமி, பேசுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பதிலே சொல்ல வேண்டாம். நான் அவருக்குச் சொல்வதற்கு உரிமை இல்லையென்று சொன்ன பிறகு என்ன புதியதாகக் கேட்கப் போகிறீர்கள்?

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி பேசியதில் யதார்த்தமான உண்மை இருக்கிறது. நம்முடைய மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனிசாமி பேசியதில் உண்மை இருக்கிறது என்று சொல்வதற்கு ஒரு point of order தேவையா? நீங்கள் உட்காருங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான்தான் வேலாயுதன் அவர்களுக்கே பேச உரிமை இல்லையென்று சொல்லிவிட்டேனே, பிறகு நீங்கள் ஏன் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்?

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நம்முடைய அரசின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்பதற்காகத்தான் நான் கொண்டு வந்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன், இங்கே பேசினார்கள். எங்களுக்குத் தெரியும் அரசியலிலே என்ன பேசுவார்கள் என்று. நாங்கள் எல்லாம் அவசரப்பட்டு அரசியலில் அவசர கோலத்தில் எதையுமே பேசுவதில்லை.அரசியல் நிதானத்தோடு அரசியல் பொறுப்பு உணர்வோடு ஒரு ஆட்சியைப் படுகொலை செய்கிற யோசனைகளை



எந்தவொரு சூழ்நிலையிலும் சொன்னது கிடையாது. நான் என்ன சொல்ல வருகிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள், சொல்கிறேன். எங்களுக்குத் தெரியும், தமிழ்நாட்டு அரசியலில் கன்னியாகுமரியிலிருந்து சென்னை வரையிலும் நீதி கேட்டு வந்திருக்கின்ற நெடும் பயணங்களும் எங்களுக்குத் தெரியும். பேச்சுக்குப் பேச்சு, மூச்சுக்கு மூச்சு ஜனநாயகப் படுகொலை செய்வதற்கு, ஆட்சியைக் கலைப்பதற்கு யார் பேசினார்கள் என்பது நாட்டுக்குத் தெரியும். யாரும் மறந்துவிட முடியாது. இன்னும் சொல்லவா? அவர்கள் வேட்டி கட்டிப் போனால் கோவணம்கூட போய்விடும் என்று சொன்னது எல்லாம் எங்களுக்குத் தெரியும். அதையெல்லாம் மறந்துவிட்டுப் பேச முடியாது. ஆகவே எந்தவொரு சூழ்நிலையிலும் எந்தவொரு அரசியல் மாறுபாட்டிலும், எந்தவொரு கூட்டணியில் இருந்தாலும் கூட, எங்களைப் போன்ற பொறுப்பான கட்சிகள் அபரிமிதமாகப் பேசுவதும் கிடையாது, தூற்றுவதும் கிடையாது. அப்படிப்பட்ட அரசியல் சிந்தனைகள் எங்களுக்கு ஒருபோதும் வரப்போவதில்லை.

*முற்பகல் 10-30*

நாங்கள் அரசியலில் மாறுபட்டு இருந்தபோதும்கூட எங்களுக்கு மிகப் பெரிய மதிப்பு மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீது உண்டு. நேற்று நான் முரசொலியில் ஒரு சம்பவத்தைப் படித்தேன். கடற்கரைக் காதல் என்ற கவிதையைப் படித்தேன், (குறுக்கீடு) கடலோரக் காதல் என்ற கவிதையைப் படித்தேன். அதில் வந்திருக்கிற செய்திகள், அப்படிப் புறம்போகிற ஒரு இயக்கம், கம்யூனிஸ்ட் கட்சி இயக்கமல்ல. எந்தவொரு பொழுதிலும் அப்படி நடந்துகொண்ட இயக்கமல்ல. நாங்கள் ஆயிரம் துயரச் சம்பவங்களைச் சந்தித்து இருக்கிறோம். ஒரு கட்சி, இரண்டு கட்சிகளிலிருந்து அல்ல. பல கட்சிகளிலிருந்து தாக்குதல்களைத் தாங்கி இருக்கிற கட்சிதான் கம்யூனிஸ்ட் கட்சி என்ற பேரியக்கம். அந்தச் சூழ்நிலையைத்தான் நான் சொல்கிறேன். யார் தவறு செய்தார்கள்? நம்முடைய இயக்கங்களில் யார் தவறு செய்தார்கள் என்று மரியாதைக்குரிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியாததல்ல. இங்கு இருக்கக்கூடியவர்கள் இன்றைக்குப் பேசலாம். இங்கு இருக்கக்கூடியவர்கள் எல்லாம் இன்றைய தினத்திலே விளம்பரத்தைத் தேடிக் கொள்ளலாம். (குறுக்கீடு) ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன், உட்காருங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** அதுபோன்று கம்யூனிஸ்ட் கட்சி விரும்புவதில்லை என்று கூறி, இந்த ஆளுநர் உரையில் பேசுவதற்கு அனுமதி தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே point of order கிடையாது. நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** என்னைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உங்களைப் பற்றி அல்ல. நீங்கள் பேசினீர்கள் என்ற சொன்னார், அவ்வளவுதான். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம் கொடுங்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர் தன் கட்சியைப் பற்றிச் சொன்னதற்குத்தான் சொன்னார். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** நான் ஒன்றுமே சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நீங்கள் சொல்லவில்லை என்பதை record பண்ணிக்கொள்கிறேன். உட்காருங்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆளுநர் உரையின் மீது இங்கே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த .. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முன் வரிசையில் இருக்கிறவர்கள், உங்களுக்குள் விவாதம் பண்ணக் கூடாது. எதிர்க்கட்சித் தலைவர் பேசிக் கொண்டிருக்கிறார்.



**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** இந்த ஆளுநர் உரையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு நம்முடைய அய்யன் திருவள்ளுவர் சிலையை, 133 அடி உயரமுள்ள சிலையை, கன்னியாகுமரி கடலில் திறந்து வைத்த நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டையும், வாழ்த்துக்களையும், வணக்கங்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அருமையான விழாவிற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த நாட்டினுடைய ஜனாதிபதியையே அழைத்து, அந்த விழாவிற்குத் தலைமை தாங்கச் சொல்லி இருக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. அதேபோல், நம்முடைய ஆளுநர் அவர்களையும் அழைத்து இருக்க வேண்டும். அதோடு நம்முடைய அண்டை மாநிலங்களான கேரளத்தினுடைய முதலமைச்சர், கர்நாடகத்தினுடைய முதலமைச்சர், ஆந்திர முதலமைச்சர் அவர்களை எல்லாம் அழைத்து இருக்க வேண்டும். அதன் மூலம் தமிழ்நாட்டில் பல பிரச்சினைகள் தீர்ந்து இருக்கும். குறிப்பாக, கர்நாடகாவில் திருவள்ளுவர் சிலை நீண்ட காலமாகத் திறக்கப்படாமல் கிடக்கிறது. அது ஏதோ ஒரு வெறி பிடித்த தமிழனுடைய சிலை என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இல்லை, அது உலகப் புகழ் பெற்ற வள்ளுவர் சிலை என்பதை அங்கே உணர்த்துவதற்கு அது ஒரு நல்ல வாய்ப்பாக இருந்திருக்க முடியும். அதேபோல், கேரளம் என்பது நம் மாநிலத்தினுடைய மிக அருகில் உள்ள அண்டை மாநிலம் மட்டுமல்லாமல் கேரளத்திலிருந்த பகுதி அந்த கன்னியாகுமரிப் பகுதி. ஆகவே, அந்த முதலமைச்சரும் அங்கே வந்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். ஆந்திர முதலமைச்சரைப் பொறுத்தவரை, அவர் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நெருங்கிய நண்பர், நமக்கெல்லாம் நண்பராக இருந்தவர் என்ற முறையில் அவரையும் அழைத்து இருக்கவேண்டும். இதற்கெல்லாம் மேலாக இந்த அவையிலே இருக்கிற அத்தனை பேரையும் அழைத்து இருக்க வேண்டும். என்னையும் அழைத்து இருக்க வேண்டும். இதிலே மிக வருத்தப்படக்கூடிய செய்தி என்னவென்று சொன்னால், எனக்கு அழைப்புகூட வரவில்லை. அழைப்பு வந்திருந்தால்கூட வந்திருப்பேன். நம்முடைய தலைவர் மூப்பனார் அவர்களிடம் மாண்புமிகு திரு. முல்லைவேந்தன் அவர்கள் நேரில் வந்து இந்த விழாவிற்கு வர வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள்

விரும்புகிறார்கள், நீங்கள் வர வேண்டுமென்று கேட்டதாகச் சொல்லி நான் போகவா என்று எங்களிடம் எல்லாம் கேட்டார்கள்...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சட்டமன்றத்திலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதுபோல இந்திய நாட்டில் இருக்கிற எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அரசின் சார்பாக முறையான அழைப்பிதழ் அனுப்பப் பெற்றிருக்கிறது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நான் இதில் பொய் சொல்லி, ஒரு பெருமை சேர்ப்பதற்காக விரும்பவில்லை. எனக்கு அழைப்பே வரவில்லை. நம்முடைய தலைவர் மூப்பனார் அவர்கள் என்னிடம் கேட்டார்கள். நாங்கள் சொன்னோம். நீங்கள் கண்டிப்பாகச் செல்ல வேண்டும், திருவள்ளுவர் நமக்குச் சொந்தம், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சிறப்பான விழா எடுக்கிறார்கள், நீங்கள் அதற்குச் செல்ல வேண்டுமென்று நாங்களெல்லாம் சொன்னோம்.

முற்பகல் 10-35

**திரு. ஐ. கணேசன்:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே என்ன Point of order இருக்கிறது? அவர் தனக்கு அழைப்பிதழ் வரவில்லை என்கிறார். அதில் நீங்கள் ஏன் குறுக்கே நிற்கிறீர்கள்?

**திரு. ஐ. கணேசன்:** அழைப்பிதழ் எனக்கு வந்தது என்று நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது சரி.

**திரு. ஐ. கணேசன்:** தலைவர் அவர்களே, எங்களுக்கு அழைப்பிதழ் வந்தது.

**திரு. இரா. தாமரைக்கனி:** எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது, இல்லாததற்கெல்லாம் குறுக்கீடுகள் பண்ணுகிறார். நீங்கள் இதற்கு இடம் அளிக்கக் கூடாது இல்லையா?



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மாமூலாகப் பண்ணுகிற வேலை அது. நீங்கள் உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** நீங்கள் அதற்கு இடம் அளிக்கக் கூடாது இல்லையா?

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவிற்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் எதிர்க்கட்சித் தலைவரை ஒன்றே ஒன்று கேட்க விரும்புகிறேன். ஏனென்றால் நான் பேரவைத் தலைவர் என்ற முறையில் கேட்கிறேன். உங்களுக்கு அழைப்பு வரவில்லை என்று நீங்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அது உண்மையாக இருக்கலாம். உங்கள் கட்சியிலே இருக்கிற எந்த உறுப்பினருக்கும் வரவில்லை என்கிறீர்களா? அல்லது உங்களுக்கு மாத்திரம் வரவில்லை என்கிறீர்களா?

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** எனக்கு வரவில்லை என்பதைத்தான் நான் சொல்கிறேன். இந்த விழாவை ஒரு சர்வ கட்சி விழாவாக - கட்சி விழாவாகக்கூட இல்லாமல் - நல்ல தமிழ் அறிஞர்களையெல்லாம் வைத்து, ஒரு குழு அமைத்து, மிகச் சிறப்பான முறையிலே நடத்தி இருக்க வேண்டுமென்பது என்னுடைய கருத்து. நம்முடைய நாவலர் நெடுஞ்செழியன் அவர்களைக்கூட நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொலைபேசியில் அழைத்து, நீங்கள் வர வேண்டுமென்று கேட்டதாகவும், அவர்கள் 'என்னுடைய வாழ்த்துகள்' என்று சொன்னதாகவும் பத்திரிகையிலே செய்தி பார்த்தேன். அதற்கும் மேலாக நம்முடைய முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்களையும் நீங்கள் அழைத்திருக்க வேண்டும். நீங்கள் நேரடியாக அழைக்காவிட்டாலும்கூட, இங்கேயிருக்கிற நம்முடைய பெண் அமைச்சர்களையாவது அனுப்பி நேரடியாக அழைத்திருக்க வேண்டும். ஏனென்று சொன்னால், உங்களுடைய வாழ்க்கையில் இது ஒரு மிகப் பெரிய விழா.

எங்களுடைய தலைவர் ஐயா மூப்பனார் அவர்கள்கூட முதலமைச்சருக்கு 'You can win' என்ற புத்தகத்தைக் கொடுத்ததை, ஏன் கொடுத்தீர்கள் என்று நாங்கள் கேட்டோம். அப்போது

சொன்னார், திருவள்ளுவர் என்று எடுத்தாலே நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குப் பல சோதனைகள் வந்திருக்கின்றன. அந்தச் சோதனைகளையெல்லாம் மீறி இந்த விழாவை அவர் நடத்திவிட்டார் என்கின்ற செய்தியைத் தெரிவிப்பதற்காக நான் அதைக் கொடுத்தேன் என்று சொன்னார்கள். இதை ஏன் நான் சொல்கிறேன் என்று சொன்னால் தமிழகத்தில் மிகப் பெரிய விழாவாக - ஒரு வார காலம் - பெரிய விழாவாக நடத்தியிருக்க வேண்டிய ஒரு விழாவை இந்த நாட்டினுடைய முன்னாள் ஜனாதிபதி மரியாதைக்குரிய சங்கர் தயாள் சர்மா அவர்கள் இறந்து அந்த துக்க நேரத்தில் இதை வைத்துக்கொண்டது மிக மிக வேதனைப்படக்கூடிய ஒன்று என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த ஆளுநர் உரை விவாதத்தை எங்களுடைய உறுப்பினர் மாண்புமிகு அழகிரி அவர்கள் தொடங்கி வைத்ததிலிருந்து நேற்று வரை புயலாக இந்தச் சட்டமன்றம் நடந்தது. பல நிகழ்ச்சிகள் இங்கு சொல்லப்பட்டன. மத்திய, மாநில உறவுகள் பற்றிய செய்திகள் பல வந்தன. இதற்கெல்லாம் ஒரு விடிவு காலமாக நேற்று நாடாளுமன்றத்தில் B.J.P. என்ற முகமூடியை அணிந்து கொண்டிருக்கிற ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தின் முகத் திரையைக் கிழித்தெறிவதுபோல, மிகப் பெரிய வெற்றியினை நம்முடைய தேசியவாதிகளும், நம்முடைய இடதுசாரிக் கட்சிகளும் நாடாளுமன்றத்தில் ஈட்டியிருக்கிறார்கள். ஆகவே, அதற்குள்ளே நான் போக விரும்பவில்லை.

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய முதலலைச்சர் அவர்கள் கடந்த 4 ஆண்டுக் காலத்தில் பல நல்ல திட்டங்களை இங்கே அறிவித்திருக்கிறார்கள். அதைச் சொல்வதற்கு முன்பு ஒன்று. நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள். அது அத்தனை பேரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு வேண்டுகோள். 1977 ஆம் ஆண்டு நான் சட்டமன்ற உறுப்பினராக இந்த அவையிலே பேசினேன். என்ன பேசினேன் என்று சொன்னால், காவிரித் தண்ணீர் கடலில் கலக்கின்ற அளவிற்கு மட்டுமல்லாமல், திருச்சி நகரத்தையே அழிக்கின்ற அளவிற்கு வெள்ளப் பெருக்கெடுத்து ஓடுகிறது. புதுக்கோட்டை மாவட்டமும், இராமநாதபுரம் மாவட்டமும் குடிதண்ணீர் இல்லாமல் வாடுகின்றன. அந்தத் தண்ணீரை இந்த



மாவட்டங்களுக்குத் திருப்பிவிட வேண்டுமென்று நான் பேசினேன். இது மறுநாளே கர்நாடக சட்டமன்றத்திலே மிகப் பெரிய புயலைக் கிளப்பி தமிழகத்தில் வெள்ளம் போல் தண்ணீர் ஓடுகிற அளவிற்கு நீங்கள் என்ன செய்தீர்கள் என்று அந்த முதலமைச்சரை அவர்கள் பிடித்து விட்டார்கள். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையெல்லாம் வரும். ஆகவே, இந்தக் காவிரி பிரச்சினையைப் பொறுத்தவரை எந்தவிதமான சந்தேகமும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மீது எங்களுக்குக் கிடையாது. ஏனென்று சொன்னால் அவர்கள் மிகுந்த அனுபவம் படைத்தவர்கள். காவரிப் பிரச்சினை தொடங்கிய காலத்திலிருந்து இன்று வரை அந்தப் பிரச்சினைக் காலத்தில் அவர்கள் முதலமைச்சராக இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தமிழகத்திற்கு ஒரு நல்ல சூழ்நிலையை அவர்கள் உருவாக்குவார்கள் என்பதில் எங்களுக்குச் சந்தேகம் கிடையாது.

*முற்பகல் 10-40*

முதலமைச்சர் அவர்கள் 4, 5 திட்டங்களை இந்த 4 ஆண்டுக் காலத்தில் தமிழகத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக சமத்துவபுரம். சமத்துவபுரம் நல்ல நோக்கத்தோடு வந்ததது என்றாலும்கூட, நான் சொல்லியாக வேண்டும். நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கே ஒருவர் கடிதம் எழுதியிருக்கிறார். உதாரணமாக, தங்கச்சிமடம். அதாவது, இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் யூனியனில் கட்டப்பட்டுள்ள பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் தங்கச்சிமடத்தில் குடியிருக்கிற 13/194 எண் வீட்டில் குடியிருக்கிறவர் அந்த வீட்டை 3 இலட்சம் ரூபாய்க்கு விற்றுவிட்டு, அதே நபர், எம்.எஸ். முனியாண்டி என்பவர் தன்னுடைய பெயரிலே, தன்னுடைய மகள் பெயரிலே, தன்னுடைய இன்னொரு மகள் பெயரிலே, தன்னுடைய மகன் பெயரிலே பட்டா வாங்கி இன்று சமத்துவபுரத்தில் 4 வீடுகள் வைத்திருக்கிறார் என்று முதலமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். இன்னொரு கடிதம், சிவகங்கையில் ஒருவர் எழுதியிருக்கிறார். சிவகங்கை டவுனில், பையூர் பிள்ளைவயல்புரத்தில் அமைக்கப்பட்டு வரும் சமத்துவபுரம், தொழிற்பேட்டையின் எதிர்ப்புறம் உள்ள இடத்தில் அமைக்கப்பட்டு வருகிறது. இது எங்களுக்கு, 13 பங்காளிகளுக்குச் சொந்தமான இடம்; 34 நபர்கள் நாங்கள் குடும்பத்தில் இருக்கிறோம்; எங்களைக் கேட்காமலேயே எங்களுடைய பட்டா நிலத்தில்

சமத்துவபுரம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்; இந்தக் குடும்பத்தினர் முனியாண்டித் தேவரின் வாரிசுகள்; நம் தேசத்திற்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள்; நகரின் வளர்ச்சிக்காகத் தங்கள் சொந்த சொத்துக்களை இனாமாகக் கொடுத்தவர்கள்; நாகமுத்துத் தேவர். இரத்தினத் தேவர் ஆகிய இருவரும் I.N.A. படையில் இருந்தவர்கள். எங்களுக்கு மிகப் பெரிய பாதிப்பை இந்த அரசு ஏற்படுத்திவிட்டது என்று எழுதியிருக்கிறார்கள்.

அதேபோல அரசனுாரைப் பற்றி நான் சொல்ல வேண்டியதில்லை. காரணம் முதலமைச்சர் அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பசும்போன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குக் கடிதம் என்ற பெயராலே யாரோ தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள். சிவகங்கை ராஜாவுக்குச் சொந்தமான இடத்தைக்கூட அதற்கு முன்னாலே 4, 5 தலைமுறை முன்னால் இருந்தவர்கள் எங்களுடைய இடம் என்று சொல்லிக் கொண்டிருக்கிற பழக்கம் சிவகங்கையிலே உண்டு. எல்லா விதமான ஆதாரங்களோடும், இது அரசாங்க இடம்தான்; அரசாங்க புறம்போக்குதான் என்று தெளிவாகத் தெரிந்து, கடந்த 6 மாத காலமாக அந்த இடம் எடுக்கப்பட்டு, கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, பயனானிகளும் குடி போயிருக்கிறார்கள். இந்த நேரத்தில் யாரோ எழுதியிருக்கிறார்கள். அதைத் தயவுசெய்து எதிர்க்கட்சித் தலைவரே விசாரிக்கட்டும்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** வழக்கு இருக்கிறது என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்து, என்னுடைய பகுதியில் கடலாடியில் ஒரு சமத்துவபுரம் இருக்கிறது. அந்தச் சமத்துவபுரத்தை முதலமைச்சர் அவர்கள் திறக்கிறபோது, போகக்கூடாது என்று நினைத்து நான் போகவில்லை. ஏனென்றால், யாருமே குடிபோகவில்லை. குடிபோகவே முடியாது. அது நல்ல காடு. சுடுகாட்டுக்குப் பக்கத்தில் கட்டியிருக்கக்கூடிய இடம். அங்கே ஒரு ரேஷன் கடை இருக்கிறது. ரேஷனுக்காக வாரா வாரம்



போய் ரேஷன் வாங்கிக் கொண்டு வருவார்களே தவிர, குடிபோகவே முடியாத இடத்தில் ஒரு சமத்துவபுரம் அமைந்திருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், 35 ஆயிரம் ரூபாய்க்கு வீடு கட்டவே முடியாது. நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நான் வேண்டுகோளாக என்ன சொல்கிறேன் என்றால், இனிமேலாவது தயவுசெய்து சமத்துவபுரத்தை பொதுப் பணித் துறையில் இருக்கிற கட்டுமானப் பணி அதிகாரிகளிடம் ஒப்படைத்துவிடுங்கள். ஊராட்சி ஒன்றியத்தின்மீது நான் குறை சொல்லவில்லை. அவர்களாலே முடியாது, 35 ஆயிரம் ரூபாய்க்கு வீடு கட்டினால் அது ஒழுகத்தான் செய்யும். அது நம்முடைய முதலமைச்சருக்குப் பெருமையாக அமையாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் தொடங்கியது முதன்முதலாக எங்களுடைய தொகுதியில் ஒரு கோடி ரூபாய்க்கு அந்த ஊரில் எல்லாவிதமான வசதிகளும் செய்து கொடுத்தோம். கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனது என்று பழமொழி சொல்வார்களே, அதுபோல முதலாவது ஆண்டு ஒரு கோடி ரூபாய் செலவழித்தோம். இரண்டாவது ஆண்டு 45 இலட்சம் ரூபாய் செலவழித்தோம். இந்த ஆண்டு (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன், வெறும் 25 இலட்சம் ரூபாய்தான் செலவழிக்க முடிகிறது. மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டால், அவர் என்ன சொல்கிறார் என்றால், ஒரு நபருக்கு 500 ரூபாய் வரைதான் வருகிறது. அதற்கு மேல் செய்ய முடியாது என்று சொல்கிறார். இதற்கு அமைச்சரின் விளக்கம் வேண்டும்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு மகத்தான திட்டம். அதைக் கழுதை தேய்ந்து கட்டெறும்பானது என்று சொல்வது தவறு. கூடுமானவரையில் அந்த வார்த்தைகளை எடுத்துவிடலாம். ஆனால் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன். இந்த நிதியைப் பொறுத்தவரையில், அந்தந்த கிராமங்களுக்குத் தேவைப்படுகின்ற அளவுக்கு, பஞ்சாயத்தில் ஒதுக்கப்படுகின்ற நிதியையும் சேர்த்து, அதற்கென ஒதுக்கப்படுகின்ற தனி நிதியையும் சேர்த்து செலவழிக்கப்படுகிறது. ஒரு கோடி ரூபாய் என்பதல்ல. அதிலே 30 இலட்சம், 50 இலட்சம் என்று செலவழித்தாலும் அதோடு முடிகிறது என்று சொன்னால், அந்தக் கிராமத்தில் அதோடு முடிக்கிறோம். ஒரு

கோடி ரூபாய்க்கு மேலேகூட 2,3 கிராமங்களில் செலவழிக்கப் பட்டிருக்கிறது. தேவையை ஒட்டித்தான் செலவே தவிர, மதிப்பீட்டை ஒட்டி நாம் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப் பொறுத்தவரையில் நீங்கள் ஒதுக்குகின்ற நிதியில், தொகுப்பு வீடுகளுக்கு அரசு ஒதுக்குகின்ற நிதியில், ஓர் ஊருக்கு அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று எடுத்துக்கொண்டால் அந்த ஊருக்கு நீங்கள் கொடுக்கின்ற பணத்தில் மொத்த வீடுகளின் எண்ணிக்கையைப் பார்த்தால், அந்த யூனியனிலே இருக்கின்ற, வேறு பகுதியிலே இருக்கின்ற, சிற்றூர் பகுதியிலே இருக்கின்ற வீடுகளின் எண்ணிக்கையைக் குறைத்துவிட்டு நீங்கள் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற பெயரில் தொகுப்பு வீடுகளைக் கொடுக்கிறீர்கள். இதுதான் உண்மை.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கிராமத்திற்கும் கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. 20 வீடுகள் தொகுப்பு வீடுகள் என்றால், அந்த 20 வீடுகளுக்குக் குறையாமல் கொடுக்க வேண்டும். அல்லது தேவை இருப்பதை நிவர்த்தி செய்ய வேண்டும். அந்த அளவுக்கு 20 வீடுகளுக்குக் குறையாமல் ஒவ்வொரு அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமத்திற்கும் அமல்படுத்திக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். கொடுத்துதான் வருகிறோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், நீங்கள் பேசுகின்றபோது பேசலாம். எதிர்க்கட்சித் தலைவர் பேசியதற்கு அமைச்சர் பதில் சொல்லியாகிவிட்டது. உங்களை அனுமதிக்க மாட்டேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நம்முடைய ஊராட்சி ஒன்றியங்களுக்கு, ஐக்கிய முன்னணி ஆட்சி நாட்டில் இருந்தபோது E.A.S. திட்டத்தின் மூலமாக 1997-98-ல் 107.46 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1998-99-ல் 65.31 இலட்சம் வந்தது. ஆனால், இப்போது நம்முடைய பாரதிய ஜனதா கட்சி ஆட்சியில் 1999-2000 வெறும் 6.37 இலட்சம் ரூபாய்தான் வந்திருக்கிறது. எப்படி இது குறைந்துகொண்டு வருகிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். நம்முடைய ஊராட்சி ஒன்றியங்கள் - ஒரு கோடி எங்கே, 6 இலட்சம் எங்கே என்பதைப் பார்க்கவேண்டும். இதையெல்லாம் நம்முடைய .....



**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அமைச்சரவையிலே முடிவெடுத்து திட்டங்களுக்குப் பெயர் மாற்றி, திட்டப் பணிகளுக்கும் தனித்தனியாக ஒதுக்கீடு செய்து, ஒரு நிதியை வேறு ஒரு நிதிக்கு மாற்றி அவர்கள் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆக, எது எப்படி இருந்தாலும் எல்லா நிதிகளும் கிராமப்புறங்களில் அடிப்படை வசதிகளுக்கு உபயோகப்படுத்தக்கூடிய அளவுக்குத்தான் வருகின்றன. அந்தப் பெயரில் சென்ற ஆண்டும் குறைத்திருக்கிறார்கள். முதல் ஆண்டும் குறைத்திருக்கிறார்கள். இந்த ஆண்டும் குறைத்திருக்கிறார்கள். ஆனால், அந்த நிதி வேறு தனித் திட்டங்களுக்கான தலைப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ச. அழகிரி:** Point of clarification. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98 ஆம் ஆண்டில் 60 ஆயிரம் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுத்தீர்கள். 1998-99-ல் 45 ஆயிரம் வீடுகளாக அது குறைந்தது. இப்போது 30 ஆயிரம் வீடுகளாக அது குறைந்திருக்கிறது. அதிக சுயாட்சி, அதிக உரிமை கேட்கின்ற ஒரு மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் போராடி வளர்ச்சித் திட்டங்களுக்குக்கூட போதுமான நிதியை வாங்க முடியவில்லை என்றால் அதற்குப் பிறகு வளர்ச்சித் திட்டங்கள் எப்படி நடைபெறும்; உங்களுடைய போராட்ட குணம் என்ன ஆனது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தேசம் பூராவிலும் இருக்கின்ற அத்தனை மாநிலங்களிலும் இந்த வீட்டு வசதியைப் பொறுத்தவரையில் ஏனோ தானோ என்ற முறையில் மத்திய ஆட்சி தருகிற நிதியை அப்படியே அவர்களுக்கு ரொக்கமாகக் கொடுத்துவிட்டோ அல்லது அவரவர் இஷ்டத்திற்குக் கட்டுப்படியான திட்டங்களைத்தான் அமல்படுத்தி வருவதாக நான் கேட்டவரையில், போய்ப் பார்த்தவரையில் தெரிகிறது. ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், இன்றைய முதல்வர் அவர்கள்தான் இந்தத் திட்டத்தையே உருவாக்கி, இது எப்படியும் கான்கிரீட் வீடாகத்தான் இருக்கவேண்டும் என்ற நோக்கத்தில், மத்திய அரசு எவ்வளவு தந்தாலும், தனித்தனியாக

கூரைக்கென மேல் ஓட்டிற்கு 7,000 ரூபாயில் தொடங்கி, ஒரு வீட்டிற்கு 10,000 ரூபாய் வரை கொடுக்கப்பட்டு, சென்ற ஆண்டு மட்டும், கொடுத்த வீட்டைக் குறைத்த காரணத்தால் எடுத்துக்கொள்ளப்பட்ட பணி முடிக்கப்பட வேண்டும் என்பதற்காக, மத்திய அரசாங்கம் ஏற்கெனவே 20:80 என்ற அடிப்படையில் கொடுத்து வந்ததை மாற்றி, இந்த முறை நாம் 60:40, தமிழ்நாடு அரசாங்கம் ஏறத்தாழ 41 கோடி ரூபாய் அதிகமாகக் கொடுத்து, 60 சதவீதப் பங்கை நாம் கொடுத்து, இந்த வீட்டைக் கட்டி முடித்திருக்கிறோம். இதைத்தான் இந்த நேரத்தில் என்னால் தெரிவிக்கமுடியும். மத்திய அரசாங்கத்தில் போராடி, வாதாடிப் பணம் பெறுவது கடினம் என்று நீங்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால், இந்த அரசு செய்திருப்பதைப்போல, மற்ற மாநிலங்களில் செய்திருந்தால்தான், இதைக் குறைவு என்று எடுத்திருக்க முடியும். நாம் இதை அதிகக் கவனத்தோடும், அதிக முறையாகவும் செய்து கொண்டிருக்கிறோம்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அதேபோல, நமக்கு நாமே திட்டத்தில் முதன்முதலாக அறிவிக்கப்பட்ட நேரத்தில் ஏராளமான பணம் வந்தது. ஆர்வத்தோடு பலர் வேலை செய்தார்கள். அதன் காரணமாக, நாங்களெல்லாம் நமக்கு நாமே திட்டத்தில் 'நீங்கள் நான்கில் ஒரு பங்கு கட்டினால் போதும், பணம் வரும்' என்று சொல்லி, பலர் பணத்தை ஊராட்சி ஒன்றியத்திலிருந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் வரை கட்டிவிட்டு ஓராண்டு காலமாகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உழவர் சந்தையைப் பொறுத்தவரை நான் உழவர் சந்தை விழாவில் நம்முடைய முதலமைச்சர் அவர்களோடு பரமக்குடியில் கலந்துகொண்டேன். இது, ஏழையெளிய விவசாய மக்களுக்கு ஓர் அருமையான திட்டம் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், இந்த உழவர் சந்தை சில இடங்களில் வெற்றிகரமாக இருக்கிறது. சமீபத்திலே நான் சேலத்திற்குச் சென்றிருந்தேன். சேலத்திலே எல்லோரும் சொன்னார்கள். திருநெல்வேலியில் போய்க் கேட்டேன். திருநெல்வேலியில் என்ன சொன்னார்கள் என்றால், 'என்னங்க, வியாபாரி அதிக விலை கேட்கிறான், இந்த உழவர் சந்தையிலே போய் நாங்கள் குறைந்த விலைக்கு விற்க வேண்டியிருக்கிறது' என்று



சொன்னார்கள். 'ஏன் அப்படி விற்கிறீர்கள்' என்று கேட்டேன். திருநெல்வேலி டவுனிலே இப்படி ஒரு இடம் எங்களுக்குக் கிடைக்காது. பரம்பரையாக இந்த இடத்தை நாங்கள் அனுபவித்துக் கொள்ளலாமே என்பதற்காக நஷ்டத்திலே விற்றுக் கொண்டிருக்கிறோம் என்று அந்த விவசாயிகள் சொல்கிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், ஹிட்லர் தன்னுடைய ஆட்சி எப்படி நடைபெறுகிறது என்று பார்ப்பதற்கு ஒரு சினிமா தியேட்டருக்குப் போயிருக்கிறார். சினிமா தியேட்டரில் இடையிலே ஹிட்லர் என்று ஒரு பெயர் வருமாம். வந்தவுடனே எல்லோரும் எழுந்து நின்று ஒரு சல்யூட் அடிக்க வேண்டும். அப்பொழுது ஹிட்லர் என்ன பண்ணியிருக்கிறார் என்றால் 'நான்தானே ஹிட்லர்' என்று உட்கார்ந்து கொண்டு இருந்திருக்கிறார். உடனே பக்கத்தில் இருந்தவன் சொல்லியிருக்கிறான், "ஏம்பா, உன்னை மாதிரி இந்த ஹிட்லர் எனக்கும் பிடிக்காது; உன்னை மாதிரி நான் உட்கார்ந்திருந்தால் என்னுடைய தலை போய்விடும் என்று பயந்து கொண்டுதான் எழுந்து நிற்கிறேன். அதனால், நீயும் எழுந்து நில்" என்று சொன்னதாக ஒரு வரலாறு உண்டு. அதுமாதிரி இந்த உழவர் சந்தை நல்ல திட்டமாக இருந்தாலும்கூட, அதில் முறையாக விவசாயிகளும் பயன்பெறவேண்டும், அதை வாங்குபவர்களும் பயன்பெறுகின்ற வகையில், சிறப்பான முறையில் செய்யவேண்டும். இப்போது என் ஊரிலே, பரமக்குடியிலே, 82 கிராமங்களை எடுத்து இருக்கிறார்கள். 82 கிராமங்களில் பல ஊர்களிலே குடிப்பதற்குக்கூட தண்ணீர் கிடையாது. விவசாயம் பண்ணவே வழி கிடையாது. அவர்கள் எப்படி அங்கேயிருந்து காய்கறிகளை உற்பத்தி செய்து, பரமக்குடிக்குக் கொண்டு வந்து விற்பார்கள்? வியாபாரிகளிடத்திலே இருந்துதான் வாங்கி விற்க வேண்டும்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தலையிடுவதற்கு மன்னித்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் இது என்னுடைய இலாகா இல்லை. உழவர் சந்தைக்குப் போனவன் என்ற காரணத்தினாலே அதைச் சொல்ல விரும்புகிறேன். உழவர் சந்தை என்பது, உழவர்களுக்கும், விவசாயிகளுக்கும் அவர்கள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களை வாங்குபவர்களுக்கும் இடையில், தரகர் இல்லாமல் நேரடியாக வாங்குவதற்கு வாய்ப்பு அளிப்பது. நேரடியாக மக்கள் வாங்குகிறபோது, எந்த அளவு அவர்களால் கொடுக்க

முடிகிறதோ, எந்த அளவு இவர்களால் விற்க முடிகிறதோ - அது அந்த இடத்தில் உருவாகிற நிலை - அந்த நிலையை வைத்து, அங்கேயே ஒரு விலையும் தீர்மானிக்கப்படுகிறது. இடையிலே வாங்கி விற்பவர்கள் என்று யாராவது ஏற்பட்டால், அதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும்; வாங்குபவர்களுக்கும் விலை ஏறும் என்ற காரணத்தால், நேர் உறவை ஏற்படுத்துவதற்கு இந்த உழவர் சந்தை நடைமுறைப்படுத்தப்பட்டு, வெற்றி பெற்றிருக்கிறது. அதே நேரத்தில், விவசாயமே செய்யாதவர்கள் என்ன செய்வது என்ற கேள்விக்கு இதிலே இடம் இல்லை.

*திரு. சோ. பாலகிருஷ்ணன்:* இதிலே நான் என்ன சொல்கிறேன் என்றால், இது தவறு என்று நான் சொல்லவில்லை. விவசாயிகள் காய்கறிகளைக் கொண்டு வருவதற்கு, அவர்களுக்கு அந்த உற்பத்திக்கு வழி பண்ணிக் கொடுக்க வேண்டுமல்லவா? அதை விட்டுவிட்டு, வெறும் சந்தைக்கு மட்டும் வா என்றால், அவர்கள் வியாபாரிகளிடத்தில்தான் காய்கறிளை வாங்கிக் கொண்டு வந்து சந்தையில் விற்பார்கள். ஏனென்றால், அந்த இடம், பரமக்குடி என்று எடுத்துக்கொண்டால், சதுர அடி 1,000 ரூபாய்.

முற்பகல் 10-55

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவர் சந்தைக்கு விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய காய்கறிகளைக் கொண்டு வந்து அவர்களுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும் என்பதும் அதேநேரத்தில் நுகர்வோர்களுக்கும் குறைந்த விலையில் காய்கறிகள் கிடைக்க வேண்டுமென்பதற்காகத்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்து, தமிழகத்திலே இன்றைக்கு உழவர் சந்தைகளை ஆரம்பித்து வருகிறோம். திருநெல்வேலி மாவட்டத்திலே விவசாயிகள் கொண்டு வந்து குறைந்த விலைக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது என்று குறைபட்டுக் கொண்டார்கள் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். எந்த உழவர் சந்தையிலும் அதுபோன்ற நிலை இல்லை. எப்படி விலையை நிர்ணயிக்கிறோம் என்றால் வெளி மார்கெட்டிலே என்ன விலைக்கு விற்கிறதோ அதை முதலில் போய்ப் பார்க்கிறோம். open market-லே காய்கறிகள் மொத்த விற்பனை (wholesale) 10 கிலோ அல்லது ஒரு



கிலோ என்ன விலைக்கு விற்கிறதோ அந்த விலையை அறிந்து கொண்டு உழவர் சந்தைக்கு அதிகாரிகள் வந்து, உழவர் சந்தைக்குக் காய்கறிகள் கொண்டு வந்த விவசாயிகளை எல்லாம் கூப்பிட்டு வெளி மார்கெட்டிலே இந்த விலை விற்கிறது; நாம் எத்தனை சதவீதம் கூடுதலாக வைக்கலாம், குறைவாக அல்ல, கூடுதலாக எத்தனை சதவிகிதம் வைக்கலாம்? 25 சதவீதமா, 30 சதவீதமா என்று விலையை விவசாயிகளை அழைத்து வைத்துப் பேசி வெளி மார்கெட்டை விடக் கூடுதல் விலையை 25 சதவீதத்திலிருந்து 30 சதவீதம் வரை சராசரியாக விலையை உயர்த்தி விற்கிறோம். மொத்த விற்பனை, wholesale market-லே கொண்டு போய் விற்றால் நஷ்டம் விவசாயிகளுக்கு. ஆகவே, இந்தக் கூடுதல் விலை விவசாயிகளுக்குக் கிடைக்கிறது. அதை வாங்குகிறபோது வாங்கக்கூடியவர்களுக்கும் குறைந்த விலையிலே கிடைக்கிறது.

*திரு. ச. அழகிரி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மார்கெட்டைவிட 20 சதவிகிதம் அதிகமாக விலை வைத்து....

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:* கொஞ்சம், தயவுசெய்து, நான் அமைச்சர் சொன்னதை மறுப்பதாக நினைக்கத் தேவையில்லை. ஒரு சின்ன விளக்கம். அவர் வார்த்தையைத் தவறாகச் சொல்லிவிட்டதாகத்தான் நான் கருதுகிறேன். விவசாயிகள், வியாபாரிகளுக்கு விற்கிறபோது, விற்கிற விலையைவிடக் கூடவும், ஆனால் வெளி மார்கெட்டிலே விற்கிற விலையைவிடக் குறைவாகவும் இங்கு விற்கப்படுகிறது. இது நான் நடைமுறையில் கோவை உழவர் சந்தையிலே அந்த மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே பேசியபோது அவர் சொன்னது. (குறுக்கீடு)

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* Wholesale price.

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:* வியாபாரிகளுக்கு விற்கிற விலையைவிடக் கூட விற்பதற்கு வாய்ப்பு உழவர்களுக்கு. ஆனால், வியாபாரிகள் வெளியிலே விற்கிற விலையைவிடக் குறைந்த விலையில் வாங்குவதற்கு நுகர்வோருக்கு வாய்ப்பு. அதிலே ஏதாவது சில இடங்களிலே குறைகள்கூட இருக்கலாம். அது வேறு. இந்த நடைமுறைக் கொள்கைதான் பின்பற்றப்படுகிறது.

*திரு. மு.அப்பாவு:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடம் பிடிப்பதற்காக அங்கே விவசாயிகள் போகிறார்கள் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அதிலே இடமே பிடிப்பதில்லை. யார் முன்னால் போகிறார்களோ, அவர்கள் கடை வைத்துக்கொள்ளலாம். மறுநாள் இவர்களுக்கு வரும். முதல் நாள் அவர்களுக்குப் போகும். அதனால் யாரும் நிரந்தரமாக இடம் பிடித்துக் கொள்வதே இல்லை.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** உழவர் சந்தையை நான் குறை சொல்கிறேன் என்று நினைக்காதீர்கள். அதில் இருக்கிற பிரச்சினைகளை, எனக்குத் தெரிந்த பிரச்சினைகளை, நான் கேட்டதை உங்களிடம் சொல்கிறேன். நீங்கள் அதை இன்னும் கொஞ்சம் கவனமாகப் பார்த்துச் செய்தால் நல்லது. நல்ல திட்டம். அதாவது திட்டம் செயல்படுவது செம்மையாக இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய குறிக்கோள்.

அடுத்து, மொழிக் கொள்கை. இப்போது மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் ஒன்றிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை தமிழில்தான் பாடம் நடத்த வேண்டும் என்று ஒரு அருமையான திட்டத்தை நம்முடைய அரசு அறிவித்திருக்கிறது. அதை எதிர்த்து நீதி மன்றத்திற்கெல்லாம் சென்றிருக்கிறார்கள். இதிலே என்ன வென்றால் நம்முடைய கல்வித் தரம் என்பது மிக மோசமாக இருக்கிறது என்பதற்காகத்தான் அவர்கள் எல்லாம் இந்த மாதிரி மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்குப் போகிறார்களே தவிர, இங்கே இருக்கிற 6 கோடி தமிழர்களும் தமிழுக்கு விரோதி என்று நீங்கள் நினைக்கக் கூடாது. நம்முடைய தரம் சிறப்பாக இருந்தால், அங்கே போக மாட்டார்கள். உதாரணத்திற்கு ஒன்றைப் படித்துக் காட்டுகிறேன், பாருங்கள். ஐந்தாம் வகுப்பு முடிக்கும் நிலையில் பல மாணவர்களுக்கு எழுத்தறிவு, எண்ணறிவு இல்லை. இதை நான் சொல்லவில்லை. யார் சொல்கிறார் என்பதைப் பின்னால் சொல்கிறேன். "கற்றலில் இனிமை என்ற முறையில் கற்பித்தால் கல்வி மேம்பாடு அடையும்" என்று பள்ளிக் கல்வித் துறை, கூடுதல் செயலர், திரு. விஜயகுமார் தெரிவித்துள்ளார். கூடுதல் செயலர் நம்முடைய பேராசிரியருக்குக் கீழே வேலை செய்கின்ற ஓர் உயர் அதிகாரியே சொல்கிறார். என்ன சொல்கிறார் என்றால், "பள்ளிகளில் தரமான கல்வி இல்லாமையால் சமுதாயம் பள்ளிகளின் மீது நம்பிக்கை இழந்துவிட்டது. இதுதான் இன்றைக்கு நிதர்சனமான ஓர் உண்மை. ஆகவே, நம்முடைய பள்ளிக்கூடங்களிலே எண்ணறிவும் கிடையாது, எழுத்தறிவும் கிடையாது என்கிற சூழ்நிலையில் எப்படியாவது தம்முடைய பணத்தைச் செலவு செய்து மாணவர்களுக்கு உயர் கல்வி கொடுக்க வேண்டும் என்ற ஆசையிலே அவர்கள் அனுப்புகிறார்கள். ஆகவே, நம்முடைய நாட்டில் படிக்கின்ற 80 இலட்சம் குழந்தைகளுக்கும் தரமான கல்வி, ஆரம்பக் கல்வி அளிக்க வேண்டியது நம்முடைய அரசின் கடமை. அதிலே மிகக் கவனமாக இருக்க வேண்டும்." இங்கே அமைச்சர்கள் எல்லாம் இருக்கிறீர்கள். எந்த ஊருக்காவது போய் ..... (குறுக்கீடு)



முற்பகல் 11-00

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கின்ற நேரத்திலே ஒன்றாவது வகுப்பு முதல் ஐந்தாவது வகுப்பு வரையிலே தமிழ் கட்டாயம் என்பதை வரவேற்பதாகச் சொன்னார்கள். அதேநேரத்திலே வழக்கு மன்றத்திற்குச் சென்றதையும் சுட்டிக்காட்டி, தரமான கல்வி பெறுவதற்காக அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்றதாகவும், பெற்றோர்களே, அதை ஆதரிப்பதாகவும் சொல்கிறார்கள். அதைப் பார்க்கின்ற நேரத்திலே, தமிழ் மொழிப் பாடம் தரமான பாடமாக இருக்காதா, அதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே என்ன point of order இருக்கிறது? அவருடைய கருத்தைச் சொல்லி முடிக்கவில்லை. அதற்குள்ளே point of order-ல் பேசினால் எப்படி?

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அடுத்தது, ரேஷன் அரிசியைப் பற்றி நேற்றைக்கு மிக விரிவாக விளக்கமாகச் சொல்லியாகிவிட்டது.

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறு விளக்கம் மட்டும் சொல்ல விரும்புகிறேன். அவர் சொன்ன கருத்திலே ஒன்றும் பெரிய மாறுபாடு இல்லை. கல்வி தரக்குறைவாக இருக்கிறது என்பதை உயர்த்துவதற்குத் தொடர்ந்து முயற்சிக்கிறோம். பல பணிகள் அதற்காக செய்யப்படுகின்றன. திரு. விஜயகுமார் அவர்கள் பேசியதுகூட, ஆசிரியர்களுக்கு அவர்கள் இனிமையாகக் கற்பித்தல் எப்படி என்பதைப் பற்றி, அவர்களுக்கே ஒரு பயிற்சி அவர் கொடுத்தார். அந்த இடத்தில் "உங்களுடைய பணியில் எழுத்தறிவும், எண்ணறிவும் தகுந்த முறையில் குழந்தைகளிடத்திலே வளர்க்கப்படவில்லை, அதை நீங்கள் நடத்துகின்ற முறையினாலே, அந்தத் தெளிவு மாணவர்களுக்கு அதிகம் கிடைக்கவில்லை; மாணவர்கள், அந்தக் கருத்தை ஏற்பதற்கு ஏற்ற வகையில் அவர்களை உற்சாகப்படுத்தி, மகிழ்ச்சியாகக் கதைகள் சொல்லி, ஆசிரியர்கள் சொல்கின்ற எண்ணங்களைப் புரிய வைப்பதற்கும், விரும்பி ஏற்பதற்கும் ஏற்ற வழிமுறையைக் கையாளவும் ஆட்டம் பாட்டத்தோடு பாடம் சொல்லித் தர வேண்டும்'' என்று தெரிவிக்க, விஜயகுமார் அவர்கள் அதிலே மிகுந்த ஈடுபாட்டோடு ஆசிரியர்களைக் கூட்டி, அந்தக் கூட்டத்திலே பேசிய பேச்சாகத்தான் அது இருக்க வேண்டும். ஆகவே, ஆசிரியர்கள் அதை உணர வேண்டுமென்பதற்காக அவர்கள் சொன்னது. பள்ளிகளிலே அடியோடு எண்ணும், எழுத்தும் கற்பிக்கவில்லையென்றால் எஸ்.எஸ்.எல்.சி.யிலே இவ்வளவு பேர் தேறமாட்டார்கள்.

*திரு. சோ. பாலகிருஷ்ணன்:* அடுத்தபடியாக ரேஷன் அரிசி பற்றி நேற்று நன்கு விரிவாகப் பேசி அதிலேகூட, நாங்கள் ஒரு நீதிபதியினுடைய விசாரணையைக் கேட்டோம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள், நீதிபதியெல்லாம் வேண்டாம் என்று சொன்னார்கள். அதிலே, நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. இந்த அரிசிப் பிரச்சினையில் மட்டும் நீங்கள் வெற்றி பெற்று விட்டீர்கள் என்றால், உங்களுக்கு மக்கள் நிச்சயமாக ஆதரவு கொடுப்பார்கள். இப்போதுகூட, சூழ்நிலையைப் பாருங்கள். என்னுடைய முதுகுளத்தூர் தொகுதியிலே, இலட்சுமணன் என்பவர் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் என்று வைத்திருக்கிறார். அது கட்சி சார்பில்லாத ஒரு அருமையான அமைப்பு. அவர் எழுதுகிறார் பாருங்கள் கடிதம்.



"இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தாலுகா, மிகவும் பின் தங்கிய பகுதியாகும். பெரும்பகுதி மக்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடியவர்கள். இவர்களுக்கு ரேஷன் பொருட்கள் ஒழுங்காகக் கிடைப்பது இல்லை. பெருவாரியான விவசாயக் கூட்டுறவு தொடக்க வங்கித் தலைவர்கள் ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்கள் என்பதால், பொது மக்கள் ரேஷன் பொருட்கள் கேட்க பயப்படுகிறார்கள். இந்த ஆண்டு பருவ மழையின்மையால் கடும் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. ரேஷன் பொருட்கள் ஒழுங்காக விநியோகம் செய்யக் கோரி அதிகாரிகளிடம் மக்கள் மனுக்கள் கொடுத்தும் பயனில்லை. இந்த முறையீடுகளை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரும் நோக்கத்தில், இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தின் சார்பில் பத்தாயிரம் மக்களைச் சந்தித்து கையெழுத்து வாங்கி, கையெழுத்துப் படிவங்கள் இத்துடன் முதலமைச்சருக்கு அனுப்பியிருக்கிறோம், என்று கடிதம் போடுகிறார்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. குத்தாலம் பி. கல்யாணம் தலைமை)

அடுத்தும் சொல்கிறார்; 'வட்டாட்சியர் அலுவலகத்திற்கு 100 மீட்டர் தூரம் உள்ள ரேஷன் கடைகளில் காலை 5 மணி முதல் 9 மணி வரை, மாலை 5 மணி முதல் இரவு 7 மணி வரை மாதத்திற்கு ஒரு நாள் மட்டும் 10 கிலோ அரிசி, ரூபாய் 40-க்கு விநியோகம் செய்கிறார்கள். அன்று அதை வாங்காவிட்டால், அரிசி கிடைக்காது. வட்டாட்சியர் அவர்களோ, வட்ட வழங்கல் அதிகாரி அவர்களோ கண்டுகொள்வதில்லை. அதிகாலை அல்லது மாலையில் ஒரு நாள் மட்டும் சீனி, ஒரு நாள் மட்டும் மண்ணெண்ணெய் விநியோகிக்கிறார்கள். அந்த நாட்களில் சீனியோ, மண்ணெண்ணெய்யோ வாங்காவிட்டால் கிடைக்காது." இந்த மாதிரி அவர் எழுதிக்கொண்டே போகிறார். படித்துக் கொண்டு போனால் நேரம் ஆகிவிடும். இதையெல்லாம் அவர் அதிகாரிகளிடத்திலேயும் போய்க் கேட்டிருக்கிறார். அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள் என்றால், அதிகாரிகள் கூறியது 'நாங்கள் ரேஷன் பொருட்கள் ஒழுங்காக வழங்கவேண்டுமென கூறும்போது, ரேஷன் கடைக்காரர்கள் கேட்பதில்லை. அவர்கள் மீது எங்களால் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. காரணம் அவர்கள் ஆளுங்கட்சிக்காரர்கள்.' பொதுக் கருத்து, தினந்தோறும் ரேஷன் கடை திறந்து பொருட்கள் விநியோகம்

செய்ய வேண்டும். அதிகபட்சம் ஒரு நாளைக்கு 100 கார்டுகளுக்கு பொருட்கள் வழங்கவேண்டும். பண்டிகைக் காலங்களில் கூடுதலாக அரிசி வழங்கவேண்டும். மாவட்ட ஆட்சியாளர் நேரடியாகக் கவனம் செலுத்த வேண்டும். மக்களிடம் கருத்து கேட்க வேண்டும்" என்று ஒரு கடிதமே எழுதியிருக்கிறார்.

முற்பகல் 11-05

அடுத்து, கலியமூர்த்தி, ஸ்ரீதரன், மதிவாணன், ரவி, வேலாயுதம், ஜெகதீசன், கிருஷ்ணமூர்த்தி, இவர்கள் எல்லாம் விற்பனையாளர்கள் நலச் சங்கம், திருத்தணி வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம், அக்கைய நாயுடு சாலை, திருத்தணி, அவர்கள் என்ன எழுதுகிறார்கள் என்றால், அவர்கள் யாருக்கு எழுதுகிறார்கள் என்றால், திரு.வேதரத்தினம், கண்காணிப்பாளர், லஞ்சம் ஒழிப்பு மற்றும் ஊழல் தடுப்புப் பிரிவு, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்கள், காஞ்சிபுரம். அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால் எங்களுக்கு அதிகாரிகள் தொல்லை அதிகமாக இருக்கிறது. பொது மக்களை எங்களாலே திருப்தி பண்ண முடியவில்லை என்று அவர்கள் ஒரு விளக்கமான கடிதம் எழுதி, அதனுடைய நகலை முதலமைச்சர் அவர்களுக்கும் எனக்கும் போட்டிருக்கிறார்கள். இந்த அரிசிப் பிரச்சினையிலே மிகக் கவனமாக இருக்க வேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நேற்றுகூட தூத்துக்குடியிலேயிருந்து ஒரு தகவல், என்ன வருகிறது என்றால், வாராவாரம் கப்பலிலே அரிசி போய்க் கொண்டேயிருக்கிறது. இப்பொழுது ரயிலிலே வருகிற அரிசியைத்தான் நாம் கண்டுபிடிக்க முடிந்தது. கப்பலிலே போகிற அரிசியைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆகவே, இதற்கு ஒரு நீதி விசாரணை வேண்டும் என்பதையும் நான் மறுபடியும் நம்முடைய முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இப்பொழுது charge sheet போடுகிற level-லே இருக்கிறது என்று சொன்னார்கள். ராஜீவ் காந்தி கொலை வழக்கிலேகூடத்தான் charge sheet எல்லாம் போட்டார்கள். இருந்தும்கூட, ஒரு நீதி விசாரணை நடத்தினார்கள் இல்லையா? அதுமாதிரி இதற்கும் ஓர் உயர் நீதிமன்ற நீதிபதியை வைத்து விரிவான விசாரணை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, நம்முடைய விவசாயிகளுக்காக நம்முடைய அரசாங்கம் எவ்வளவோ செய்தும்கூட, இன்னும் அவர்களுடைய குறைகள் தீர்க்கப்படவில்லை என்பதைச் சொல்லி நான் இங்கே சில விஷயங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கரும்புக்கு, டன்னுக்கு 1000 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று நாங்கள் தமிழ் மாநிலக் காங்கிரசிலே ஒரு தீர்மானம் போட்டோம். உடனே, நம்முடைய அமைச்சர் மாண்புமிகு திரு. வீரபாண்டி ஆறுமுகம் ஒரு விளக்கம் கொடுத்தார். அடுத்த மாநிலங்களில் என்ன கொடுக்கிறார்களோ அதன்படி கொடுத்தால் நீங்கள் ஏற்றுக்கொள்வதாக இருந்தால், இன்னும் குறைவாகப் போய்விடுமே; உங்களுக்கு விவரம் தெரியாமல் சொல்கிறீர்களே என்று சொன்னார்.

ஒரு நண்பர் கடிதம் எழுதியிருக்கிறார். அரியானாவில் கரும்பு விலை ஒரு டன் முன்பட்ட வகை 950 ரூபாய்.அதாவது 1998-99-ல் கொடுத்திருக்கிறார்கள். 1999-2000-ல் 1,100 ரூபாய் கொடுத்து இருக்கிறார்கள். நடு பட்ட வகை 930 ரூபாய் 1998-99-ல் கொடுத்திருக்கிறார்கள். 1999-2000-ல் 1,060 ரூபாய் கொடுத்து இருக்கிறார்கள். தாமத வகை 1998-99-ல் 910 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். 1999-2000-ல் 1,040 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். இடுபொருட்களின் விலை உயர்வைக் கணக்கில் கொண்டு மேற்கண்ட விலையை அரியானா அரசு அறிவித்துள்ளது. மேலும், கரும்பு விவசாயிகளுக்கு ஆலைகள் ஒரு வார காலத்திற்குள் பணம் அளிக்க வேண்டுமென்றும், 14 நாட்களுக்குப் பிறகு அளிக்கப்படும் பணத்திற்கு 15 சதவிகிதம் வட்டியுடன் அளிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது. தமிழக அரசு அறிவிப்பது எப்போதோ என்று ஒரு கட்டுரை வந்திருக்கிறது. ஆகவே, நாம் 1000 ரூபாய் கொடுப்பது என்பது ஒரு பெரிய காரியமல்ல. ஆகவே, அதைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** அரியானா மாநிலத்தில் மொத்தம் கட்டுமானம் ஒரு டன்னுக்கு எவ்வளவு என்பது புள்ளிவிவரம் இருந்து, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் தந்தால் நல்லது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** Recovery தான் அது. அந்த மூன்றும் recovery தான். அதாவது முன் பட்ட வகை, நடு பட்ட வகை, தாமத வகை என்றால் recovery தானே.

அடுத்து, நம்முடைய தஞ்சாவூர் மாவட்டத்தில், சீர்காழி பகுதியில் நெல், அரசாங்கத்தால் ஒரு மாதத்திற்கு தோராயமாக இரண்டரை இலட்சம் ரூபாய்க்குத்தான் வாங்க முடியும் என்று சொல்கிறார்கள். ஆச்சாள்புரம் கிராமத்தில் T.N.C.S.C. கிடங்கு முன் டன் கணக்கில் மூட்டைகள் அடுக்கப்பட்டிருக்கின்றன. விவசாயிகள் சாகுபடி செய்தும் பணம் கிடைக்காமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது அரசாங்கத்தால் நல்ல விதத்தில் தீர்வு காண முடியாத நிலையில், அவர்களுடைய நிர்வாகக் குறையாகக் கருதப்படுகிறது என்று எழுதி இருக்கிறார்கள்.

முற்பகல் 11-10

அடுத்து, நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நீலகிரி மாவட்ட சர்வ கட்சித் தலைவர்கள் வந்து தேயிலை விலை வீழ்ச்சி பற்றி ஒரு மனு கொடுத்திருக்கிறார்கள். அவர்களும் உடனடியாகக் கவனிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை உடனே மத்திய அரசிடம் சொல்லி - ரூ.20-க்கு விற்றுக்கொண்டிருந்த ஒரு கிலோ தேயிலை இன்று வெறும் ரூ.6-க்குத் தான் விற்கிறது. எங்களாலே வாழவே முடியவில்லை என்று வருத்தத்தோடு எழுதியிருக்கிறார்கள் - அதையும் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய அரசு போட்டிருக்கிற வரியையும் நீக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதையும் முதலமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்.

அடுத்தபடியாக, பூம்புகார் கப்பல் கழகம். 3 கப்பல்கள் நம்மிடம் இருக்கின்றன. பெரியார், அண்ணா, காமராஜ். காமராஜ் கப்பலை சிங்கப்பூரிலே arrest பண்ணி வைத்துவிட்டார்கள். அந்த arrest இன்றைக்கு, நேற்று இல்லை. பிப்ரவரி மாதம் 16 ஆம் தேதி arrest பண்ணி நடுக்கடலிலே வைத்திருக்கிறார்கள். அதிலே 46 பேர், மாலுமி உட்பட, உணவிற்கும் மற்ற காரியங்களுக்கும் வழியில்லாமல் இன்று உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் சொன்னார்கள் என்றால், அந்தக் கப்பலை repair பார்ப்பதற்காக சீனாவிற்கு அனுப்பியிருக்கிறார்கள் என்று. நமக்கு



கப்பல்களை repair பார்ப்பதற்கு அருமையான கொச்சின் துறைமுகம் இருக்கிறது. இல்லையென்றால் பக்கத்தில் சிலோன் துறைமுகம் இருக்கிறது. அதுவும் இல்லையென்றால், சிங்கப்பூரிலே இந்தக் கப்பல் கட்டிய இடம், அங்கேயாவது repair-க்குக் கொடுத்திருக்கலாம். அதையும் விட்டுவிட்டு சீனாவிற்கு அனுப்பியிருக்கிறார்கள். சீனாவிற்குப் போய் வருவதற்கு எவ்வளவு ஆகும், என்ன ஏது என்பதெல்லாம் நமக்கு மிக நன்றாகத் தெரியும். அதிலே பலவிதமான குறைபாடுகள், ஊழல்கள் நடந்திருப்பதாக அந்தத் துறையிலேயிருந்து ஏராளமான மனுக்கள் வந்திருக்கின்றன. அதாவது இதிலே ஏன் arrest பண்ணி வைத்திருக்கிறார்கள் என்றால், நம்முடைய அரசாங்கம் ரூ.50 கோடி Essar கம்பெனிக்கு கப்பல் வாடகைக்கு எடுத்ததற்கான பாக்கிப் பணம் கொடுக்க வேண்டுமாம். இந்தியாவிலே எங்கேயுமே நம்முடைய கப்பல்களை arrest பண்ணமுடியாது, நம்முடைய இந்திய அரசமைப்புச் சட்டப்படி. அதனாலே அது சிங்கப்பூருக்கு எப்போது போகும் என்று பார்த்து அங்கே arrest பண்ணி வைத்துவிட்டார்கள். அதுசம்பந்தமாக அங்கேயிருந்து ஏராளமான தந்திகள், மனுக்கள் நம்முடைய அரசுக்கு அனுப்பியும்கூட, இதுவரை எந்தவிதமான கவனிப்பும் இல்லாமல், அந்தக் கப்பலும், கப்பலைச் சேர்ந்த மாலுமிகளும், ஊழியர்களும் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். Essar Shipping Limited நிறுவனத்தாருக்கும், Chowgule Steam Shipping Limited நிறுவனத்திற்கும் அரசு கொடுக்க வேண்டிய கடன் பாக்கிக்காக சிங்கப்பூரில் வழக்குப் போட்டு அதன் மூலம் நம்முடைய கப்பலை நடுக் கடலில் கைப்பற்றியதால் அந்தக் கப்பலில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிற கப்பல் தலைவர் உட்பட 46 பேரின் பொருட்டும், அதனால் அரசுக்கு ஏற்பட்டுள்ள பெருத்த நஷ்டத்தின் பொருட்டும், இந்த அவையை உடனடியாக ஒத்திவைக்க வேண்டுமென்று நான் ஒரு ஒத்திவைப்பு அறிவிப்பைக்கூட கொடுத்தேன். அது அவையில் வரவில்லை. எனவே, இன்றைக்கு இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகிறேன். நம்முடைய அரசு இதற்குச் சரியான விளக்கம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு [illegible] தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, [illegible] காமராஜ் கப்பல்

Poompuhar Shipping Corporation-க்கு உரிமையானது. சிங்கப்பூரிலே அது கைது செய்யப்பட்டு வைக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மையான செய்தி. ஆனால், அரசு கொடுக்க வேண்டிய கடனுக்காக அது கைது செய்யப்-பட்டிருக்கிறது என்று அவர் சொல்வது தவறான செய்தியாகும். நாட்டிலே வில்லங்கப் பேர்வழி என்று சில பேர் இருப்பார்கள். அதைப்போல, Essar Company ஒரு வில்லங்கப் பேர்வழி. Chowgule Steam Shipping Company ஒரு வில்லங்கப் பேர்வழி. வில்லங்கப்படுத்தியிருக்கிறார்கள். என்ன பாக்கி என்றால், இந்த Essar நிறுவனத்தின் கப்பல் அல்லது Chowgule Company-யினுடைய கப்பல் நம்முடைய மின்சார வாரியத்திற்கு நிலக்கரி கொண்டு வருவதற்காக வாடகைக்கு அமர்த்தப்பட்ட கம்பெனிகள். அவர்கள் வாடகை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த வாடகைக்கு நம்முடைய அரசு விற்பனை வரி போட்டிருக்கிறது. அந்த வாடகைக்கு ஒரு விற்பனை வரி. அந்த விற்பனை வரி பாக்கியை அவர்கள்தான் செலுத்த வேண்டும். அந்த விற்பனை வரி பாக்கியை Poompuhar Shipping Corporationதான் கட்ட வேண்டுமென்று அவர்கள் ஒரு விண்ணப்பம் கொடுத்துவிட்டார்கள். நாம் அதற்குத் திருப்பி ஒரு பதில் சொல்லிவிட்டோம். அது எங்களைக் கட்டுப்படுத்தாது. விற்பனை வரி செலுத்தவேண்டியது உங்கள் பொறுப்பு என்று சொல்லிவிட்டோம். ஆனால், அவர்கள் இதை ஒரு சாக்காக வைத்து, அவர் சொன்னதைப் போல, இங்கே ஓர் ஆர்டர் வாங்க முடியாது, ஓர் அனுமதி வாங்க முடியாது என்று நினைத்து சிங்கப்பூரிலே போய் தவறான ஒரு தகவலைக் கொடுத்து, அந்த சிங்கப்பூர் நீதிமன்றத்தின் மூலமாக அந்தக் கப்பலைக் கைது செய்திருக்கிறார்கள்.

முற்பகல் 11-15

நான் உடனடியாக அந்தக் கைதை ரத்து செய்யும்படி Director General of Shipping அவரிடத்திலே பேச்சு வார்த்தை நடத்தி, அந்த Essar Company-யும் பேச்சு வார்த்தை நடத்தி அவர்கள் ஒத்துக்கொண்டு எழுதிக் கொடுத்துவிட்டார்கள். என்னுடைய இந்த உத்தரவை வாபஸ் பெற்றுக்கொள்கிறேன்; என்னுடைய மனுவையும் வாபஸ் பெற்றுக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டார். அதேநேரத்தில் அவர் வாபஸ் வாங்குகிறார் என்று தெரிந்து Chowgule கம்பெனிக்காரர் இன்னொரு மனுவை நம்முடைய சென்னை உயர் நீதிமன்றத்திலே கொடுத்து ஒரு stay order வாங்கினார். அது என்ன stay என்றால்



ஏற்கெனவே அவருக்கு ஒரு award pass ஆகியிருக்கிறது. Arbitration-லே pending இருக்கிறபோதே அதிலும் தவறான தகவல் கொடுத்து நீதிமன்றத்திலே stay வாங்கியிருக்கிறார்கள். அந்த நேரத்திலே நம்முடைய நீதிமன்றத்தினுடைய வழக்கறிஞர்கள் எல்லாம் வேலை நிறுத்தத்தில் இருந்தார்கள். நம்முடைய Shipping Corporation பொது மேலாளர் நேரடியாக நீதிபதியை அவருடைய அறையிலே சந்தித்து நேரடியாக மனு கொடுத்து அந்த stay order vacate ஆகிவிட்டது. அங்கே இருக்கக்கூடிய எந்த ஊழியரும் கஷ்டப்படவில்லை. அவர்கள் பராமரிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய எல்லா உதவிகளும் செய்யப்படுகின்றன. அதனால் இது வில்லங்கப் பேர்வழிகள் ஏற்படுத்திய தகராறுதானே தவிர நாம் கொடுக்க வேண்டிய பணம் ஒன்றும் இல்லை. ஒன்று arbitration-லே இருக்கிறது. இன்னொன்று அவர்களே வாபஸ் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் தகவல்களை எல்லாம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் என்னிடத்திலேகூடக் கேட்கலாம் அல்லது இன்னும் விரிவாக விசாரணை செய்து பேசலாம். யாரோ எழுதுகிற கடிதத்தை எல்லாம் வைத்துக்கொண்டு இப்படிச் சொல்கிறார்களே!

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நான் சட்டமன்றம் கூடிய அன்றைக்கே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தேன். நீங்கள் எடுத்திருந்தீர்கள் என்றால் பல விவரங்களை அதிலே பேசியிருக்கலாம். நீங்கள் எடுக்கவில்லை. தயவு செய்து அதைச் சீக்கிரமாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் அந்தக் கருத்திலே சொல்லவில்லை. நீங்கள் இரண்டு பேரும் ஒரே மாவட்டம். பக்கத்துப் பக்கத்து ஊர். அடிக்கடி சந்திக்கிறீர்கள். இதுகுறித்து என்ன என்று கேட்டுவிடலாம் என்கிறார்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அங்கே அந்தப் கப்பலில் இருக்கின்ற தொழிலாளர்களுக்கு விரைவிலே விடிவுகாலம் ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, நம்முடைய ரோடுகள் எல்லாம்...

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** ஒரே ஒரு தகவல். சீனாவிற்கு ஏன் அனுப்பினார்கள் என்று ஒன்றைக் கேட்டார்கள். அதில் ஊழல் நடந்திருக்கிறது என்று சொன்னார்கள்.

இது dry docking-க்கு அனுப்புவது கப்பலை overhauling பண்ணுவதற்காக. Tender விட்டுத்தான் அனுப்புகிறோம். அதில் கொச்சியிலிருந்தோ அல்லது இலங்கையிலிருந்தோ அல்லது சிங்கப்பூரிலிருந்தோ வந்த tender-ஐவிட சீனாவிலிருந்து வந்த tender தொகை மிக மிகக் குறைவு. ஆகவே, குறைந்த tender-லேதான் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைது செய்யப்பட்ட கப்பல் அமைச்சருடைய முயற்சியால் திரும்ப வந்துவிட்டதா அல்லது இன்னும் அது நடுக் கடலிலேயேதான் நிற்கிறதா என்கின்ற செய்தியை அவர் சொல்லவில்லையே? அதனுடைய விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** நடுக் கடலிலே ஒன்றும் நிற்கவில்லை. சிங்கப்பூர் துறைமுகத்திலே இருக்கிறது. அதுகுறித்து நீதிமன்ற ஆணைகள் எல்லாம் பெறப்பட்டிருக்கின்றன. நம்முடைய சென்னையிலே இருக்கக்கூடிய Poompuhar Shipping Corporation-க்குரிய வழக்கறிஞர்கள் அங்கே ஒரு வக்கீல் வைத்திருக்கிறார்கள். அவர்கள் மூலமாக அந்த நீதிமன்றத்திலே வழக்காட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. விரைவில் நம்முடைய கப்பல் மீட்கப்படும்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அடுத்தது நம்முடைய தமிழ்நாட்டில் சாலைகள் எல்லாம் மிக மோசமாக இருக்கின்றன. பாலங்கள் எல்லாம் நல்ல பாலங்களாகக் கட்டிக் கொண்டிருக் கிறீர்கள். சமீபத்தில் திருக்கடையூருக்கு நான் ஒரு மணிவிழாவிற்காகச் சென்றிருந்தேன். சீர்காழியிலிருந்து திருக்கடையூர் வரைக்கும் இருக்கிற அந்தச் சாலையைப் பார்த்து விட்டு - ஏனென்றால் அங்கே எல்லாம் ஓரளவு, பக்தர்கள்தான் வந்துகொண்டிருக்கிறார்கள். பெரிய மனிதர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கத்திற்கு மிகப் பெரிய கெட்ட பெயர். அங்கேயெல்லாம் அவர்கள் ஆண்டவனிடம் அருள் பெறுவதற்குச் செல்கிற நேரத்தில், அவர்கள் உங்களை வாழ்த்துவதற்குப் பதிலாக திட்டிக்கொண்டே இருக்கிறார்கள். ஆகவே, தயவுசெய்து இந்தச் சாலைகளையெல்லாம் ஒழுங்காகப் போடவேண்டும்.



என்னுடைய தொகுதியில் இருக்கிற சாலைகள் எல்லாம் ரொம்ப மோசமாக இருக்கின்றன. நம்முடைய அமைச்சரிடம் சொல்லிப் பார்த்தேன், ஒன்றும் நடக்கவில்லை. கடைசியில் முதலமைச்சரிடமே appeal-க்குப் போய்விட்டேன். முதலமைச்சர் அவர்கள் மிகப் பொறுப்போடு ஒரு அதிகாரியை அனுப்பி அந்தச் சாலைகளை எல்லாம் பார்த்துவிட்டு ஓர் அறிக்கை கொடுத்திருக் கிறார்கள். இப்போது விரைவிலேயே போட்டுவிடுவோம் என்று ஒரு உறுதி சொல்லப்பட்டிருக்கிறது.

அதேபோல, பல ஊர்கள். நேற்றுகூட திரு. ஈஸ்வரன் அவர்கள் பேசினார், சாலையெல்லாம் மிக மோசமாக இருக்கிறது என்ன செய்யப் போகிறார்கள் என்று. இதைவிட நம்முடைய கணேசன் அவர்கள் முக்கால் மணி நேரம் நம்முடைய முதலமைச்சரை வாழ்த்திவிட்டு கடைசியிலே பெரிய குண்டையே தூக்கிப் போட்டார். சாலையெல்லாம் சுத்த மோசம், உங்களுக்கு ரொம்ப கெட்ட பெயர் என்று பேசினார். 13 சாலைகள் சுத்த மோசம் என்று சொன்னார். ஆகவே, இந்தக் கடைசி ஆண்டிலாவது இதற்காக எங்கிருந்தாவது பணம் தேடி நம்முடைய தமிழகத்தில் இருக்கின்ற எல்லாச் சாலைகளையும் சரி செய்து, பேருந்துப் போக்குவரத்தை ஒழுங்கு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீடு கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்கவேண்டும். இந்தச் சாலைகள் பிரச்சினையிலே நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கேட்டிருக்கிறார்கள். அதுவும் தவறான தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். தவறான தகவல் என்றுகூடச் சொல்லமாட்டேன். அவர், எந்தச் சாலை மோசமாக இருக்கிறதோ அதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கொடுத்திருக்கிறார். எந்தெந்தச் சாலைகள் இந்த அரசாங்கம் வந்ததற்குப் பிறகு போடப்பட்டிருக்கிறது என்ற விவரத்தையும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே சொல்லியிருந்தால் நான் மகிழ்ச்சி

அடைந்திருப்பேன். அவர்களுடைய தொகுதியிலேயே குணவாசல், ஏரிவயல் சாலை ஆகிய சாலைகள் போடப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். எதிர்க்கட்சிகளினுடைய வேலையே, குறைகளைக் கண்டுபிடிப்பதுதான். நல்லவற்றையே சொல்லிக் கொண்டிருக்க எதிர்க்கட்சி தேவையில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி. எங்கள் வேலையை அவர்கள் எடுத்துக் கொண்டதற்காக நன்றி. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக் கெல்லாம் வீடு கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்த வீடுகளெல்லாம் ரொம்ப அருமையாக இருக்கின்றன. பிரமாதமாக இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் திரும்பத் திரும்ப வீடு என்று சொல்லி, அவதூறாகச் சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி பத்திரிகையிலே எழுதுகிறார்கள். அது வீடு இல்லை. அலுவலகம்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அது வீடு இல்லையா? அங்கே சமையலறையெல்லாம் இருக்கிறதே (குறுக்கீடுகள்) சரி, அலுவலகம்தான். ஆனால் ஒரு சதுர அடி 1500 ரூபாயில்...

**திரு. பி. ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே, தொகுதிகளிலே கட்டிக் கொண்டிருப்பது.. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே கட்டப்படுவதா, விடுதியா? (குறுக்கீடுகள்)

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்காக சென்னையில் வீடுகள் கட்டிக் கொண்டிருக் கிறார்கள். மிக அருமையான வீடு, நல்ல வீடு (குறுக்கீடு) விடுதி இல்லை, வீடேதான். ஒவ்வொருவருக்கும் வீடு கட்டி, 240 வீடுகள் கட்டிக் கொண்டிருக்கிறாகள். இந்த வாரத்திலேயே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அது வீடு இல்லை. Flat.



**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** வீடுகள் கட்டிக் கொண்டிருக் கிறார்கள். அந்த வீடுகள் சதுர அடி 1500 ரூபாய்க்குக் கட்டப்பட்டதாகக் கணக்கு சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு பத்திரிகையில், பொறுப்புள்ள ஒரு பத்திரிகை, இன்று நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிற திரு. 'சோ' அவர்கள் எழுதுகின்ற 'துக்ளக்' பத்திரிகையில் ஒரு விவரமான அறிக்கை வந்திருக்கிறது. அதில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், இங்கேயுள்ள கட்டடம் கட்டுகின்ற முதலாளிகள் இருக்கிறார்களே இந்தக் கட்டட உரிமையாளர்கள் அவர்களிடத்திலே யெல்லாம் விசாரித்ததிலே சதுர அடிக்கு 500 ரூபாய், 600 ரூபாய்க்கு மேலே அப்படி என்ன ஒரு வீடு கட்ட முடியும்? வெள்ளியாலே அல்லது தங்கத்தாலே செய்ய முடியுமா என்று அவர்கள் கேட்பதாக அந்தப் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. இதை விசாரிக்கவேண்டும். ஏனென்றால், வீடு நன்றாகத்தான் இருக்கிறது. அதற்காக 1500 ரூபாய்...

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் துறையினுடைய கட்டுமானக் கழகம்தான் tender எடுத்து, அதைக் கட்டிக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நம்முடைய வரிப் பணம்...

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** தலைவர் அவர்களே, tender-லே குறைந்த அளவிலே கேட்டு, எடுத்து, அந்த அரசு நிறுவனம்தான் கட்டிக் கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது ஒரு மத்திய அரசு நிறுவனம்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மத்திய அரசு நிறுவனமாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, ஒரு சதுர அடி 1500 ரூபாய் என்றால் - 500 ரூபாய், 600 ரூபாய்க்கு மிக அருமையான வீடு கட்ட முடியும் என்று சொல்கிறபோது 1500 ரூபாய் என்றால் எப்படி? மீதி 1000 ரூபாய் நம்முடைய வரிப் பணம்தானே? அரசாக இருந்தால் என்ன, யாராக இருந்தால் என்ன? ஆகவே, இதற்கொரு

விசாரணையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நடத்தவேண்டும். ஏனென்று சொன்னால், கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கு, அதாவது 500 ரூபாய் எங்கே இருக்கிறது, 1500 ரூபாய் எங்கே இருக்கிறது என்பதை நான் இங்கே நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து, சென்னை குடிதண்ணீரைப் பற்றி விளக்கமாகப் பேசிவிட்டார்கள். ஆனால் ஒரு பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. சென்னைக்கு கிருஷ்ணா நீர் இன்னும் ஆறு மாதத்திற்கு வராதென்று, ஒரு அருமையான கட்டுரை வந்திருக்கிறது. அதுகுறித்து நான் என்ன கோரிக்கை வைக்கிறேன் என்ற சொன்னால், நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பல தவறான செய்திகளை இங்கே திரும்பத் திரும்பச் சொல்லி இருக்கிறாரோ என்று எனக்கு சந்தேகமாக இருக்கிறது, இதைப் படித்துப் பார்த்ததற்குப் பிறகு. ஆகவே, முதலமைச்சர் அவர்கள், நீங்களே எங்களையெல்லாம் சேர்த்து ஒரு குழு அமைத்து, நீங்கள் வராவிட்டால் பரவாயில்லை, நீங்கள் வரவேண்டாம், குழு அமைத்து மற்ற அமைச்சர்களோடு நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையிலேயே அதையெல்லாம் சென்று பார்த்து வருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால், ஒரு பெரியவர் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். ரொம்ப உருக்கமாக எழுதியிருக்கிறார். அவர் பெயர் இராமமூர்த்தி. "எனக்கு வயது 80 ஆகிறது. கிருஷ்ணா குடிதண்ணீர் கொட்டப் போகிறது என்று எல்லோரும் வீட்டிற்குக் குழாய் இணைப்பு வாங்கிவிட்டார்கள். அதுமட்டும் இல்லாமல் ஒரு குழாய் இணைப்புக்கு 50 ரூபாய் வரியும் வசூல் பண்ணிவிட்டார்கள். இந்த நிலையில் தண்ணீரே இல்லை, கிணற்றிலேயும் தண்ணீர் இல்லை" என்று ஒரு பெரியவர் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். ஆகவே, இதையும் நம்முடைய ...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, முகவரி இருக்கிறது என்று சொன்னால், அதைச் சொன்னீர்கள் என்றால்தான் நன்றாக இருக்கும். முகவரி இருக்கிறதா?



முற்பகல் 11-25

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** முகவரி இருக்கிறது. அது என்ன details என்றால், எம்.எஸ். இராமமூர்த்தி, வயது 80, எண் 32, பவானி காலனி, சாலிக்கிராமம், சென்னை-93 என்று எழுதியிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேயர் விருப்பம் மாதிரி, நேயர்களுடைய கடிதங்களைப் படிப்பது மாதிரி ஒவ்வொரு கடிதமாகப் படிக்கிறார்கள். நான் மறுப்பு சொல்லவில்லை. ஆனால், பொதுப்பணித் துறை அமைச்சர் திரும்பத் திரும்ப இந்த அவையிலே தவறான செய்தியைத் தருகிறாரே என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இப்போது சொன்னதற்காகக் குறிப்பிடுகிறேன். இப்போது நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? கிருஷ்ணா நதி தண்ணீர் சென்னைக்கு வரவில்லை என்று சொல்கிறீர்களா? இல்லை கால்வாயே வெட்டவில்லை என்று சொல்கிறீர்களா? இரண்டிலே என்ன சொல்கிறீர்கள்? பதில் சொல்லுங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** எனக்குத் தெரியாது. நான் போய் பார்க்கவில்லை. அதனாலேதான் பார்க்கவேண்டும் என்று சொல்கிறேன். உங்களுடைய தலைமையிலே எங்களை அழைத்துக் கொண்டு போங்கள் என்று சொல்கிறேன். அதிலே என்ன தவறு?

அடுத்து போலீஸ் துறையைப் பற்றி கொஞ்சம் சொல்ல வேண்டும். இன்றைக்குக் காலையிலே ஒரு செய்தி வந்தது. விருதுநகரில் 96 ஆசாரிகள் என்று சொல்லக்கூடிய பொற் கொல்லர்கள், ஒரு கோயிலைக் கட்டுவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அனுமதி பெற்று, கோயிலைக் கட்டிக் கொண்டிருந்தபோது, அங்கே போலீசார் தலையிட்டு கலெக்டர் என்ன சொல்வது, நாங்கள் உங்களை arrest பண்ணுகிறோம் என்று சொல்லி arrest பண்ணி திருச்சி ஜெயிலுக்குக் கொண்டுபோய் விட்டார்களாம். இதுமாதிரி போலீஸ் அத்துமீறல் ரொம்ப அதிகமாக இருக்கிறது.

எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த, திராவிட முன்னேற்றக் கழகத்தில் மிகப் பெரிய செல்வாக்குப் படைத்த அ.ற. கிருஷ்ணன்

என்கின்ற ஓர் ஒன்றியச் செயலாளர், இன்று பொதுக் குழு உறுப்பினராகவுள்ள, அதிக செல்வாக்கு மிக்க ஒருவர், தன்னுடைய பேரனை ஓராண்டிற்கு முன்பாக சிலர் கொலை செய்துவிட்டு வீட்டிலே இருந்து இலட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள நகைகளை எல்லாம் திருடிப் போய்விட்டார்கள். அந்தத் திருட்டைக் கண்டுபிடிப்பதற்காக நம்முடைய பேராசிரியர், முதல்வர் இவர்களுக்கெல்லாம் அவர்கள் மனு கொடுத்து அந்த மனு மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடியாமல், அங்கே இருக்கிற மதுரை D.I.G. letter எழுதியிருக்கிறார் D.G.P.-க்கு. எங்களுடைய போலீசால் இது முடியவில்லை. ஆகவே, நீங்கள் C.B., C.I.D.-க்கு மாற்றுங்கள் என்று கடிதம் எழுதியிருக்கிறார். கடிதம் எழுதியும் இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. இவையெல்லாம் என்ன? போலீசார் நடவடிக்கை எடுக்கிறார்களா? இவையெல்லாம் வேதனைக்குரிய விஷயங்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, நம்முடைய வன்னியர் சங்கத்தினுடைய தலைவர் நடராசன் அவர்களை சில ரௌடிகள் சேர்ந்து அடித்து, அவருடைய உயிருக்கு ஆபத்தான நிலையை உண்டாக்கியிருக்கிறார்கள். இதைப் பார்த்து வருந்திய நம்முடைய முதலமைச்சர் உடனே C.B., C.I.D. விசாரணைக்கு அனுமதியளித்தார். இதுவரை யாருமே கைது செய்யப்படவில்லை. எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. நடராசன் வன்னியர் சங்கத்தினுடைய மூத்த தலைவர். அவர் அந்தச் சங்கத்தை கட்சி சார்பற்ற முறையிலே நடத்திக் கொண்டிருக்கிறார். ஒரு நல்ல மனிதர். இன்னும்கூட அவருக்கு அபாயம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். நேற்று முந்தைய தினம், சென்னையிலே ஒரு கூட்டம் நடத்தி அந்தக் கூட்டத்திலே ஒருவர் - அதாவது அவருக்குப் போட்டியான வன்னியர் சங்கம் - 5-3-2000 அன்று தி.நகரில் பத்மா விஹார் திருமண மண்டபத்தில் அந்தப் பொதுக் கூட்டத்தில் பேசியிருக்கிறார்கள். அந்த நடராசன் தலையை வெட்டாமல் நாம் விடக்கூடாது. நயக்குப் போட்டியாக வன்னியர் சங்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறார் என்று பேசியிருக்கிறார். Police Report நம்முடைய அரசுக்கு வந்திருக்கும். ஆகவே, இதையெல்லாம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய திருவாடனை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், பட்டு அய்யரைப் பற்றி, அய்யரைப் போய் கொலை



பண்ணியிருக்கிறார்கள் பாருங்கள். ஏன், இந்த நாட்டிலே இப்படியெல்லாம் இருக்கிறது? கோயிலிலே பூஜை செய்து கொண்டிருக்கிற அய்யரைக் கொலை செய்கிறார்கள். என்ன பாவம் செய்திருப்பார் அவர்? அதிலே என்னவென்றால், இதுவரை அந்தக் கொலையாளிகளைப் பிடிக்கவே முடியவில்லை. முதலமைச்சர் அவர்கள் உடனே உத்தரவு போட்டாடர்கள். நல்ல முறையிலே போட்டார்கள். ஏற்கெனவே, கொஞ்சம் காசு, பணம் வாங்கிய அதிகாரிகள் எல்லாம் மாற்றப்பட்டு, ஒரு நல்ல அதிகாரி வந்தார். நான்கு பேரை குண்டர்கள் தடுப்புச் சட்டத்திலே போட்டிருக்கிறார். இருந்தாலும், அந்தக் கொலையாளிகளைப் பிடிக்க முடியவில்லை. இதில் இன்னும் கொஞ்சம் கவனம் செலுத்தி இதுபோன்ற காரியங்கள் நடைபெறாமல் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இது மகளிர் ஆண்டு. இந்த மகளிர் ஆண்டில் நம்முடைய தாய்க்குலத்தைப் பற்றி ஒரு கட்டுரை, 'இந்து' பத்திரிகையிலே வந்திருக்கிறது. அந்தக் கட்டுரையில் ரொம்ப சோகமாகக் கூறப்பட்டிருக்கிறது, இந்த நாட்டிலே, பீகாருக்கு அடுத்தபடியாக பெண்களுக்குத் துன்பங்களும், துயரங்களும் அதிகம் உள்ள ஒரு மாநிலம் தமிழ்நாடுதான் என்று. அவர்களுடைய துன்பத்தை, துயரத்தைத் துடைப்பதற்கு நம்முடைய அரசாங்கம் மிகத் தீவிரமாகச் செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்குள் போனால் அதற்கு இன்னும் ஒரு மணி நேரம் ஆகும்.

முற்பகல் 11-30

அடுத்ததாக, நம்முடைய அரசாங்கம் எப்படி நடந்து கொண்டிருக்கிறது என்று ஒரு பரிதாபத்திற்குரிய அம்மையார் ஒருவர் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்த அம்மா பெயர் சூசை அம்மாள். கல்லுப்பட்டி கிராமம், நரசிங்கபுரம் போஸ்ட், வெள்ளோடு வழி, திண்டுக்கல் மாவட்டம் என எழுதியிருக்கிறார்கள். "நான் ஒரு ஏழை விவசாயப் பெண். வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்பவள். என் கணவர், வேளாங்கண்ணி, வெள்ளோடு பஞ்சாயத்தில் கல்லுப்பட்டி கிராமத்தில் Over-head Tank Operator-ராக இருந்து, இறந்துவிட்டார்." இறந்தவருக்குப் பிள்ளை இருக்கிறது. அவருக்கு வேலை கொடுக்கவேண்டும். அதைக் கொடுக்கமாட்டேன் என்று சொல்லிவிட்டார்களாம். இறந்தவர் குடும்பத்திற்கு ஒரு இலட்சம்

ரூபாய் பணம் தரப்படவேண்டும். அதுவும் கிடைக்கவில்லை. இறந்த அன்றைக்குப் பணம் கொடுப்பார்கள் அல்லவா? அதுவும் கிடைக்கவில்லை. குடும்பத்தில் மூத்தவருக்கு ரூ.10,000 கொடுப்பார்கள் அல்லவா? அதுவும் கிடைக்கவில்லை. இது நடந்து இரண்டாண்டுகள் ஆகிவிட்டன. முதலமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதிப் பார்த்தார்கள். ஒன்றும் நடக்கவில்லை. கடைசியாக அருமை அம்மா, தயாளு அம்மாள் அவர்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள். "நான் ஒரு பெண்ணம்மா, நீங்களாவது எனக்குத் துணை புரியுங்கள்" என்று மிக உருக்கத்தோடு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்த அம்மா எழுதியிருக்கிறார்கள் "நான் ஏழை, எனக்குப் படிக்கவே தெரியாது, எனக்கு இந்த அரசாங்கம் 7-7-1998 லிருந்து இதுவரை எந்தவிதமான உதவியும் செய்யவில்லை, விடுதலையும் கிடைக்கவில்லை, நீங்கள்தான் எனக்கு உதவவேண்டும்" என்று கேட்டு யார் யாருக்கோ எழுதி, கலெக்டருக்கு எல்லாம் எழுதி, கடைசியாக தயாளு அம்மாள் அவர்களுக்குக்கூட கடிதம் எழுதியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில், இதெல்லாம் ஏழைகளுக்காக நடக்கிற அரசாங்கம் என்று சொல்கிற வகையில், காரியங்கள் நடக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, கன்னியாகுமரி மாவட்டத்தில், கூட்டுறவுத் துறையில் 400 பேர் வேலைக்கு எடுப்பதற்குப் பதிலாக 600 பேரை எடுத்து, மிகப் பெரிய ஊழல் செய்ததால், பாதிக்கப்பட்ட அந்த மக்கள் எல்லாம் கோர்டுக்குச் சென்று இன்று முழுமையான அந்தத் தேர்வு அத்தனையையும் ரத்து செய்துவிட்டு, புதிதாக இன்று தேர்வு நடந்துகொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட, ஊழலும் மக்கள் விரோதச் செயலுமாக நடக்கிற இந்த அரசின் இந்த ஆளுநர் உரையை எதிர்த்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது நடைபெற்றுள்ள இந்த விவாதத்தில், என்னையும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும் தவிர்த்து 37 பேர் கலந்துகொண்டு உரையாற்றியிருக்கின்றார்கள். அதிலே , திராவிட முன்னேற்றக்



கழகத்தைச் சேர்ந்தவர்கள் 10 பேர், தமிழ் மாநில காங்கிரசைச் சேர்ந்தவர்கள் 8 பேர், மற்றவர்கள் 19 பேர் - மற்ற கட்சிகளைச் சேர்ந்தவர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 10 பேரும் இரண்டு மணி நேரம் உரையாற்றியிருக்கின்றார்கள். தமிழ் மாநில காங்கிரசைச் சேர்ந்த 8 பேரும் இரண்டேகால் மணி நேரம் உரையாற்றியிருக்கின்றார்கள். இந்த விவாதத்தில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சட்டசபையிலே நாலைந்து நாட்களாகப் புயல் அடித்தது, அடித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் அந்தப் புயலுக்கு மாறாக அவருடைய பேச்சு தென்றலாக அமைந்து நமக்கெல்லாம் தெம்பூட்டியிருக்கின்றது.

பொதுவாக, தமிழ்நாட்டு மக்கள், சட்டமன்றத்திலே எது நடக்கிறது, யார் எதை, எப்படிப் பேசுகின்றார்கள், அதனால் யாருக்கு என்ன பலன் என்பதையெல்லாம் மிக உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கின்றார்கள். சட்டமன்றத்திற்குள்ள அந்தச் சிறப்பான தனி உரிமையைப் பயன்படுத்திக்கொண்டு, எதை வேண்டுமானாலும் பேசலாம், பொத்தாம்பொதுவில் புழுதி வாரித் தூற்றலாம் என்றால், மக்கள் மன்றம் நம்மை மன்னிக்கத் தயாராக இருக்காது. குறைகளைக் குறிப்பிட்டுச் சொல்லும்பொழுது, அதனைக் களைந்திடல் வேண்டும். குற்றச்சாட்டுக்களை ஆதாரத்துடன் எடுத்துரைக்கும்போது அதுபற்றிய உண்மையை அறிய விசாரணை நடத்திடல் வேண்டும். நடவடிக்கை எடுத்திடல் வேண்டுமென்ற அக்கறை உள்ளவன் நான் என்பதை நீங்கள் எல்லாம் மிக நன்றாக, இந்த அவையில் உள்ளவர்கள் அறிவீர்கள்.

முற்பகல் 11-35

இதுவரை நடந்து வந்துள்ள நிகழ்வுகளை கவனித்தால் இந்த உண்மை நிச்சயமாக விளங்கும் என்றே நான் நம்புகிறேன். ஜனநாயகத்திலும் ஜனநாயகத்தின் காப்பகமாக விளங்கிடும் சட்டமன்றத்திலும், நாம் எல்லோரும் மிகுந்த நம்பிக்கையும், ஈடுபாடும் கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் இங்கே வந்து அமர்ந்து நாட்டு நலத்திற்கும், வளத்திற்குமாக திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துவது பற்றிப் பேச அவையிலே போதுமான இடம் இல்லை என்ற காரணத்தால்தான் நம்மையெல்லாம் தேர்ந்தெடுத்த அவர்களுக்காகப் பேச, வாதாட,

விவாதிக்க இங்கே அனுப்பி வைத்திருக்கிறார்கள். எனவே, இங்கே பேசுகின்றவர்கள் யாராக இருந்தாலும், ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் அல்லது எதிரிக் கட்சியாகவே இருந்தாலும்கூட, நாம் பேசுகின்ற விஷயங்கள் நாட்டுக்கு, தொகுதிக்கு, மக்களுக்கு, எந்த அளவிற்கு பயனுள்ளதாக பலன் தருவதாக இருக்கும் என்பதை முடிவு செய்து கொண்டு பேசுவதுதான் மக்களாட்சியின் மாண்புக்கு நாம் செலுத்திடும் மரியாதையாக அமைந்திடும் என்பதை குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

நானோ, இங்கே உள்ள அமைச்சர்களோ, ஆளும் கட்சி உறுப்பினர்களோ விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்களும் இல்லை. விமர்சனத்திற்குப் பயந்து ஒளிந்து கொள்கிறவர்களும் இல்லை. பொது வாழ்க்கையிலே இதெல்லாம் சகஜம். எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்ற அளவில்தான், செய்யப்படுகிற விமர்சனங்கள்தான், தரம் உள்ளவையாக இருந்தாலும், தரம் தாழ்ந்தவையாக இருந்தாலும் 'போற்றுவோர் போற்றட்டும், புழுதி வாரித் தூற்றுபவர் தூற்றட்டும்' என்று எல்லாவற்றையும் அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல பொறுத்துக்கொண்டு, என் கடன் பணி செய்து கிடப்பதே, மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதில் எள் முனையளவும் பிசகாமல் நாங்கள் நடந்து வருகிறோம். அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை, நிரந்தர பகைவர்களும் இல்லை என்று பேரறிஞர் அண்ணா சொன்னது கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு மாத்திரமல்ல. அரசியலில் ஈடுபட்டுள்ள எல்லோருக்கும்தான். நண்பர்களாக இருக்கும்போது போற்றிப் பாராட்டிப் புகழ்வதும், எதிர் முகாமிற்குச் சென்றதும் இல்லாததைப் பொல்லாததைப் பேசுவதும்தான் அரசியல் என்று ஆகிவிட்டால் பொது வாழ்க்கை என்பதே வெறும் போர்வையாக ஆகிவிடும், அதுமாத்திரமல்ல. அரசியல், பொது வாழ்க்கை என்றாலே மக்களிடம் கசப்பும், வெறுப்பும் ஏற்பட்டு விடும் என்பதையும் மறுப்பதற்கில்லை. எனவே, நாம் அனைவரும் இவற்றையெல்லாம் கவனமாகக் கருத்திலே கொண்டிட வேண்டுமென்று விரும்புகின்றேன், கேட்டுக்கொள்கின்றேன். அந்த அடிப்படையிலே இங்கே நடைபெறுகின்ற வாதப் பிரதிவாதங்கள் அமைய வேண்டும் என்பது என்னுடைய விழைவு. வாதப் பிரதிவாதங்களில் சில நேரங்களில்



சூடு பறந்து, சில நேரங்களில் விரசம் தலைகாட்டி, கவலைக்கு உள்ளாக்கியது என்றாலும்கூட, ஒருசிலர் மிகுந்த கவனத்தோடு, எச்சரிக்கையோடு தங்களுடைய வாதங்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் என்னுடைய பாராட்டுதலையும் நன்றியையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பல செய்திகளை இங்கே எடுத்துக்கூறி, இருக்கின்ற குறைபாடுகளையெல்லாம் நீக்க வேண்டுமென்கிற வேண்டுகோளை இங்கே வைத்திருக்கிறார்கள். அதற்காக நான் மீண்டும் ஒரு முறை அவருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆளுநர் அறிக்கை பற்றி தொடக்கத்தில் எடுத்த எடுப்பில், இது ஒரு ஆண்டு அறிக்கை போல இருக்கிறது என்று சொல்லி பத்திரிகையிலே அந்த செய்தி வெளிவந்தது. அதை நான் முழு மனதோடு ஏற்றுக்கொள்கிறேன். 'அக இருள் அகற்றி அறிவு ஒளி வீசச் செய்யும் இடம்தான் கல்லூரி' — அவர் சொன்னது—கல்லூரியினுடைய ஆண்டு அறிக்கை போல இருக்கிறது என்று சொன்னார். கல்லூரி என்பது சாதாரணமானது அல்ல. அவர் கல்லூரியைக் கேவலமாக எண்ணி சொல்லியிருக்க மாட்டார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அக இருள் அகற்றி அறிவு ஒளி வீசச் செய்யும் இடம்தான் கல்லூரி, அங்கு சமூகம், பொருளாதாரம், விஞ்ஞானம் போன்ற பாடங்களில் மாணவர்கள் தேர்ச்சி அடையக்கூடிய பணி மேற்கொள்ளப்படுகிறது. அதேபோல இப்போது தமிழகத்திலே, கல்வியிலே கணினியினைப் புகுத்தி, சமூக ஒற்றுமைக்கு சமத்துவபுரங்களை நிறுவி, கிராமப் பொருளாதார மேம்பாட்டிற்கு உழவர் சந்தைகளை ஏற்படுத்தி, மக்களின் ஆரோக்கியமான நல்வாழ்விற்கு, வரும் முன் காப்போம் போன்ற திட்டங்களால் இந்த ஆண்டில் தமிழகம் அடைந்துள்ள மேம்பாடுகளை உள்ளடக்கிய ஆளுநர் உரையின் சிறப்பை, ஒரு கல்லூரியின் ஆண்டு அறிக்கைக்கு ஒப்பிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) சுருக்கமாக, அதேநேரம், மிகச் சிறப்பானதாக அவர் எடுத்துரைத்தது, அதுபோல வேறொரு வாழ்த்துரையை நாம் எங்கும் காண இயலாது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே அவருக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது ஆண்டறிக்கைதான். நான்கு ஆண்டு காலம் ஆண்டு இப்போது தரப்படுகின்ற அறிக்கைதான் இந்த அறிக்கை என்பதையும் நான் அவருக்குக் கூற விரும்புகின்றேன்.

முற்பகல் 11-40

ஆளுநர் உரையிலே என்ன இருக்கிறது என்ற ஒரு கேள்வி. சில விஷயங்களைப் பாராட்டி நம்முடைய பழனிசாமி போன்றவர்கள் - சுப்பராயன் அன்றைக்கு என்ன ஒன்றுமே இல்லை இதிலே உள் வாங்குவதற்கு - உள்வாங்குவது என்பது அவருக்கே உரிய ராயல்டி வார்த்தை - இதிலே உள் வாங்குவதற்கு என்ன இருக்கிறது என்று அன்றைக்கு அவர் கேள்வியை எழுப்பினார்கள். ஆளுநர் உரையில் ஒன்றுமே இல்லை என்கின்ற விவாதம் எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து பல பேரால் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. இருப்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

தமிழ் எழுத்தாளர்களுக்கு குறள்பீட விருது, இது நம்முடைய அருமை நண்பர் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் ஒரு புத்தக வெளியீட்டு விழாவிலே எடுத்துச்சொன்னார்கள். ஞானபீட விருது தரப்படுவது போல இங்கேயும் ஒரு பீடம் ஏற்படுத்தி ஒரு விருது தர வேண்டும். அந்த விருதை வழங்குகின்ற அகடமிக்கு முதலமைச்சர் தலைவராக இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். உள்ளே இருந்து எதிர்க்கட்சிகள் சொல்வதை மாத்திரம் அல்ல. வெளியிலே இருந்து எதிர்க்கட்சிகள் மூலமாக தரப்படுகின்ற கருத்துகளைக்கூட 'உள்வாங்குகின்ற' அரசுதான் இந்த அரசு என்பதற்கு அடையாளமாகத்தான் அவருடைய விருப்பப்படி நானே தலைவராக பொறுப்பேற்றுக்கொண்டு குறள்பீடம் விருது வழங்க தமிழ்ச் சங்கப் பலகை ஒன்றை நிறுவி இருக்கின்றோம்.

தமிழ்நாட்டிலே உருது அகடமி அமைக்க 1 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு 15 இலட்ச ரூபாய் இப்போது முன்பணமாக அதற்கு வழங்கப்பட இருக்கிறது. சமூக சீர்திருத்தத் துறை என்ற புதிய துறையை ஏற்படுத்தி அன்றைக்கு இங்கே பேசப்பட்டது போல பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்ப மூடநம்பிக்கைகளை ஒழிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள நாம் முனைந் திருக்கிறோம்.

ஏகபோகக் கொள்முதல் முறையின்கீழ் மத்திய அரசு நிர்ணயித்த குறைந்த ஆதரவு விலைக்கு மேலாக குவிண்டால் ஒன்றுக்கு 50 ரூபாய் ஊக்கத் தொகை அளிக்கப்படும் என்று



அறிவித்திருக்கிறோம். கடந்த கால ஆட்சியில் இந்த அளவுக்கு ஊக்கத் தொகை தரப்படவில்லை என்பதை நீங்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள்.

தரிசு நில மேம்பாட்டு அதிகார மன்றம் ஒன்று அமைக்கப்பட்டு, 10 மாவட்டங்களில் 10,000 எக்டேர் நிலங்கள் தரிசு நில மேம்பாட்டுப் பணி முடிக்கப்பட்டுவிட்டது. வரும் ஆண்டில் சுமார் 30,000 எக்டேர் நிலப் பரப்பு மேம்பாட்டு பணி மேற்கொள்ளப்படும் என்று ஆளுநர் உரையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கால்நடை வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் புதிய கொள்கையை உருவாக்க வேண்டுமென்று மாநில திட்டக் குழுவை நான் கேட்டுக்கொண்டு அந்த முயற்சியிலே மாநில திட்டக் குழு மும்முரமாக ஈடுபட்டிருக்கிறது. வருகிற நிதிநிலை அறிக்கையிலே அந்தத் திட்டம் இடம்பெறும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

100 நகர்ப்புற மையங்களில் உழவர் சந்தைகள் அமைக்கப்பட்டுள்ளன. உழவர் சந்தையைப் பற்றிப் பேசப்பட்டது. நல்ல திட்டங்களைப் பற்றியெல்லாம் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் வேறு சிலரும் இங்கே பேசி அதிலே உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். நான் அதற்காக நன்றி தெரிவிக்கின்றேன். குறைகளே இல்லையென்று நான் சொல்ல மாட்டேன். எதிலும் குறை இருக்கிறது. சந்திரனுக்கேகூட களங்கம் இருக்கிறது. அதுபோல எந்தத் திட்டமாக இருந்தாலும் குறைகள் இருக்கும். அந்தக் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். உழவர் சந்தை தொடங்கப்பட்டது நவம்பர் மாதம், 14 ஆம் தேதி மதுரையில். பேரவைத் தலைவர் அவர்கள் முன்னிலையிலே இந்த உழவர் சந்தை தொடங்கப்பட்டது. இதுவரையில் 27 சந்தைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. இவை பல தேதிகளில் தொடங்கப் பட்டிருக்கின்றன. இந்த 27 உழவர் சந்தைகளில் 8-3-2000 வரை, நேற்று வரை, விற்பனையான காய்கறிகளின் மதிப்பு 11,08,31,708 ரூபாய் என்பதை நான் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். விற்பனையினுடைய அளவு எத்தனை கிலோ காய்கறிகள் என்றால் 1,89,32,086 கிலோ காய்கறிகள் விற்பனையாகி இருக்கின்றன. இதிலே பயன்பெற்ற விவசாயிகள் — பயன்பெற்ற விவசாயிகள்

என்றால் வந்தவர்களே மறுநாளும் வரக்கூடும், ஆனால் தொடர்ந்து வந்தவர்கள், திரும்பத்திரும்ப வந்தவர்கள் என்ற கணக்கைப் பார்த்தால் 1,55,998 விவசாயிகள். பயன்பெற்ற பொது மக்கள், அவர்களும் திரும்பத்திரும்ப வந்திருக்கக்கூடும். அந்தக் கணக்கைப் பார்த்தால் 68,32,673 பேர் பொது மக்கள் பயன்பெற்றிருக் கிறார்கள். மேலும் 73 உழவர் சந்தைகள் விரைவிலே தொடங்கப்பட இருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-45

மதுரையிலே 17 கோடி ரூபாய் செலவிலே நெல் விற்பனை அங்காடி அமைக்கும் பணி தொடங்கப்பட்டாகிவிட்டது. திருச்சியிலே 12 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் வெல்ல விற்பனை அங்காடியினுடைய பணியும் தொடங்கப்பட்டுவிட்டது. பெருந் துறையில் 30.89 கோடி ரூபாய் செலவில் மஞ்சள் விற்பனை அங்காடி, பணி தொடங்கப்பட்டுவிட்டது. அதுபற்றி நேற்றைய தினம் நம்முடைய பெருந்துறை சட்டமன்ற உறுப்பினர் சிலாகித்து நன்றி கூறிப் பேசினார். நல்ல நேரத்திலே நான் இல்லாமல் போய்விட்டேன். மற்ற நேரங்களிலே இருப்பேன். நன்றி கூறிப் பேசுகிற நேரத்திலே நான் இங்கு இல்லாமல் போய்விட்டேன். அதற்கு நான் வருந்துகிறேன். பிறகு கேள்விப்பட்டேன். படித்துப் பார்த்தேன் பேச்சை. அதற்காக நான் நன்றி கூறிக்கொள்கின்றேன்.

தரமணியில் 338 கோடி ரூபாய் செலவிலே டைடல் பூங்கா ஒன்று அமைக்கப்படுகிறது. 10 இலட்சம் சதுர அடி கொண்ட அந்தப் பூங்காவிற்கு மே மாதத்திலே திறப்பு விழா நடைபெற இருக்கிறது என்பதையும் நான் பெருமையோடு இங்கே கூறிக்கொள்கின்றேன்.

தீப்பிடிக்காத கல்நார் வீடுகள், மாநகராட்சிகளிலே இந்த ஆண்டு கட்டி முடிக்கப்பட இருக்கிறது. 19 கிலோ மீட்டர் நீளம் உள்ள சென்னை புறவழிச்சாலை, இந்த ஆளுநர் உரையிலே அந்தத் திட்டம் இடம் பெற்றிருக்கிறது. 213 கோடி ரூபாய் செலவிலே சென்னையைச் சுற்றியுள்ள ஆரச்சாலைகளை மேம்பாடு செய்யும் திட்டம் இந்த ஆளுநர் உரையிலே இடம் பெற்றிருக்கிறது. அரசு மேல்நிலைப் பள்ளி, கல்லூரிகளில் கணினி வசதிக்காக, இதுவரையிலே 666 மேல்நிலைப் பள்ளிகளிலே கணினிப் பயிற்சிக்கான ஏற்பாடு நடைபெற்றதைத் தொடர்ந்து மேலும் 535



மேல்நிலைப் பள்ளிகளில் இந்த ஆண்டு இந்தத் திட்டம் தொடங்கப்பட்டு முடிவடைய இருக்கிறது.

420 கோடி ரூபாய் மதிப்பில் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு இரண்டாவது திட்டம் - Urban Development திட்டம் இந்த ஆளுநர் உரையிலே இடம் பெற்றிருக்கிறது. மேலும், 86 சமத்துவபுரங்கள், இதுவரையிலே 64 கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அவற்றிலே ஒன்றிரண்டு சமத்துவபுரங்களிலே சில பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை நான் மறுக்கவில்லை. அவற்றை எல்லாம் சரிபடுத்தியுள்ளோம். 35,000 ரூபாய் போதாது என்று சொன்னார்கள். அதைவிடக் குறைந்த செலவிலே கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் எல்லாம்கூட நல்ல முறையிலே இருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் கணினிமயமாக்குகின்ற திட்டம், எல்லா மாவட்டங்களுக்கும் இந்த ஆண்டு விரிவாக்கப்பட இருக்கிறது. கணினிமயம் என்பது சாதாரணமான விஷயமல்ல. இன்றைக்கு இந்தியாவிலேயே கணினிமயமாக்குகின்ற திட்டத்தில் தமிழ்நாடுதான் முதல் இடம் வகிக்கிறது என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) நான் சிறப்பாக இங்கே கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

நகர்ப்புறப் பகுதிகளில் 215 கோடி ரூபாய் செலவில் தெருக்களையும், சாலைகளையும் மேம்படுத்தும் திட்டம். 10 கோடி ரூபாய் செலவில் உலர் கழிப்பிடங்கள் அனைத்தும் நீரடிக் கழிப்பிடங்களாக மாறும் திட்டம். இது சாதாரணமான திட்டமாகத் தெரியலாம். ஆனால், உலர் கழிப்பிடங்களை நீரடிக் கழிப்பிடங்களாக மாற்றுவதால் மலத்தைத் தலையிலே அள்ளிச் சுமக்கின்ற மனிதனுடைய விடுதலை, சமுதாய விடுதலை இதிலே தொக்கி நிற்கிறது என்பதை நாம் யாரும் மறந்துவிடக்கூடாது. 20 ஆண்டுகளாக புறம்போக்கு நிலங்களிலே குடியிருப்போருக்குப் பட்டா வழங்கப்படும். அரசுக்குத் தேவையில்லாதபட்சத்தில் அந்த இடம் அவர்களுக்கே உரிமையாக்கித் தரப்படும். 300 கோடி ரூபாய் செலவில் சென்னையிலே உள்ள நீர்வழிகளில் தூர்வாரும் பணி ஒரு திட்டம். அது இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

தென் மாவட்டங்களின் வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டங்களுக்காக உச்ச நீதிமன்றத்தினுடைய முன்னாள் நீதியரசர் ரத்தினவேல் பாண்டியன், ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி சீத்தாரமதாஸ், தமிழக அரசின் ஓய்வு பெற்ற அதிகாரி வெங்கட்ராமன், செகரட்டரி முருகன் இவர்களைக் கொண்டு ஒரு குழு தென் மாவட்டங்களை எல்லாம் சுற்றுப் பயணம் செய்து அவர்கள் ஒரு திட்டத்தை வழங்கியிருக்கிறார்கள். ஒரு பகுதி வழங்கப் பட்டிருக்கிறது. அடுத்த பகுதி விரைவிலே வழங்கப்பட இருக்கிறது. அவை வழங்கப்பட்ட பிறகு என்னென்ன பணிகள் தொடங்கப்படும் என்பதை வருகின்ற நிதிநிலை அறிக்கையிலே நான் அறிவிப்பேன் என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

குறிப்பாக, ஆளுநர் உரையிலே முதல் பக்கத்திலே அல்லது இரண்டாம் பக்கத்திலே இடம் பெற்ற, அரசியல் சட்டத்திலே மாறுதல் அல்லது ஆய்வு அல்லது திருத்தம், இதில் ஏதோ ஒன்று நடைபெறும்போது, எந்தெந்தப் பிரச்சினைகள் முக்கியமாக கவனிக்கப்படவேண்டும் என்பதை வகுத்துச் சொல்லியிருக்கிறோம். 1999 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலையொட்டி உருவாக்கப் பட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணியினுடைய தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ள வாசகத்தை இங்கே படித்துக் காட்ட விரும்புகின்றேன்.

முற்பகல் 11-50

*"We shall appoint a Commission to review the Constitution of India not only in the light of experiences and developments since 1996, but indeed, of the entire post-independence period and to make suitable recommendations.*

*We are convinced that there is a clear case for devolution of more financial and administrative powers and functions to the States. We will take suitable steps to ensure harmonious Centre-State relations in the light of the recommendations of the Sarkaria Commission and also effect decentralisation right upto the grass roots level by activating and involving Panchayats and local bodies"* என்று 1999 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின்போது உருவாக்கப்பட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணி தேர்தல் அறிக்கையில்



இதை இணைத்து வெளியிட்டு இருக்கிறோம். அதாவது, "1996 ஆம் ஆண்டிலிருந்து மேலும் நாடு விடுதலை பெற்றதிலிருந்து நமக்கு ஏற்பட்டு வரும் அனுபவங்கள் மற்றும் விளைவுகள் ஆகியவற்றை எல்லாம் கருத்திலேகொண்டு, இந்திய அரசமைப்புச் சட்டத்தை மறு ஆய்வு செய்வது, உரிய பரிந்துரைகளை வழங்க ஒரு கமிஷனை அமைப்போம். மாநிலங்களுக்கு மேலும் அதிக நிதி மற்றும் நிர்வாக ஆதாரங்களையும், செயல்பாடுகளையும் வழங்குவதற்கு தெளிவான நிலை ஏற்பட்டு இருப்பதை நாங்கள் நம்புகிறோம். சர்காரியா கமிஷன் பரிந்துரைகளின் அடிப்படையில் மத்திய, மாநில உறவுகள் இணக்கமான வகையில் அமைவதை உறுதி செய்து கொள்வதற்கு ஏற்ற நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்வோம். மேலும் ஜனநாயக அமைப்பின் வேர்களாக விளங்கும் ஊராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புக்களை ஈடுபடுத்தும் வகையில், அவைகளுக்குத் தேவையான அதிகாரங்களை வழங்குவோம்" என்ற தேர்தல் அறிக்கைக்குப் பிறகு 1-2-2000 அன்று மத்திய அரசினுடைய அமைச்சரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டுள்ள தீர்மானம் -- நேற்று இரண்டு நாட்களாக இங்கு பிரச்சினைக்குரியதாக ஆக்கப்பட்டு விவாதிக்கப்பட்ட அந்தக் கருத்து அமைச்சரவைத் தீர்மானமாக நிறைவேறியபோது உள்ள வாசகத்தைப் படித்துக்காட்ட விரும்புகின்றேன்.

*"The Commission shall examine in the light of experiences of the past 50 years as to how far the existing provisions of the Constitution are capable of responding to the needs of efficient, smooth and effective system of governance and socio-economic development of modern India and to recommend changes, if any, that are required to be made in the Constitution within the framework of parliamentary democracy without interfering with the basic structure or basic features of the Constitution"*

இதுதான் அமைச்சரவைக் கூட்டத்திலே நிறைவேற்றப் பெற்றுள்ள தீர்மானம். அதாவது "அரசமைப்புச் சட்ட மறு ஆய்வு கமிஷன் கடந்த 50 ஆண்டுக் காலமாக ஏற்பட்டுள்ள அனுபவங்களின் அடிப்படையில், தற்போது உள்ள அரசமைப்புச் சட்டத்தின் அம்சங்கள், திறமையான, சுமுகமான நல்ல விளைவுகளை வழங்கக்கூடிய நிர்வாக அமைப்பின் தேவைகளை எப்படியெல்லாம் நிறைவு

செய்துள்ளது என்பதைப் பரிசீலனை செய்து, நவீன இந்தியாவின் சமூகப் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை ஆய்வு செய்து, அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை அமைப்பையோ, அடிப்படை அம்சங்களையோ குலைத்திடாத வகையில் பாராளுமன்ற ஜனநாயகம் என்ற வட்டமைப்புக்குள் தேவையான பரிந்துரைகளை வழங்கும்" என்று அமைச்சரவையிலே தீர்மானிக்கப்பட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1969 ஆம் ஆண்டு பொங்கல் விழாவையொட்டி 'காஞ்சி' இதழில் எழுதிய கட்டுரையில் -- அதுதான் அவர் எழுதிய கடைசிக் கட்டுரை; தம்பிக்குக் கடிதம் என்று அண்ணா கடைசியாக எழுதிய, அவர் மறைவதற்கு முன்பு சில நாட்களுக்கு முன்பு எழுதிய கடிதம், தம்பிக்கு எழுதிய கடிதம், அதிலே குறிப்பிடுகிறார் —

"மாநிலங்கள் அதிக அளவில் அதிகாரம் பெறத்தக்க விதத்தில், இந்திய அரசியல் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பது பற்றி வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம், தம்பி, நான் எடுத்துக் கூறி வருகின்றேன்.

இதற்கான நல்லாதரவு நாளுக்கு நாள் வளர்ந்தபடி இருக்கிறது என்பதில் எனக்குத் தனியானதோர் மகிழ்ச்சி.

நமது கழகம் மாத்திரமல்லாமல் வேறு பல அரசியல் கட்சிகளும் இப்போது இதை வலியுறுத்த முன்வந்துள்ளன.

அரசியல் கட்சிகளைச் சாராத அறிவாளர் பலரும் இதற்கு ஆதரவு காட்டுகின்றார்கள்.

நாம் அரசு நடத்தியதால் கிடைத்திருக்கின்ற நற்பயன்களில் இதுவும் ஒன்று என்றே நான் கருதுகின்றேன்."

பொங்கலையொட்டி வெளியிடப்பட்ட 'HOME RULE'-- அவர் நடத்திய ஆங்கிலப் பத்திரிகையில், 'HOME RULE' இதழில் 'HAIL THE DAWN' என்ற தலைப்பில் அண்ணா எழுதிய கட்டுரையில், "If by being in office, the D.M.K. is able to bring to the notice of the thinking public, that the present Constitution is a sort of dyarchy by the back door that would be a definite contribution indeed to the political world." அதாவது, பதவியில் இருப்பதன் மூலம் இன்றைய அரசமைப்புச் சட்டம் கொல்லைப் புறமாகக் கொண்டுவரப்பட்ட ஒரு இரட்டை ஆட்சிதான்



என்பதைச் சிந்திக்கக்கூடிய பொது மக்கள் கவனத்திற்கு தி.மு.க. கொண்டுவர முடியுமானால், அது உண்மையிலேயே அரசியல் உலகிற்குச் செய்யப்படும் குறிப்பிடத்தக்க உதவியாகும் என்று அண்ணா 'HOME RULE'-லே எழுதுகிறார்.

முற்பகல் 11-55

சோவியத் ரஷ்யாவில் 1918 ஆம் ஆண்டு, பின்னர் 1924 ஆம் ஆண்டு, பின்னர் 1936 ஆம் ஆண்டு, பின்னர் 1974 ஆம் ஆண்டு ஆகிய ஆண்டுகளில் 4 முறை அரசமைப்புச் சட்டத்தினைத் திருத்தினார்கள். மன்னிக்கவேண்டும். திருத்தவில்லை, அடியோடு மாற்றினார்கள். திருத்தங்களைச் செய்யாமல், பழைய பிரிவுகளை நீக்காமல், புதிய பிரிவுகளை இணைக்காமல், மாறி வரும் சூழ்நிலைகளையும், மக்களின் தேவைகளையும் கருத்தில் கொண்டு புதிய அரசமைப்புச் சட்டங்களே சோவியத் ரஷ்யாவில் அறிமுகப்படுத்தப்பட்டன.

அரசமைப்புச் சட்டத்தைப் பற்றி பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார் "While we want this Constitution to be as solid and as permanent in structure as we can make it, nevertheless there is no permanence in Constitutions. There should be a certain flexibility. If you make anything rigid and permanent you stop a nation's growth, the growth of a living, vital, organic people. In any event, we should not make a Constitution such as some other great countries have, which are so rigid that they cannot be adapted easily to changing conditions. Today, especially, when the world is in turmoil and we are passing through a very swift period of transition, what we may do today may not be wholly applicable tomorrow." அதாவது, இந்த அரசமைப்புச் சட்டம் கெட்டியானதாகவும், நிரந்தரமானதாகவும் அமையத்தக்க வகையில் நாம் உருவாக்கினாலும்கூட, அரசியல் சட்டங்களில் நிரந்தரமானது என்று எதுவும் இல்லை. அதில் நெகிழ்வுத் தன்மை இருக்க வேண்டும். எதையும் இறுக்கமானதாகவும், நிரந்தரமானதாகவும் அமைத்து விட்டால், நாட்டின் வளர்ச்சியையும், வாழும், உயிர்ப்பு சக்திமிக்க மக்களின் வளர்ச்சியையும் நிறுத்திவிடுகிறீர்கள் என்று ஆகிவிடும் ... ஒரு சில நாடுகளில் இருப்பதைப்போல, இறுக்கமான, மாறிவரும் சூழ்நிலைகளுக்கு எற்றபடி மாற்றி பின்பற்ற முடியாததான அரசியல் சட்டத்தை நாம் உருவாக்கிவிடக் கூடாது. கொந்தளிப்பான

சூழலில் உள்ள இன்றைய உலகில், வேகமாக மாறி வரும் சூழ்நிலைகளில், இன்று நாம் உருவாக்குவது, நாளையே முழுதும் பயனற்றதாகப் போய்விடும். மேலும் சொல்கிறார், "*A Constitution which is unchanging and static -- it does not matter how good it is -- is a Constitution that has outlived its use. It is in its old age already and gradually approaching its death. A Constitution to be living must be growing, must be adaptable, must be flexible, must be changeable.*"

அதாவது, "எவ்வளவு நல்ல அரசமைப்புச் சட்டம் என்றாலும், ஓர் சட்டம் மாறாமல் நிலைத்துவிட்டதாக இருக்குமானால், அந்த அரசமைப்புச் சட்டம் அதன் பயன்பாட்டை இழந்துவிட்டது என்று பொருள். அது ஏற்கெனவே முதுமை அடைந்துவிட்டது என்று அர்த்தம். அப்படிப்பட்ட அரசமைப்புச் சட்டம் மரணத்தை நெருங்கிக் கொண்டிருப்பதாகப் பொருள். ஓர் அரசமைப்புச் சட்டம் உயிரோடு இருக்குமென்றால், அது வளர்ந்து வருவதாக, பின்பற்றக் கூடியதாக, நெகிழ்வுத் தன்மை உள்ளதாக, மாற்றியமைக்கக் கூடியதாக இருக்கவேண்டும்."

டாக்டர் அம்பேத்கர் சொல்கிறார், "*A Constitution is not an end in itself, rather a means for ordering the life of a nation. The generation of yesterday might not know the needs of today, and if yesterday is not to paralyse today; it seems best to permit each generation to take care of itself.*" அதாவது, "அரசமைப்புச் சட்டம் என்பது, அதுவே முடிந்த முடிவாக அமைந்துவிட முடியாது. அது ஒரு நாட்டின் வாழ்க்கையை செம்மைப்படுத்தும் வழிமுறை மட்டுமேயாகும். நேற்றைய தலைமுறையினருக்கு, இன்றைய தலைமுறையினரின் தேவைகள் எவையென்று தெரிந்திருக்க முடியாது. 'நேற்றைய தினம்' என்பது 'இன்றைய தினத்தை' வலுவிழக்கச் செய்யக் கூடாது. ஒவ்வொரு தலைமுறையினரும் தமது தேவைகளுக்கேற்ப வழிமுறைகளை வகுத்துக்கொள்ள அனுமதிப்பதே சிறந்தது."

இத்தனைக் கருத்துக்களுக்கு இடையேதான்...

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கமிட்டியில் சங்மாவை சேர்த்திருக்கிறார்கள் இல்லையா? சங்மாவை சேர்த்தது எந்த வகையில்? அவர் முழுக்க முழுக்க ஒரு அரசியல்வாதி. அதோடு காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியா காந்திக்கு பரம எதிரியாக இன்று கருதப்படுபவர்.



அவரைச் சேர்த்தது எந்த வகையில் நியாயம்? அதை ஏன் நீங்கள் எதிர்க்கவில்லை என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரிவான விளக்கங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அரசமைப்புச் சட்டத்தை எந்த வகையிலேயும் மாற்றக் கூடாது என்று சொல்லப்படுகின்ற வாதங்களுக்குப் பதிலாக அது அமைந்திருக்கக் கூடும். நான்கூட, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பேசுகிறபோது மிகுந்த எச்சரிக்கையோடுதான் குறிப்பிட்டேன். அரசமைப்புச் சட்டம் மாறுதலுக்கு அப்பாற்பட்டதல்ல. அரசமைப்புச் சட்டம் மாற்றப்பட வேண்டும்தான். ஆனால், சமூக வளர்ச்சியின் தேவைக்குத் தக்கபடி முற்போக்கான திசைவழியில் மாற்றுவதா அல்லது சமூகச் சக்கரத்தை பின்னுக்கு இழுக்கிற முறையில் மாற்றுவதா என்பதுதான் கேள்வி. மத்தியிலே இருக்கிற பி.ஜே.பி. அரசு ஒருபோதும் சமூகத்தை முன்னுக்குக் கொண்டு போகிறபடி சிந்திக்காது என்பதால் அவர்கள் அப்படி மாற்றமாட்டார்கள் என்ற அச்சத்தைத்தான் நாங்கள் தெரிவித்தோமே தவிர வேறல்ல.

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சோவியத் ரஷ்யாவில் 4 முறை அரசமைப்புச் சட்டம் திருத்தி அமைக்கப்பட்டதைப் பற்றிச் சொன்னார்கள். அந்த தேசத்தை உருவாக்கியவர்கள், புரட்சி செய்தவர்கள். அவர்கள் அந்தச் சட்டத்தை மாற்றி அமைத்தார்கள். ஆனால், இந்தியாவைப் பொறுத்தவரை சுதந்திரப் போராட்டத்திற்கு சம்பந்தம் இல்லாதவர்கள், மகாத்மா காந்தியை தேசத் தலைவர் என்று ஏற்றுக்கொள்ள மறுப்பவர்கள் இந்த அரசமைப்புச் சட்டத்தை மாற்றி அமைத்தால் இந்த அடிப்படையே மாறும் என்பதுதான் எங்களுடைய கருத்து. சட்டத்திலே திருத்தங்களைக் கொண்டுவரலாம். ஆனால், அரசமைப்புச் சட்டத்தினுடைய அடிப்படையை மாற்றுவதை நாங்கள் எதிர்க்கிறோம் என்பதைத்தான் எங்களுடைய ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கிற விவாதத்திலே நாங்கள் சொன்னோம்.

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:* 'விடிய விடிய கதை கேட்டு சீதைக்கு இராமன் சித்தப்பா' என்று சொன்னதாக ஒரு பழமொழி உண்டு. அதேபோல, அரசமைப்புச் சட்டத்தினுடைய அடிப்படை மாற்றப்படக் கூடாது என்பதைத்தான் நான் இங்கே எடுத்துக் கூறிக்கொண்டிருக்கின்றேன். அந்த அடிப்படையிலேதான் இந்தக் குழுவும் போடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள், சங்மாவைச் சேர்க்கலாமா என்று. நாம் இப்பொழுது விவாதிப்பது கமிட்டியிலே... (குறுக்கீடு)

***திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அரசமைப்புச் சட்டத்தை திருத்துவதற்கான ஒரு கமிட்டி உருவாக்குகிற நேரத்தில் அதுவும் நாடாளுமன்றத்திலே வைக்கப்பட்டு, நாடாளுமன்றம் நிறைவேற்றுகிற குழுவாக அமைவதுதானே அது சிறந்ததாக இருக்கும் என்பதை முதல்வரிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:* எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சங்மாவைச் சேர்க்கலாமா என்று கேட்டார்கள். இப்பொழுது நான் சதாவதானம் எடுத்து 4 கேள்விகளுக்குப் பதில் சொல்லவேண்டும். அழகிரி கேள்விக்கு பதில் சொல்லிவிட்டேன். மற்ற தலைவர்களும் கேட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். சங்மாவைச் சேர்க்கலாமா என்று. கமிட்டியிலே யாரைப் போடுவது என்பது பற்றியல்ல நாம் இப்பொழுது பேசிக் கொண்டிருப்பது. இப்பொழுது நான் சொல்லிக் கொண்டிருப்பது, அரசமைப்புச் சட்டத்திற்கு மாறுதல் தேவையா, இல்லையா என்ற வாதத்தைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். கமிட்டியிலே போட்டவர்களைப் பற்றிப் பிறகு பேசிக் கொள்ளலாம்.

நம்முடைய சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள், இது முற்போக்காக மாற்றப்படவேண்டுமென்று சொன்னார்கள். எப்படி மாற்றப்படும் என்று இப்பொழுது நான் ஒன்றும் ஜோசியம் சொல்ல முடியாது. இது நல்ல முறையில் மாற்றப்பட்டால் நாம் ஆதரிக்கப் போகிறோம், இல்லையென்றால் எதிர்க்கப் போகிறோம். நாமெல்லாம் மிக விழிப்போடு இருந்து அதை கவனித்துக் கொண்டு இருக்கப்போகிறவர்கள். அதனால் இது நமக்குத் தீங்கு அளிக்கக்கூடிய முறையில், சிறுபான்மை சமுதாயத்திற்கோ அல்லது நம்முடைய



ரிசர்வேஷன் போன்ற கொள்கைகளுக்கோ எதிரானதாக, அடிப்படையை மாற்றக் கூடியதாக இருந்தால் நாம் வன்மையாகக் கண்டிப்போம் என்பதிலே எள்ளளவும் சந்தேகம் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நாடாளுமன்றத்தைக் கூட்டி அல்லவா கமிட்டி போட்டு இருக்கவேண்டும் என்று கேட்டார்கள். இந்தச் சட்டம் அந்தக் கமிஷனால் ஆலோசிக்கப்பட்டு, அது உருவாக்கப்பட்டு வந்த பிறகு நாடாளுமன்றத்தினுடைய ஒப்புதல் இல்லாமல் அது நிறைவேற முடியாது. கடைசி எல்லை நாடாளுமன்றம்தான். அப்படி இருக்கும்போது நாம் அஞ்சத் தேவையில்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அதை மாற்றலாம், மாற்றும்போது ஒழுங்காக மாற்றப்படவேண்டும் என்பதுதான் இங்கே சொல்லப்பட்ட கருத்து. அடிப்படை மாறாமல் மாற்றப்பட வேண்டுமென்பதுதான் இங்கே சொல்லப்பட்ட கருத்து.

ஆனால், எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற அ.தி.மு.க. வுடைய தலைவி அவர்கள் அண்மையில் விடுத்த அறிக்கையில் 'அரசமைப்புச் சட்டம் ஒரு தனிப்பட்ட கட்சி நலனுக்காக ஏற்படுத்தப்பட்டதல்ல. இது பி.ஜே.பி. கட்சியாக இருந்தாலும் சரி, அல்லது தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள மற்ற கட்சிகளாக இருந்தாலும் சரி, அவற்றின் நலனுக்காக அரசமைப்புச் சட்டத்தை மாற்றக்கூடாது. அரசமைப்புச் சட்டம் உண்மையிலேயே புனிதமானது. அதிலே மாறுபட்ட கருத்து எல்லோருக்கும் உண்டு. அது புனிதமானதா அல்லவா என்பது. புனிதமானதாக இருந்தால் 80 முறை அதில் கை வைத்திருக்கமாட்டார்கள். அதைத் திருத்துவதற்கு அவசரப்பட்டு எதுவும் செய்யக்கூடாது. மிகவும் கவனமாகவும், ஆழ்ந்த யோசனைக்குப் பிறகுதான் மாற்றம் செய்யவேண்டும். ஆட்சியில் இருக்கும் ஒரு அரசியல் கட்சியின் சலனத்தால் ஏற்படும் கருத்துக்கும், கற்பனைக்கும் ஏற்ப அரசமைப்புச் சட்டத்தில் மாற்றம் செய்யக் கூடாது.' என்று அம்மையார் அவர்கள் ஓர் அறிக்கை விட்டார்கள். ஆனால், அதே அம்மையாரைத் தலைவராகக் கொண்ட அ.தி.மு.க. கட்சி 24-9-1996 அன்று அவர்களுடைய பொதுக் குழுவிலே ஒரு தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது. 'தற்போதுள்ள ஆட்சி முறையில் தக்க மாற்றம் கொண்டு வந்து, நாட்டின் ஜனாதிபதியிடம் முழு அதிகாரம் வழங்கப்பட்டு அமெரிக்க ஜனநாயக அமைப்பைப் போன்ற,

ஜனாதிபதியை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறை அமையவேண்டுமென்றும், அதற்கேற்ப அரசமைப்புச் சட்டமே மாற்றப்பட வேண்டுமென்றும் இப்பொதுக் குழு கோருகிறது. அதே நிலையில், மாநிலங்களின் கவர்னர் பதவிகளெல்லாம் நீக்கப்பட்டு, மாநில ஆட்சித் தலைவர் மாநில மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் முறை உருவாகத் தேவையான மாற்றங்களை அரசமைப்புச் சட்டத்தில் செய்யவேண்டுமென்று இப்பொதுக் குழு கோருகிறது.' என்னென்ன மாற்றமோ, அது வேறு விஷயம். ஆனால், அரசமைப்புச் சட்டத்திலே மாற்றங்கள் செய்யலாம் என்று 1996 ஆம் ஆண்டு பொதுக் குழுவிலே தீர்மானித்துவிட்டு, இப்பொழுது மாற்றவே கூடாது என்று கூறுகின்ற அந்த விபரீதமான முரண்பாடுகள்கூட இன்றைக்கு நாட்டிலே காணப்படுகிற காட்சிகளாக அமைந்திருக்கின்றன.

பிற்பகல் 12-05

இன்னொன்று, இதன் தொடர்பாகப் பேசிய பிரச்சினைகளில் மிக முக்கியமானது ஆர்.எஸ்.எஸ். பிரச்சினை. என்னையே ஒரு ஆர்.எஸ்.எஸ். என்பதுபோல் சிலபேர் இங்கே உருவகப்படுத்திப் பேசினார்கள்; அல்லது கருதிக்கொண்டு தங்களுடைய வாதத்தை இங்கே எழுப்பினார்கள். நாங்கள் முஸ்லீம் லீகை ஆதரித்தபோது எங்களையெல்லாம் வகுப்புவாதிகள் என்று காங்கிரஸ்காரர்கள் சொன்னார்கள்; முஸ்லீம் லீகோடு நாங்கள் உறவு கொண்டிருந்த போது. இப்போதல்ல. ஜின்னா காலத்திலே சொல்லுகின்றேன். அந்தக் காலத்திலிருந்தே, ஜின்னா, அண்ணா என்று பேசப்பட்ட அந்தக் காலத்திலேயே முஸ்லீம் லீகில் சேர்ந்தவர்கள் எல்லாம் வகுப்புவாதிகள் என்று நாங்கள் அன்றைக்குப் புறக்கணிக்கப் பட்டோம். ஆர்.எஸ்.எஸ்-க்கு ஒன்றும் நான் வக்காலத்து வாங்க விரும்பவில்லை. இருந்தாலும் பழைய அரசியல் வரலாறுகளை நினைவூட்டுவது இந்த நேரத்தில் பொருத்தமாக இருக்கும் என்பதால் நினைவூட்ட விரும்புகின்றேன்.

1967 ஆம் ஆண்டு தேர்தல் நேரத்தில், தேர்தல் முடிவுக்குப் பிறகு பஞ்சாப், உ.பி., பீகார் ஆகிய 3 மாநிலங்களிலும், அகாலி தளம், பாரதிய கிரந்தி தளம், ஜனசங்கம் அடங்கிய கூட்டணி அரசில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அங்கம் வகித்தது என்பதை நாம் மறந்துவிடமுடியாது. ஜனசங்கம் என்பது ஆர்.எஸ்.எஸ். கட்சியினுடைய நிழல் என்று சொல்லப்படுகின்ற ஜனசங்கம், பாரதிய கிரந்தி தளம், அகாலி தளம் ஆகிய இந்தக் கட்சிகள் எல்லாம் பங்குபெற்ற அரசில் சி.பி.ஐ. கட்சி அங்கம் வகித்தது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அந்த அணியிலே பங்குபெற மறுத்துவிட்டது. ஆனால், அந்த அரசுகளுக்கு நிபந்தனையோடு கூடிய ஆதரவை அளிக்க மார்க்சிஸ்ட் கட்சி ஒப்புக்கொண்டது. இது, 1967-ல் சட்டசபைத் தேர்தல் எல்லாம் முடிந்த பிறகு. பிறகு, 1977-ல் தேர்தல் முடிந்த பிறகு ...



**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வது உண்மைதான். ஆனால், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய ஒரு மாநிலக் குழு தீர்மானித்து, அப்படிப் பங்குபெற்றது தவறு என்று மத்தியத் தலைமை சுட்டிக்காட்டியிருக்கிறது. எனவே, அதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய அதிகாரபூர்வமான கருத்தாக எடுத்துக்கொள்ள இயலாது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நான் அந்த அரசில் அங்கம் வகித்தார்கள் என்று தான் சொன்னேன். அது மாநிலக் குழுவா, மத்தியக் குழுவா என்பதெல்லாம் அல்ல. அப்படிப்பட்ட அரசில் சி.பி.ஐ. அங்கம் வகித்தது என்பதுதான்; ஜனசங்கம் இருந்த அரசில்.

பிறகு, 1977-ல் கடந்த தேர்தலில் மத்தியில் மொரார்ஜி தேசாய் தலைமையிலே ஜனதா அரசு அமைந்தது. ஜனதாவிலே இடம் பெற்ற கட்சிகளில் ஒன்று ஜனசங்கம் என்பதை அனைவரும் அறிவீர்கள். அந்த அரசில் வாஜ்பாய், அத்வானி, நானாஜி தேஷ்முக் ஆகியோர் இடம் பெற்றிருந்தார்கள். மார்க்சிஸ்ட் கட்சி வெளியே இருந்து அரசுக்கு ஆதரவு கொடுத்தது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

1989-90-ல் வி.பி. சிங் தலைமையிலே மத்தியில் ஆட்சி. அப்போது சி.பி.எம்., பா.ஜ.க. இரண்டுமே வெளியே இருந்து வி.பி. சிங் ஆட்சியை ஆதரித்தார்கள். அத்துடன், பல மாநிலங்களில் மைனாரிட்டி பலத்தோடு அமைந்த ஜனதா அரசுகளையும் பா.ஜ.க. ஆதரித்தது. என்னவோ, தி.மு.க. மாத்திரம்தான் ஜனசங்கத்தை அல்லது ஆர்.எஸ்.எஸ்.-ஐ ஆதரிப்பதாகச் சொல்லி, ஆர்.எஸ்.எஸ்.-ஐ நாங்கள் ஆதரிக்காத காலத்தில்கூட, பி.ஜே.பி.-ஐ ஆதரிக்கின்ற காரணத்தினாலேயே நாங்கள் எல்லாம் ஆர்.எஸ்.எஸ்.-ஐ ஆதரிக்கிறோம் என்று

சொல்லிக் குற்றம் சாட்டுகின்ற அந்தத் தன்மைக்காகத்தான் இந்த சரித்திரத்தை நான் எடுத்துச் சொன்னேனே அல்லாமல் வேறல்ல.

நம்முடைய அழகிரி அவர்கள்,பெரியாருடைய கொள்கையிலும், அண்ணாவினுடைய கொள்கையிலும் நாங்கள் திடமாக இருக்கவேண்டும் என்பதில் ரொம்ப அக்கறையாக இருக்கிறார். பெரியாருக்கே அந்த அளவுக்கு அக்கறை இருக்குமோ, இருக்காதோ, அண்ணாவுக்கே அந்த அளவுக்கு அக்கறை இருக்குமோ, இருக்காதோ, அவ்வளவு அக்கறையாக இருக்கிறார். மூப்பனார்கூடச் சொன்னார். கருணாநிதி செய்கின்ற இந்த வேலையைப் பார்த்து பெரியாரும் அண்ணாவும் இருந்திருந்தால் ரத்தக் கண்ணீர் வடித்திருப்பார்கள் என்று சொன்னார். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. குத்தூசி குருசாமி, 'விடுதலை'யிலே 'பலசரக்கு மூட்டை' என்ற தலைப்பிலே எழுதுவார். அதிலே அவர் எழுதியிருந்தார் திராவிடக் கழகத்துக்காரர்கள், பெரியார், இவர்கள் கட்டை விரல்களை எல்லாம் வெட்ட வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்கள் பேசிய காலத்தில், திராவிடக் கழகத்துக்காரர்கள் கட்டை விரல்கள் எல்லாம் வெட்டப்பட வேண்டுமென்று பேசிய காலத்தில் குத்தூசி குருசாமி, 'பலசரக்கு மூட்டை' என்ற தலைப்பில் 'விடுதலை'யில் எழுதிய அந்தக் கட்டுரை எல்லாம் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது.

Water படத்தைப் பற்றிச் சொன்னார். என்னவோ இங்கே எல்லாம் தாராளமாகப் படம் எடுக்கிற மாதிரி. 'பராசக்தி' படத்தைப் பற்றிச் சொன்னார். 'பராசக்தி' படம் என்ன பாடுபட்டு வெளியே வந்தது, எத்தனை முறை அதற்குத் தடை விதிக்கப்பட்டது! 'பராசக்தி' படம் வந்தபோது காங்கிரஸ் நண்பர்கள் தெருவுக்குத் தெரு கூட்டம் போட்டுக் கேட்டார்களே! நம்முடைய நண்பர் சின்ன அண்ணாமலை அவர்கள் 'பராசக்தி' எதிர்ப்புக்காக ஒரு அணியை அமைத்து தெருவுக்குத் தெரு, சென்னையிலும் சரி, திருச்சியிலும் சரி, கோவையிலும் சரி, கூட்டம் போட்டு என்ன தெரியுமா சொன்னார்? 'பராசக்தி' படம் பார்க்க தியேட்டருக்குப் பெண்களே நீங்கள் எல்லாம் கையில் துடைப்பக்கட்டையோடு செல்லுங்கள் என்று பேசினார்.

பிற்பகல் 12-10

அவர் மறைந்துவிட்டார். இருந்தாலும், அவர் பேசிய பேச்சு ஞாபகத்தில் இருக்கிறது. நான் அவரை ஒன்றும் இப்போது குறை



சொல்ல விரும்பவில்லை. அந்த அளவிற்குப் 'பராசக்தி' படத்திற்கு எதிர்ப்பு இருந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. அது தடை செய்யப்படும்; தடை செய்யப்படவேண்டும் என்றெல்லாம்கூட சொல்லப்பட்டது. ஒரு வாரப் பத்திரிகையில் 'பராசக்தி'யைத் தாக்கிப் பேசுவதை எழுதுவதற்காக ஒரு அட்டைப் படமே போட்டார்கள். 'பரப்பிரம்மம்' என்று போட்டு, ஒரு நிர்வாணப் பெண்ணை அந்த அட்டைப் படத்திலே போட்டு, 'பரப்பிரம்மம் — கதை வசவு தயாநிதி' என்றே அதைச் சித்தரித்தார்கள் அந்த அட்டைப் படத்திலே. அந்த அளவுக்கு எதிர்ப்பு 'பராசக்தி' வந்தபோது இருந்தது. அதைப்போல, 'சொர்க்க வாசல்'. 'சொர்க்க வாசல்' படத்திலே ஒரு பாட்டு, உடுமலை நாராயண கவியுடைய பாட்டு.

"ஆஸ்திகம் எது; நாஸ்திகம் எது அறிந்து சொல்வீரே

நன்றாய்ப் புரிந்து கொள்வீரே"

என்று ஒரு பாட்டு. அது சென்சாரிலே அப்போது வெட்டு.

"ஆஸ்திகம் எது; நாஸ்திகம் எது அறிந்து சொல்வீரே

நன்றாய்ப் புரிந்து கொள்வீரே"

என்ற அந்த வரிகள் சென்சாரிலே அப்போது வெட்டப்பட்டது.

அதற்குப் பிறகு அந்தப் பாட்டை நாராணய கவி மாற்றி எழுதிக் கொடுத்தார்.

"ஆகும் நெறி எது; ஆகா நெறி எது அறிந்து சொல்வீரே

நன்றாய்ப் புரிந்து கொள்வீரே"

என்று எழுத வேண்டிய நிலைமை அன்றைக்கு இருந்தது.

'காஞ்சித் தலைவன்' படத்திலே.. (குறுக்கீடு) முழுக்க முடித்துவிடுகிறேன். என் கதை முழுவதையும் முடித்துவிட்ட பிறகு உங்கள் கதையைச் சொல்கிறேன். 'காஞ்சித் தலைவன்' படத்திலே, வாதாபி என்ற ஒரு ஊர். காஞ்சிபுரம் என்ற ஓர் ஊர். இரண்டு ஊருக்கும் சண்டை. வாதாபியிலேயிருந்து படையெடுத்து வருகிறவன், "வெல்க வாதாபி, வெல்க வாதாபி"என்று சொல்லிக் கொண்டு வருகிறான். காஞ்சிபுரத்திலேயிருந்து படையெடுத்துப்

போகிறான் நரசிம்மவர்மன். அவன், "வெல்க காஞ்சி, வெல்க காஞ்சி" என்று பாடக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள். வெல்க காஞ்சி என்று சொன்னால், அது அண்ணாவைக் குறிக்கும் என்று சொல்லி, சென்சாரிலே கட். அதை மாற்றிப்போடச் சொல்லி விட்டார்கள் "வெல்க நாடு, வெல்க நாடு" என்று. அதுவும் நாடுதான். இதுவும் நாடுதான். எந்த நாடு வெல்வது? இருந்தாலும், வெல்க நாடு என்று மாற்றிப் போடச் சொன்னார்கள்.

'திரும்பிப் பார்' படத்திலே, "கொள்கை முழக்கம் செய்வதற்காக கோபுரம் மீது இருக்கும்- தலைவர்களே, திரும்பிப் பாருங்கள். அந்தக் கொள்கைகளிலிருந்து எத்தனை முறை வழுக்கி விழுந்திருக்கிறீர்கள்" இது ஒரு வசனம். அது வெட்டு. ஏன் என்று கேட்டால், சொல்கிறார் சென்சார் ஆபீசர், 'திருக்கோஷ்டியூர் கோவில் கோபுரத்திலே இராமானுஜாச்சாரியார் ஏறி நின்று, குதித்துக் கீழே விழுந்து செத்துப் போய்விட்டார். அதனால் நீ அவரைக் கிண்டல் பண்ணுகிறாய்' என்று சொன்னார். நான் எழுதியது, "கொள்கை முழக்கம் செய்வதற்காக கோபுரம் மேல் இருக்கும் தலைவர்களே, திரும்பிப் பாருங்கள். அந்தக் கொள்கைகளிலிருந்து எத்தனை முறை வழுக்கி விழுந்திருக்கிறீர்கள், திரும்பிப் பாருங்கள்." அதை ஏற்றுக்கொள்ளவில்லை அன்றைக்கு இருந்த சென்சார். இவ்வளவு கஷ்டங்களுக்கு இடையிலேதான் அப்போது படம் வெளிவர முடிந்தது. இப்போது உள்ள இந்தக் கஷ்டங்களைப் பார்க்கும்போது அந்தக் கஷ்டங்களெல்லாம் சாதாரணமானவை என்று யாரும் கூறிவிட முடியாது.

திரு. ச. அழகிரி: தலைவர் அவர்களே, எவ்வளவு சிரமங்கள் இருந்தபோதும், 'பராசக்தி' படம் எடுப்பதற்கு அனுமதிக்கப்பட்டது. காங்கிரஸ் கட்சி 'பராசக்தி' படத்தை நீங்கள் எடுப்பதற்கு அனுமதி மறுக்கவில்லை, தடை செய்யவில்லை. ஆனால், இன்றைக்கு இருக்கிற பாரதிய ஜனதா அரசாங்கம் 'வாட்டர்' படத்தை எடுப்பதற்கே இங்கே அனுமதிக்கவில்லை. அந்த மாநிலத்திலே அவர்களால் திரைப்படமே எடுக்க முடியாமல், வேறு மாநிலத்தை நோக்கி ஓடியிருக்கிறார்கள். அப்படி இருக்கிறபோதுதான் அதை நான் தவறு என்று சொன்னேன். அதற்காக நீங்கள் கேட்கவில்லையே என்றுதான் நாங்கள்...



மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: பிரச்சினை அது அல்ல. அரசாங்கம் அனுமதித்தது. ஒரு சாரார் அதை எதிர்க்கிறார்கள். அவ்வளவுதான் பிரச்சினை. அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. வெளிநாட்டுக்காரர் வந்து படம் எடுக்கிறார். அதை இந்திய அரசாங்கம் அனுமதித்துவிட்டது. அதாவது, பி.ஜே.பி. அரசு அனுமதிக்கவில்லை என்று சொல்வது தவறு. அனுமதித்துவிட்டது. இங்கே உள்ளவர்கள் அது தங்களைப் புண்படுத்துகிறது என்று சொல்லி, எதிர்க்கிறார்கள். நான் சொல்வது, கருத்துச் சுதந்திரத்தை எதிர்ப்பது முறையல்ல என்பதில் நான் அழகிரியோடு ஒத்துப்போகிறேன். அதே நேரத்தில் கருத்துச் சுதந்திரம் என்கின்ற பெயரால், எல்லாவற்றையும் சொல்லி, மற்றவர்களின் மனதைப் புண்படுத்தவும் கூடாது. அதையும் மறந்துவிடக்கூடாது. இந்து மதத்திலே உள்ள சில தவறான நம்பிக்கைகளை, மூட நம்பிக்கைகளையெல்லாம் ஒரு இந்துவைக் கொண்டு சொன்னால், அந்த விஷயம் வேறு. அதை இன்னொரு மதத்தைச் சேர்ந்தவனைக் கொண்டு சொன்னால், அந்த விஷயம் வேறு. இதையெல்லாம் எண்ணிப் பார்க்கவேண்டும். விரிவாக நான் இதைப்பற்றிப் பேசுவது நல்லதல்ல என்பதால் விட்டுவிடுகின்றேன்.

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்புகின்ற படங்களுக்குக் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே தடை விதிக்கப்பட்டது என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த Water திரைப்படம், ஒரு விதவையான இந்துப் பெண், அவள் விதவையாக இருக்கின்றபோது, தவறான வழியிலே நடப்பதற்கு நிர்பந்திக்கப்படுகிறார். அதிலிருந்து மீண்டு, அவள் ஒரு பொதுக் காரியத்திலே ஈடுபடுகின்ற ஒரு சிறப்பான செயலைத்தான் ஒரு தாழ்த்தப்பட்ட சகோதரனை மணந்து கொள்கிற வகையிலே கதை போகிறது. இப்படிப்பட்ட ஒரு படமும், ஒரு சீர்திருத்த, புரட்சிகரமான படம்தான். இதற்கு எதிர்ப்பு தெரிவிப்பது எந்தவகையிலே நியாயமானது என்பதைத்தான் நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 12-15

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இதே கேள்வியை நானும் கேட்டிருக்கிறேன். அதனால், எனக்கு முரண்பாடான கேள்வியை தீரன் அவர்கள் கேட்கவில்லை.

இங்கே உரையாற்றிய நமது குமாரதாஸ் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அது தேசத்தைப் பற்றிய, தேசத்தின் பாதுகாப்பைப் பற்றிய ஒரு குற்றச்சாட்டு. அதனால் நான் பதில் சொல்லியே ஆகவேண்டும். அவர்கள் சொன்னார்கள், 'தமிழ்நாட்டி னுடைய சட்டம் ஒழுங்கு சரியாக இருக்கிறது என்று கவர்னர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். சுமார் 3 தினங்களுக்கு முன்பு மேற்குப் புகுதியின் இராணுவத் தளபதி லெப்டினென்ட் ஜெனரல் விஜய் ஓபராய் சென்னைக்கு வருகை தந்து ஒரு பேட்டி கொடுத்திருக்கிறார். நீங்கள் இந்த விஷயத்தை மிகக் கண்ணும் கருத்துமாகக் கவனிக்கவேண்டும், நடவடிக்கை எடுக்கவேண்டும். பாகிஸ்தானிலிருந்து போதைப் பொருள்கள் தமிழகம் வழியாக வந்து இலங்கைக்குக் கடத்தப்படுகிறது' என்று டாக்டர் குமாரதாஸ் அவர்கள் அன்றையதினம் பேசியிருக்கிறார்கள். லெப்டினென்ட் ஜெனரல் விஜய் ஓபராய் அவர்கள் அப்படிப் பேசவில்லை என்பதுதான் உண்மை. 4-3-2000 அன்று சென்னை இராணுவ அதிகாரிகள் பயிற்சி அகடமியில் நடைபெற்ற பயிற்சி நிறைவு ஆண்டு அணிவகுப்பு விழாவில் கலந்துகொண்ட பின்னர் பத்திரிகைகளுக்கு ஓபராய் பேட்டி அளித்தார். அப்போது 'நமது நாட்டைச் சீர்குலைக்க பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. பல்வேறு வகைகளிலும் சதி செய்கிறது' என்று குறிப்பிட்டிருந்தார். "Pakistan's ISI was trying to destabilise India, Oberoi said" என்று The New Indian Express, Chennai, 5-3-2000 அன்று வெளிவந்தது. PTI-ல் கூட "Lt. Gen. Oberoi said forces like the Pakistani Inter-services Intelligence were going all out to destabilise the country in various ways and hence the armed forces had always to be fully on the guard." என்றுதான் அவர் சொல்லியிருக்கிறார். இதுதான் பத்திரிகையில் வந்திருக்கிறது. எனவே பாகிஸ்தானிலிருந்து போதைப் பொருள்கள் தமிழகம் வாயிலாக வந்து இலங்கைக்குக் கடத்தப்படுகிறது என்று சொன்னதாக நம்முடைய டாக்டர் குமாரதாஸ் சொன்ன அந்தக் கருத்து தவறான கருத்து என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) மறுக்கப் போகிறீர்களா?



**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நமது மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்திலே வேறுபடவில்லை. ஆனால் ஒரு கருத்து. பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு தமிழ்நாடு வழியாகக் கடத்தினார்கள் என்று இராணுவத் தளபதி கூறியதாக நான் சொன்னதாகச் சொன்னார்கள். அப்படிச் சொல்லியிருந்தால் நான் திருத்திக்கொள்கிறேன். தமிழ்நாட்டின் கடைப்பகுதி நெல்லை மாவட்டம் சாத்தான்குளம், திருச்செந்தூர் ஆகிய பகுதிகளிலே கடந்த 1, 1-1/2 ஆண்டுகளாக கிட்டத்தட்ட 100 முதல் 200 கோடி ரூபாய் போதைப் பொருள்கள் பிடிபட்டிருக்கின்றன என்பது பத்திரிகைகளில் தொடர்ச்சியாக வந்த செய்தி. அவை பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு விடுதலைப் புலிகளின் மூலமாகக் கடத்தப்படுவதாகவும், கைது செய்யப்பட்டவர்கள் இலங்கையையும் தமிழ்நாட்டையும் சார்ந்தவர்களாக இருக்கிற காரணத்தினாலே விடுதலைப் புலிகளின் ஊடுருவல் இந்தப் பகுதியிலே இருக்கிறது. போதைப் பொருள்கள் கடத்துகிற ஒரு பகுதியாக தமிழ்நாடு அமைந்துவிடக்கூடாது என்ற உணர்வின் அடிப்படையிலே சொல்லப்பட்டது. போதைப் பொருள்கள் அப்படிக் கடத்தப்படுகிற செய்திகள் தொடர்ச்சியாக பத்திரிகைகளில் வந்திருக்கின்றன என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கருத்தாகச் சொன்னால் தவறு இல்லை. Lt. Gen. Oberoi அவர்கள் சொன்ன கருத்தாகச் சொன்னதால்தான் தவறு என்று நான் குறிப்பிடுகிறேன். இது உறுப்பினருடைய கருத்தாக இருக்குமேயானால் அதற்கும் என்னிடத்திலே பதில் இல்லாமல் இல்லை. மத்திய அரசினுடைய வருவாய்த் துறை, நுண்ணறிவுப் பிரிவினரும், போதைப் பொருள் நுண்ணறிவுத் பிரிவினரும் மத்திய சுங்கத் துறை அதிகாரிகளும் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள். விடுதலைப் புலிகளுடைய நடமாட்டத்தை மத்திய உளவுப் பிரிவினரும், மாநில க்யூ பிராஞ்ச் பிரிவினரும் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள் என்பதையும் அதனால்தான் கடத்தப்பட்ட பொருள்கள் எல்லாம் பிடிபட்டிருக் கின்றன என்ற செய்தியைக்கூட தாங்களே சொல்கிறீர்கள் என்பதையும் நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உறுப்பினர் சொன்னதற்காக அல்ல. குறிப்பாக குற்றச் சாட்டுக்களைச் சொல்வது தவறு அல்ல. எப்படிக் குறைகளைச் சொன்னால் அதைக் களையவேண்டுமோ அதைப்போல குற்றச்சாட்டுக்களைச் சொன்னால் விசாரித்து அறிந்து நடவடிக்கை எடுக்கவேண்டியது ஒரு ஜனநாயக அரசினுடைய தார்மீகக் கடமையாகும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், குற்றச்சாட்டுக்களைச் சொல்லும்போது, ஆதாரத்தோடு சொல்ல வேண்டும் என்பது ஒரு முறை. ஆதாரமே தேவையில்லை என்ற ஒரு வாதம் எழுப்பப்பட்டு தலைவராகிய தாங்கள் அதற்கு அன்று தீர்ப்பு அளித்திருக்கிறீர்கள். எனவே, அதற்குள்ளே நுழைய நான் விரும்பவில்லை. பொதுவாக நான் இந்த அவையிலே எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்திருந்தபோது என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும் சரி, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும் சரி, குறைகளையும் சொல்லியிருக்கிறேன், குற்றச்சாட்டுகளையும் எடுத்து வைத்திருக்கிறேன். ஆனால், ஆதாரங்களோடு அந்தக் குற்றச்சாட்டுகளை எடுத்து வைத்திருக்கிறேன்.

பிற்பகல் 12-20

ஒருமுறை, மின்சார வாரியத்திற்காக எருக்கஞ்சேரியிலே நிலம் வாங்கியதிலே நடைபெற்ற ஊழலை விஸ்தாரமாக விவரித்துப் பேசும்போது, அப்போது மின்வாரியத் துறை அமைச்சராக இருந்த ஆர். வெங்கட்ராமன் எழுந்து, என்ன ஆதாரங்களோடு பேசுகிறீர்கள் என்று கேட்டார். ஆதாரங்களை நான் அவைத் தலைவரிடத்திலே கொடுத்திருக்கிறேன்; இப்போதும் தருகிறேன் என்று சொல்லி அதுசம்பந்தமாக எல்லா பத்திரங்களையும் எடுத்து மேசைமீது வைத்தேன். அதை வாங்கிக்கொண்டு, நாளை விசாரித்து, அதைப்பற்றிப் பேசுகிறேன் என்று ஆர்.வி. அவர்கள் மிகுந்த பெருந்தன்மையோடு அதை ஏற்றுக்கொண்டார்கள். அதற்குப்பிறகு விசாரிக்கப்பட்டது. விசாரிக்கப்பட்டு நான் சொன்ன குற்றச்சாட்டு உண்மைதான் என்றும் நிரூபிக்கப்பட்டது.

அதேபோல், எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது, பல்கேரியா -- பால்டிகா கப்பல் பேரத்தில் நடைபெற்ற சில தவறுகளைச் சுட்டிக்காட்டி, ஒன்று, இரண்டு, மூன்று என்று இருபது



ஆதாரங்களை, இதே அவையிலே, இந்த இடத்திலே நான் எடுத்துவைத்துப் பேசினேன். அன்று பதிலளிக்க வேண்டிய எம்.ஜி.ஆர். அவர்கள், அவருடைய பதிலுரையை அன்றைக்கு நிகழ்த்தாமல், நாளையதினம் நிகழ்த்துகிறேன் என்று சொல்லிவிட்டு மறுநாள் வந்து அந்தப் பதிலுரையை நிகழ்த்தினார்கள். அப்போது சொன்னார்கள், எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துவைத்த அந்த ஆதாரங்களையொட்டி அந்தக் கப்பல் வாங்குகிற முயற்சி கைவிடப்பட்டு விட்டது என்று அவர்கள் சொன்னார்கள். எனவே, எதற்கும் ஆதாரங்களை எடுத்து வைத்துப் பேசவேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேனேயல்லாமல், வேறல்ல. ஆனால், இங்கே ஒரு கடத்தலைக் கண்டுபிடித்துவிட்டோம் என்பதற்காக பதவி விலகுங்கள் என்று சொல்வதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஒரு கடத்தலைக் கண்டுபிடித்து, வெறும் டிரைவரை அல்ல; சாதாரண அப்பாவி ஆட்களை அல்ல; அதற்கு மூலகர்த்தாக்களாக இருந்தவர்களையே கைது செய்து, அவர்களுக்குச் சொந்தமான 5 லாரிகளையும் பறிமுதல் செய்து, வழக்கைத் தீவிரமாக நடத்துகிறோம்.புலன் விசாரணையும் நடைபெற்றுக் கொண்டிருக்கிற போது, 'நீங்கள் பதவி விலகுங்கள்' என்று அவசரப்பட்டு சொல்வது வெறும் அரசியலுக்குத்தான் பயன்படுமேயல்லாமல், அது ஆக்க பூர்வமான ஒரு காரியமாக இருக்க முடியாது என்பதுதான் என்னுடைய கருத்து.

பக்குவத்திற்கும் அமைதிக்கும் பெயர்பெற்ற பழனிசாமிகூட, அதைச் சொன்னால்தான் தன்னுடைய பேச்சு வேகம் என்று எண்ணிக் கொள்வார்கள் என்பதைப்போல, நேரு உடனடியாக பதவி விலக வேண்டும் என்று சொன்னார். நேரு பதவி விலக வேண்டுமென்று, நேரு காலத்திலிருந்தே சொல்லப்படுகிற விஷயம்தான் (சிரிப்பு) ஆனால் ஒரு குற்றச்சாட்டைக் கண்டுபிடித்து, கைது செய்ததற்காக, அந்தக் கடத்தலைத் தடுத்து நிறுத்தியதற்காக, பறிமுதல் செய்ததற்காக, அதைச் செய்தவர்களை உடனடியாக பதவி விலக வேண்டுமென்று சொல்வது அவ்வளவு பொருத்தமாக இருக்காது என்பதற்காகச் சொல்கிறேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இந்தப் பிரச்சினையிலே விளக்கம் தருகிறபோது, அமைச்சர் அவர்கள், 1996-97 ஆம் ஆண்டு, 1997-98 ஆம் ஆண்டு

என்று ஆண்டுவாரியாக புள்ளிவிவரங்களைத் தந்தார்கள். 1996-97 ஆம் ஆண்டு கோடிக்கணக்கான ரூபாய் அரிசி கடத்தப்பட்டது என்று சொன்னால், அதற்கு நடவடிக்கை நீங்கள் எடுத்திருக்கிறீர்கள் என்று சொன்னால், இந்த அரசு முழுமையாக அந்தப் பிரச்சினையிலே ஒரு நிரந்தர தீர்வைப் பெற வேண்டும் என்று, அல்லது அந்தத் துறையினுடைய அதிகாரிகள் விழிப்புணர்வோடு செயல்படுகிறார்கள் என்று சொன்னால், 2000-2001-ஆம் ஆண்டிலே இந்தத் தவறு நடந்திருக்கக் கூடாது. 1996-97-லே என்ன நடந்து கொண்டிருந்ததோ, அதுதான் தொடர்ந்து நான்காண்டுகளும் நடந்து கொண்டிருக்கிறது. எனவேதான் நாங்கள் சொல்கிறோம், அந்தத் துறையைப் பொறுத்தவரை, நிர்வாகம் சீர்கெட்டுவிட்டது என்று.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:*** உங்கள் திருப்திக்காக நீங்கள் எதை வேண்டுமானாலும் சொல்லலாம். இப்படியே சொல்லிக் கொண்டிருக்க முடியும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உங்கள் திருப்திக்காக நீங்கள் எதை வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால், ஐந்தாண்டுக் கால அ.தி.மு.க. ஆட்சியில் ....(குறுக்கீடு)

***திரு. பி.ஆர். சுந்தரம்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** நான் யாருக்கும் அனுமதி கொடுக்கவில்லை. உட்காருங்கள். உங்களுக்குப் பதில் சொல்லும் போது நீங்கள் கேட்கலாம். உட்காருங்கள்.

***திரு.பி. ஆர். சுந்தரம்:*** எனக்கு இனிமேல் என்ன பதில் கிடைக்கப் போகிறது? ஒன்றே ஒன்று, இந்த உணவு கடத்தலிலே, C.B. C.I.D. விசாரணை வைத்திருக்கிறீர்கள். இது உங்களால் ஏற்படுத்தப்பட்ட விசாரணை. நீங்களாகவே ஏற்படுத்திய விசாரணை ஒழுங்காக நடக்காது. அங்கே பெங்களூரில், அரிசி வாங்கிய ஜெகதீசன் என்பவரை இதுவரை பிடிக்கவில்லை. ஆகவே, இதிலே நீங்கள் நீதி விசாரணையை நடத்த வேண்டும்; அதை நீதிபதிகளை வைத்து நடத்த வேண்டும்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் இந்தக் கடத்தலிலே ஈடுபட்டவர்களை...



***திரு. பி.ஆர். சுந்தரம்:*** ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** நீங்கள் பேசியதை எல்லாம் பேசிவிட்டு, திரும்பவும் இப்போது பேசவேண்டும் என்றால் என்ன அர்த்தம்? உட்காருங்கள் (குறுக்கீடு)

***திரு. மு. அப்பாவு:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** நான் ஒன்றும் அனுமதி கொடுக்கவில்லை. (குறுக்கீடு) நான் அனுமதி கொடுக்கவில்லை, உட்காருங்கள்.

***திரு. மு. அப்பாவு:*** முதலமைச்சர் அனுமதி கொடுத்துவிட்டார்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** நான் அனுமதி கொடுக்கவில்லை உங்களுக்கு. (குறுக்கீடு) நான் கொடுக்கவில்லை. முதலமைச்சர் கொடுக்க முடியாது. நான் கொடுக்கவில்லை. நீங்கள் எல்லோரும் குறுக்கிட்டால் நான் அவையை நடத்த முடியாது. உட்காருங்கள்.

பிற்பகல் 12-25

***திரு. மு.அப்பாவு:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்...

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** முதலமைச்சர் அவர்கள் சொன்னதாலே நான் அனுமதி கொடுக்க வேண்டுமென்று கிடையாது, நீங்கள் ஒவ்வொருவராக எழுந்தால் என்றைக்கு நான் சட்டசபையை முடிப்பது?

***திரு. மு. அப்பாவு:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆதாரத்தோடு பேச வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்றுக்கொள்கிறேன். இந்து பத்திரிகையிலே, மத்தியிலே, ஆட்சி செய்கிற மத்திய உளவுத் துறையினுடைய உயர் அதிகாரியே, தமிழகத்தில் மத்தியத் தொகுப்பிலிருந்து எடுக்கப்படுகின்ற அரிசியில் பெரும்பகுதி வெளி மார்க்கெட்டில் விற்கப்படுகிறது என்பதை அவரே சொல்லும்போது, இந்த ஆதாரம் போதாதா? என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அப்படி விற்கப்பட்ட, எடுக்கப்பட்ட, கடத்தப்படுகிற அரிசியெல்லாம் பிடிக்கப்படுகிறது. அந்த விவரத்தைத்தான், தன்னுடைய உரையில் இறுதியாக, நம்முடைய அமைச்சர் நேரு அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள்.

அ.தி.மு.க. ஆட்சியிலே — அவர் சொன்ன வார்த்தைகள் — அரிசி கடத்தல்கள் அப்போதும் நடைபெற்றிருக்கின்றன. ஆனால், அப்போது வழக்குகள் போட்டு பொருட்களைக் கைப்பற்றினார்களே தவிர, ஒருவரைக்கூட, கடத்தல் தடுப்புச் சட்டத்திலே சிறையிலே அடைக்கவில்லையென்பதை நான் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், கழக அரசில் நான்கு ஆண்டுக் காலத்தில் 14 பேரை, கடத்தல் தடுப்புச் சட்டத்திலே சிறையிலே அடைத்திருக்கின்றோம். ஜெயலலிதா ஆட்சியில் 18,871 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. கழக ஆட்சியில் 16,991 வழக்குகள், அரிசி கடத்துவது ஒரு மூட்டையாக இருந்தாலும் கடத்தல்தான். 100 மூட்டையாக இருந்தாலும் கடத்தல்தான். இது வழக்குகளினுடைய எண்ணிக்கை. ஆனால், இந்தக் கடத்தலிலே சம்பந்தப்பட்டவர்கள் யாரையும் தண்டிக்கின்ற, சிறையிலே அடைக்கின்ற காரியங்கள் கடந்த ஆட்சியில் நடைபெறவில்லை. இந்த ஆட்சியிலேதான் அந்தக் காரியம் நடைபெற்றிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

29-11-1999 அன்று, அப்பாவு சொன்ன அதே 'இந்து' பத்திரிகையிலேதான எழுதியிருக்கிறார்கள். பொது விநியோகத்தில் சாதாரண ரக அரிசியை நிறுத்திய அரசின் அறிவிப்பால், இதுவரை வேறு வகையிலே விநியோகித்து பலன் பெற்றவர்களுக்குத்தான் பாதிப்பே தவிர, ஏழை குடும்ப அட்டைதாரர்களுக்கு எந்த பாதிப்பும் கிடையாது என்று. அந்த ஏழை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன என்று 'இந்து' எழுதுகிறது. அதை ஏற்றுக்கொண்டால் இதையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று, திரு. அப்பாவு அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஏதோ, இங்கே விலை ஏறிவிட்டது, விலை ஏறிவிட்டது என்ற ஒரு பிரச்சாரம். அரிசி விலையை ஏற்றி விட்டோம், அரிசி விலையை ஏற்றிவிட்டோம் என்று கூறுகிறார்கள். முன்பு மூன்று கிலோ, 2 ரூபாய் வீதம் கொடுத்தோம், அது 6 ரூபாய். 17 கிலோ 3.75 வீதம்



கொடுத்தோம், அது 63.75 காசு, ஆக மொத்தம், 69.75 செலவழித்த ஒருவன், இப்போதுள்ள 20 கிலோ அரிசியும் ரூ.3.50 வீதம் கொடுக்கும்போது 70 ரூபாய்தான் செலவழிக்கிறான். அதிகமாக 25 பைசாதான் அதிகமாக செலவழிக்க வேண்டியிருக்கின்றது. ஆனால், 20 கிலோ அரிசியும் நல்ல அரிசியாக கிடைக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது.

மாநிலத்தினுடைய ஒப்பீடுகளைப் பார்த்தால்; மேற்கு வங்கத்திலே வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ளவர்களுக்கு 5 ரூபாய், கிலோ அரிசி; மேலே உள்ளவர்களுக்கு 10 ரூபாய் 40 காசு, எவ்வளவு கிலோ தருகிறார்கள் என்றால் ஒருவருக்கு 2 கிலோ அரிசிதான் கொடுக்கிறார்கள்.

கர்நாடகத்திலே 10 கிலோ அரிசிதான் கொடுக்கிறார்கள். வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ளவர்களுக்கு 3 ரூபாய்50 காசு, மேலேயுள்ளவர்களுக்கு 9 ரூபாய்80 காசு.

கேரளாவிலே வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ளவர்களுக்கு 3 ரூபாய் 90 காசு, மேலேயுள்ளவர்களுக்கு 9 ரூபாய்60 காசு, மொத்தம் கொடுக்கிற அரிசி 10 கிலோ தான்.

ஆந்திராவிலே வறுமைக்கோட்டிற்குக் கீழே, 3 ரூபாய்50 காசு, மேலேயுள்ளவர்களுக்கு 9 ரூபாய்50 காசு, 20 கிலோ தருகிறார்கள்.

தமிழ்நாட்டிலே வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ளவர்களுக்கும், மேலேயுள்ளவர்களுக்கும், 3.50 ரூபாய் வீதம் 20 கிலோ அரிசி கொடுக்கிறோம் என்று சொன்னால் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதைக் குறை கூறுவதிலே என்ன நியாயம் இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. அப்பாவு இன்னொன்று சொன்னார். கோவில்பட்டியில் ஒரு அதிகாரி, T.S.O. அவர்களுடைய சாவைப்பற்றி சொன்னார். அதைப் பற்றி நான் விசாரித்தேன். ஏற்கெனவே அதுபற்றி தகவல்கள் வந்திருக்கின்றன என்னிடம். மீண்டும் அதை விசாரித்து உறுதிப்படுத்திக்கொண்டேன். கோவில்பட்டி வட்ட வழங்கல் அதிகாரி, T.S.O. ராஜகோபால் என்பவர் 7-1-1998 அன்று, இரண்டு வருடங்களுக்கு முன்பு — இப்போதுள்ள பிரச்சினைகளோடு அப்பாவு இதை சேர்த்துப் பேசினார். இது 1998-ஆம் ஆண்டு

பிரச்சினை. 1998-ல், தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டது பற்றி கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய எண். 21/98 பிரிவு 174 குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

பிற்பகல் 12-30

அவரது இறப்பில் சந்தேகம் இருப்பதாக உறவினர்களும், மற்றவர்களும் புகார் கூறியதால், இவ்வழக்கு 302 ஐ.பி.சி. பிரிவாக மாற்றப்பட்டு C.B. C.I.D. விசாரணைக்கு அனுப்பப்பட்டது. 15-2-1999 அன்று இவ்வழக்கு தற்கொலைதான் என்று முடிவு செய்யப்பட்டது. 3-1-1998 அன்று TCG 9805, TSF 5254 என்ற இரு லாரிகள் அருப்புக்கோட்டையிலிருந்து அரிசி ஏற்றிச் செல்லும்போது எட்டையபுரத்தில் அவை ராஜகோபால் மற்றும் அதிகாரிகளால் மறிக்கப்பட்டு பின்னர் கோவில்பட்டி அரிசி வியாபாரி பழனிச்செல்வம் மூலம் 13,000 ரூபாய் லஞ்சம் பெற்றுக்கொண்டு ராஜகோபால் அந்த லாரிகளை விடுவித்தார். 6-1-1998 அன்று அருப்புக்கோட்டை அரிசி வியாபாரிகள் கோவில்பட்டி, கோட்டாட்சியரிடம் இதுகுறித்து புகார் செய்யவே, கோட்டாட்சியர் ராஜகோபாலை அழைத்து, பணத்தை திருப்பிக் கொடுக்கும்படி வற்புறுத்தினார். ஏற்கெனவே 1981 ஆம் ஆண்டு லஞ்ச ஒழிப்புத் துறை வழக்கில் சிக்கி சிரமத்திற்கிடையே இருந்த ராஜகோபால் எவ்வாறாக பணத்தைத் திருப்பிக்கொடுக்க வேண்டுமென்று எண்ணி முயற்சி செய்ததாகவும், ஆனால் பணத்திற்கு வழி செய்ய இயலாததால் மனமுடைந்து 7-1-1999 அன்று விடியற்காலையில் தற்கொலை செய்துக் கொண்டதாகவும் C.B. C.I.D. முடிவுக்கு வந்தது என்ற இந்த விவரத்தை நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகின்றேன். நம்முடைய செல்லக்குமார் கொடைக்கானல் உட்லண்ட்ஸ் ஹோட்டல் பற்றிச் சொன்னார்கள். Change of land use. அதிலே அதிகாரிகள் செய்த தவறுக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்த அதிகாரிகள் ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளாக்கப் பட்டுள்ளார்கள். அதை செல்லக்குமார் சுட்டிக்காட்டினார். இதற்கும் வேறு ஒரு கொடைக்கானல் கேசுக்கும் சம்பந்தம் கிடையாது. அது மலை, இது மடு என்பதை மாத்திரம் தம்பி செல்லக்குமாருக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அவர்கள் இன்னொன்று சொன்னார்கள்.





டாக்டர் அ. செல்லக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூன்று ஹோட்டல்களுக்கான அனுமதியில் அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. நான் இந்த மன்றத்தின் மூலமாக முதலமைச்சரைக் கேட்பது, அமைச்சருடைய தகவலுக்கு, பார்வைக்கு வராமல் ஒரு அரசாணை ஒரு அரசிலே பிறப்பிக்கப்படுமா என்பதை முதலமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். மூன்று அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அரசாணை பிறப்பிக்கப்பட்டு மூன்று மாதத்திற்குப் பிறகு முதலமைச்சர் அவர்கள் எச்சரிக்கை உணர்வு காரணமாக அதை ரத்து செய்திருக்கிறார்கள். அதற்குத்தான் நான் பாராட்டும் தெரிவித்தேன். ஒரு அரசாணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னால், துறையினுடைய உயர் அதிகாரிகளுடைய பார்வைக்கு வந்து அதன் பிறகு அமைச்சருடைய பார்வைக்கும் வராமல் ஒரு அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்க முடியாது. எனவேதான் சொல்கிறேன், நீங்கள்கூட சொல்ல முடியும் நான் ரத்து செய்து விட்டேன் என்று. நான் ஒரு சிறு உதாரணத்தை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒரு போலீஸ் கான்ஸ்டபிள் ஒரு திருட்டை செய்து விட்டாலும்கூட அந்தத் திருட்டுப் பொருளை அந்த இன்ஸ்பெக்டர் கண்டுபிடித்து மீட்டுக்கொடுத்தால், நான் மீட்டுக் கொடுத்துவிட்டேன், எனவே, களவு செய்த அல்லது தவறு செய்த காவலர் தண்டனைக்கு ஆட்பட வேண்டுமா என்று ஒரு கேள்வி கேட்டால் அது எந்த விதத்திலும் பொருத்தமாக இருக்காது. இங்கே அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. தவறு நடந்திருக்கிறது. கொடைக்கானல் பிரச்சினை என்பது இந்தியா முழுவதும் தெரிந்த பிரச்சினை. ஒரு தெரியாத பிரச்சினையிலே ஒரு தவறு நடந்திருந்தால் அது தெரியாமல் நடந்திருக்கலாம் என்று நாம் விட்டுவிட முடியும். இந்தப் பிரச்சினை நான்கு ஆண்டுகாலமாக இந்த மன்றத்திலே பலமுறை விவாதிக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு பொதுக் கூட்டங்களிலே பேசப்பட்டிருக்கிறது. நீதிமன்றத்திலே வழக்கு தொடுத்து, தண்டனையும் அளிக்கப்பட்டிருக்கிறது. எனவே, நான் சொல்கிறேன், முதலமைச்சர் அவர்கள் இதைத் தட்டிக் கழிக்காமல் தவறு யார் செய்திருந்தாலும் அந்தத் தவறுக்கு தார்மீகப் பொறுப்பேற்று அமைசச்ர் அவர்கள் இந்த மன்றத்திலே தன் ராஜினாமாவை அறிவிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அவர் சொன்ன கொடைக்கானல் பிரச்சினை வேறு, இந்தக் கொடைக்கானல் பிரச்சினை வேறு. நான்கு ஆண்டுகாலமாக நாட்டிலே விவாதிக்கப்படுவது இதுவல்ல. அந்த விவகாரமே வேறு; எல்லோரும் தடுத்து, செயலாளர்கள் எல்லாம் தடுத்து, அதைக் கேட்காமல் போடப்பட்ட கையெழுத்து அது. அது நீதிமன்றத்திலே ஏற்கெனவே இருந்து தண்டிக்கப்பட்ட விவகாரம். மறுபடியும் நீதிமன்றத்திலே appeal-லிலே இருக்கிற விவகாரம். அதைப்பற்றி நான் பேச விரும்பவில்லை. ஆனால், இதில் ஒரு செயலாளர், இன்னொரு செயலாளருக்கிடையிலே ஒரு மாறுபாடு ஏற்பட்டது. அமைச்சர், அந்த மாறுபாடு ஏற்பட்டதும், ஒரு குழுவைப் போட்டு, அந்தக் குழுவினர் சென்று அதைப் பார்த்து விட்டு விவரம் தெரிந்து கொண்டு வந்து சொன்னார்கள். போனவர்கள், இவர்களுக்குக் கொடுக்கலாம், விதிவிலக்கு அளிக்கலாம் என்று சொன்னார்கள். அமைச்சர் அதை ஏற்றுக்கொண்டார். இந்த விவரம் எனக்குத் தெரிந்தவுடன் உடனடியாக அதைப்பற்றி விசாரிக்கச் சொல்லி, தலைமைச் செயலாளருக்கு உத்தரவிட்டு, தலைமைச் செயலாளர் அந்த உத்தரவின்படி நடந்துகொண்டு இரண்டு செயலாளர்கள் மீதும் நடவடிக்கை எடுத்திருக்கிறார். ஒழுங்கு நடவடிக்கை அவர்கள் மீது எடுக்கப்பட்டிருக்கிறது. இதைத்தான் நான் சொல்ல முடியும்.

அடுத்து World Tel பற்றி செல்லக்குமார் இங்கே சொன்னார். சென்ற ஆண்டே இதைப்பற்றி விரிவாக இந்த மன்றத்திலே பேசி இருக்கின்றோம்.

பிற்பகல் 12-35

அவர் இப்போது கூறிய குற்றச்சாட்டு - அந்த நிறுவனம் ஒரு தனியார் நிறுவனம் அல்ல என்பதுதான் நான் சொல்கிற பதில். அந்த நிறுவனத்திற்கு ஏன் Global tender போடவில்லை என்று கேட்கிறார். Global tender போடுவது எது எதற்கு என்றிருக்கிறது. நேற்றையதினம்கூட மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் இங்கே ஒரு நிகழ்வின்போது அதை விளக்கியிருக்கிறார். ஒரு தொழில் தொடங்குவதற்காக தனியாரோ—அல்லது அரசு நிறுவனத்தோடு இணைந்து கூட்டு நிறுவனமாக, joint venture அடிப்படையிலே முன்வரும்போது அதற்கு Global tender விடத் தேவையில்லை என்பது மரபு.



உதாரணமாகக் கூறவேண்டுமேயானால் (குறுக்கீடு) நான் முழுவதுமாக முடித்துவிடுகிறேன். Ford, Hyundai போன்ற தொழிற்சாலைகள் Global tender விட்டுத் தரப்படவில்லை. இது தனியார் தொழில் தொடங்குவதற்கு உதாரணம். M.O.U. போட்டு விடப்பட்டது. Joint venture-க்கு உதாரணம் சொல்ல வேண்டுமேயானால் ஸ்பிக் தொழிற்சாலை கூட்டு நிறுவனத்திற்கு உதாரணமாகும். அதுவும் Global tender விட்டுத் தரப்படவில்லை.

இந்தத் திட்டத்தில் வெளிநாட்டு ஒத்துழைப்பு இருக்கும் வகையில் 30-11-1999 அன்று மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. World Tel நிறுவனம் 18-1-2000 அன்று மத்திய அர்சின் தகவல் தொடர்புத் துறையிலிருந்து தேவையான அனுமதிகளைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் சமுதாய இணைய மையங்கள் ஏற்படுத்த அடிப்படைத் தேவையான தேசிய நெடுஞ்சாலைகள், மாநிலச் சாலைகள் மற்றும் இதரச் சாலைகள் வழியாக Optic Fibre Cables அமைக்கத் தேவையான அனுமதி பல்வேறு நிபந்தனைகளுடன் வழங்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் தகவல் தொடர்பு சம்பந்தமான தாராளமயமாக்கல் கொள்கையின்படி, இணையம் சம்பந்தப்பட்ட சேவைகளை வழங்குவதற்கு, யார் வேண்டுமானாலும் அனுமதி களைப் பெற்றுக்கொள்ள முடியும். அப்படி இதுவரை மத்திய அரசிடமிருந்து நூறு நிறுவனங்கள் அனுமதிகளைப் பெற்றுள்ளன. அனுமதி வழங்குதலை மத்திய அரசு தாராளமயமாக்கியதன் நோக்கமே, V.S.N.L. மற்றும் DoT தவிர, மற்ற நிறுவனங்கள் இணைய சேவையை எளிதாக எல்லா இடங்களுக்கும் வழங்கிட வேண்டும் என்பதுதான்.

இந்த Optic Fibre Network என்பது மாநிலம் முழுவதும் தொலை தூரத்தில் உள்ள கிராமங்களிலேகூட இணைய வசதிகளை உருவாக்குவதற்குத் தேவையான அதிநவீன, அதிவேகம் கொண்ட தொடர்பு சாதனமாகும். இது இணையத்திற்காகக் காத்திருக்கும் நேரத்தை வெகுவாகக் குறைத்து விடுகிறது. இந்த நிலையில், World Tel நிறுவனம் தமிழ்நாடு முழுவதும் இணைய மையங்களை அமைப்பதற்கு முன்வந்துள்ளது.

World Tel நிறுவனம் Optic Fibre Network-ஐ தமிழ்நாடு முழுவதும் அமைத்ததற்குப் பிறகு சேவையை கட்டாயம் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று யாரையும் யாரும் நிர்பந்திக்க முடியாது.

V.S.N.L. என்ற நிறுவனம், நாட்டிற்கு வெளியே இணைய தொடர்பு (Internet Access) மற்றும் தகவல் இணைப்பு (Data Links) ஆகியவற்றை வழங்குவதற்கென்றே உருவாக்கப்பட்ட நிறுவனம். மாநிலத்திற்குள் தகவல் தொடர்புக்கு அடிப்படைத் தேவையான கட்டமைப்புகளை அந்த நிறுவனம் வழங்குவதில்லை. M.T.N.L என்ற நிறுவனத்தைப் பொறுத்தவரை மும்பையிலும் டெல்லியிலும் மட்டுமே அது செயல்பட்டு வருகிறது. சென்னையில் இல்லை. DoT-ஐப் பொறுத்தவரை தமிழ்நாட்டில் தகவல் தொடர்பு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை நவீனப்படுத்துவதற்குத் தேவையான முதலீடுகளைச் செய்ய இதுவரை முன்வரவில்லை. அதனால்தான், சென்னை தொலைபேசித் துறையை ஒரு நிறுவனமாக மாற்றி, அதிக முதலீடுகளைச் செய்ய வேண்டுமென்று மத்திய அரசைத் தொடர்ந்து கோரி வருகின்றோம்.

World Tel நிறுவனத்துடன் செய்துகொள்ளப்பட்டுள்ளது ஒரு கூட்டு நிறுவன ஒப்பந்தம் மட்டுமே. இப்படி கூட்டு நிறுவன ஒப்பந்தம் செய்துகொள்ளும்போது Tender. Bidding என்பதெல்லாம் தேவை இல்லை. மாநில மக்களுக்குப் பயன்படும் என்று தோன்றும்போது, திறன் பெற்றுள்ள எந்த நிறுவனத்தோடும் இப்படி கூட்டு நிறுவன ஒப்பந்தம் (Joint Venture) செய்துகொள்ளலாம். இப்படி கூட்டு நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களையோ அல்லது உருவாக்கப்படும் சேவைகளையோ, அரசோ அல்லது அரசு நிறுவனங்களோ வாங்கிப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் கிடையவே கிடையாது. கூட்டு நிறுவனம் என்பது ஒருவருக்கு மட்டுமே உரிமை (Non-Exclusive Basis) என்ற அடிப்படை எதுவும் இல்லாதது.

World Tel நிறுவனம் செய்துகொண்ட ஒப்பந்தத்தைப் போல,அரசு விதிக்கும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளும் எந்த நிறுவனமும், அது போன்றதொரு கூட்டு முயற்சியாகவோ தனியாகவோ ஒப்பந்தத்தை செய்துகொள்ள முன்வரலாம். இதில் ஒளிவுமறைவு எதுவும் கிடையாது.



செல்லக்குமார் சொல்லியதுபோல இன்போசிஸ், சத்தியம், டிஷ்னெட், அல்காடில், சீமென்ஸ் போன்ற நிறுவனங்கள் World Tel நிறுவனத்திற்கு இணையாக தமிழ்நாட்டில் இணைய மையங்களுக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை அமைக்க முன் வந்தால் World Tel நிறுவனத்திற்கு என்ன நிபந்தனைகளின்படி அனுமதி வழங்கப்பட்டதோ, அதேபோல அவர்களுக்கும் அனுமதி வழங்கப்படும்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, World Tel நிறுவனம் ஒரு தனியார் நிறுவனம் அல்ல என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஒரு நிறுவனத்தை ரிஜிஸ்டர் செய்ய வேண்டுமென்று சொன்னால், Company Law Board-ல் ரிஜிஸ்டர் செய்ய வேண்டும். நம்முடைய Company Law Board-லே 27-7-1999 அன்று எல்காட் நிறுவனத்தினுடைய அலுவலகத்தினுடைய முகவரியைக் கொடுத்து care of address-லே World Tel Tamil Nadu Private Limited ஒரு …

பிற்பகல் 12-40

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, கூட்ட நிறுவனங்களுக்கு tender விடத் தேவையில்லை. ஏன் tender விடவில்லை என்று கேட்டார்? அதற்குத்தான் இது. ஒரு நீண்ட பிரசங்கமாக வைத்தால் ஒரு நாள் தனியாகவே ஒரு விவாதம் (குறுக்கீடு) தனியாகவே World Tel பற்றி ஒரு விவாதம் வைத்துக்கொள்ளலாம். இப்போது நேரத்தை வீணாக்க நான் விரும்பவில்லை. (குறுக்கீடு) tender விடத் தேவையில்லை. கூட்டு நிறுவனத்திற்குத் தேவையில்லை.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** தனியார் நிறுவனம் என்பதற்கு நான் சொல்கிறேன். 27-7-1999 அன்று Company Law Board அலுவலகத்திலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதனுடை பங்குதாரர்கள் யார் என்று சொன்னால்,

1. B.H. Kothari, No.11, M.G. Road, Chennai-34

2. Dr. N. Ravi, 302, Pinner Road, Horrow, Middlesex, HAI, 4 L B, U.K.

இவர்கள் இரண்டு பேரும்தான் பங்குதாரர்கள் என்று மத்திய அரசாங்கத்தினுடைய Company Law Board-லே பதிவு செய்யப்பட்ட சான்றுகள் அதற்கான அத்தாட்சிகளை நான் வைத்திருக்கிறேன். அதனுடைய பதிவு எண் கூட சொல்கிறேன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் தனியார் நிறுவனம் என்பதைச் சொல்லுங்கள். அதைப்பற்றி எனக்கு ஒன்றும் வருத்தம் இல்லை. ஒப்பந்தம் - tender call for பண்ண வேண்டிய முறை தேவையில்லை என்பது முதலமைச்சருடைய வாதம். ஆகையினால் நீங்கள் அதற்கு மேலே வாதம் பண்ணுவதற்கு ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) என்ன சொலலப் போகிறீர்கள்? அரசினுடைய வாதம் அதிலே tender call for பண்ண வேண்டியதில்லை.

**மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி:** யார் வேண்டுமானலும் இந்த வேலையைச் செய்யலாம் என்று இருக்கும்போது அதற்கு tender தேவையில்லை. M.O.U. போதும் என்பதுதான் என்னுடைய வாதம். அவ்வளவுதான் நான் சொல்வேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** நான் சொல்லி முடித்து விடுகிறேன். கேட்ட கேள்விக்கு நான் பதில் கொடுத்து விடுகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இங்கு செல்லக்குமார் சொன்ன அந்தக் கம்பெனிகளும்கூட வரலாம். அவை வருவதற்குத் தடை கிடையாது.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் Hyundai கார் வந்ததும் Ford கார் வந்ததும் அதற்கெல்லாம் Global tender விடவில்லை என்று சொன்னார்கள். Hyundai காரோ, Ford நிறுவனமோ இங்கே அவர்கள் ஒரு தொழிற்சாலையை நிறுவியிருக்கிறார்களே தவிர வியாபார ஒப்பந்தத்தை முழுமையாக அவர்களே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்தினுடைய வாகனங்களுக்கு மொத்தமாக அவர்களே குத்தகை எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால், நாம் வைக்கப்போவது 13,000 centres வைக்கிறோம். எதற்காக? தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து நிறுவனங்களையும் கல்வி நிலையங்களையும் Internet - இணையத்தோடு இணைப்பதற்காக. எனவே, தமிழகத்திற்குரிய - நாளை - எதிர்காலத்திலே Internet



இணைப்புகளைக் கொடுப்பதற்காக உருவாக்கபபடுகின்ற இயக்கம் என்கிற காரணத்தினாலே இதற்கு Global tender நிச்சயமாக வைக்கப்படவேண்டும். இது ஒரு தனிப்பட்ட முறையிலே வியாபாரம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது உங்கள் கருத்து. அரசாங்கம் கருத்து அது அல்ல என்று சொல்லிவிட்டார்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** அது அவருடைய கருத்து. அரசாங்கத்தினுடைய நிலை அது அல்ல. ஏனென்றால் யார் வேண்டுமானாலும் வரலாம் அந்தத் தொழிலுக்கு என்று இருக்கும்போது அதற்கு டெண்டர்கள் தேவையில்லை என்பதுதான் அரசாங்கத்தினுடைய கருத்து. இந்த ஆளுநர் உரையில் மிக முக்கியமான ஒரு சீர்திருத்தமான புறம்போக்கு நிலங்களை 20 ஆண்டுகள் குடியிருந்தவர்களுக்கு, அரசுக்குத் தேவைப்படாமல் இருந்தால், அவர்களுக்கே வழங்கப்படும் என்ற ஒரு திட்டம் இருக்கிறது. நிலச் சீர்திருத்தத்திலே இந்த அரசுக்கு நீண்டகாலமாக இருந்து வருகின்ற ஆர்வத்தினுடைய அடையாளமாகவும் ஏழை எளிய மக்களுக்கு அவர்களுடைய வீடு, மனை இவற்றுக்காக நாம் ஆக்கபூர்வமாகச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து வருகிறோம். இவையெல்லாம் ஒரு தொடர்கதை. நில உச்ச வரம்புச் சட்டம் 1960 ஆம் ஆண்டு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்கின்ற அளவுக்கு அறிவிக்கப்பட்டபோது பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் கொண்டுவரப்பட்ட அந்த சீரிய திட்டத்தை காமராஜரையே ஏமாற்றுகின்ற அளவிற்கு அன்றைக்குப் பலர் செயல்பட்டு நிலங்களைப் பிரித்துக்கொண்டு அதன்காரணமாக வெற்றிபெற முடியாமல் செய்தார்கள். அன்றைக்கு தமிழ்நாட்டிலே இருந்த நிலத்தில் 24,194 ஏக்கர்தான் உபரி நிலமாக அறிவிக்கப்பட்டு 16,330 ஏக்கர்தான் கைப்பற்றப்பட்டு அதிலே ஒரு ஏக்கர்கூட உபரி நிலமாக யாருக்கும் வழங்கப்படவில்லை. அதையொட்டித்தான் 15-2-1970-ல் நான் முதலமைச்சராக இருந்தபோது 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற ஒரு சட்டத்தைப் போட்டு எடுக்கப்பட்ட உபரி நிலம் 1,97,900 ஏக்கர். நிலம் அற்றவர்களுக்கு வழங்கப்பட்ட நிலம் 1,71,673 ஏக்கர். மீதம் உள்ள நிலங்கள் நீதிமன்றங்களிலே இன்றைக்கும் பிரச்சினைகளாக இருந்து வருகின்றன. 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று கொண்டு வந்துவிட்டு பிறகு 1,97,900

ஏக்கர் எடுத்தோம். 1,71,673 பேருக்கு நிலத்தை வழங்கினோம். அதிலே பயன் பெற்ற உழவர்களுடைய எண்ணிக்கை 1,37,236 பேர்.

பிற்பகல் 12-45

இவர்களில் ஆதிதிராவிடர்கள் 61,985 பேர். பழங்குடி மக்கள் 204 பேர். 1971 ஆம் ஆண்டு குடியிருப்பு மனைச்சட்டம் என்றவொரு தீவிர சட்டத்தைக் கொண்டு வந்து 1,75,000 பேருக்குக் குடியிருப்புகளைச் சொந்தமாக்கிய அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை அனைவரும் அறிவீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது மதிப்பிற்குரிய பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள், அந்த விழா திருத்துறைப்பூண்டியிலே நடைபெற்றபோது - நம்முடைய பழனிசாமி அவர்களெல்லாம் ரொம்ப இளைஞர் அப்போது - அந்த விழா நடைபெற்றபோது மணலி சொன்னார்கள் "பல தோழர்களுடைய ரத்தத்தைச் சொரிந்தும் கிடைக்காத இந்த வரத்தை ஒரு துளி மையைச் செலவழித்து கருணாநிதி சட்டமாக ஆக்கியிருக்கிறார்" என்று அப்போது பேசி பெருமைப்படுத்தினார். ஆதிதிராவிடர்கள் மாத்திரம் இலட்சத்து இரண்டாயிரம் பேர் இதிலே பலன் பெற்றார்கள். இப்படி வரிசையாக நிலச் சீர்திருத்தத்திலே அக்கறைகொண்டுள்ள இந்த அரசு இப்போது பட்டாக்கள் எல்லோருக்கும் வழங்கப்பட வேண்டுமென்பதற்காக, 20 ஆண்டுகள் புறம்போக்கு நிலங்களிலே குடியிருந்தவர்களுக்கு மனைப்பட்டா, அரசக்குத் தேவைப்படாத பட்சத்தில் வழங்குகின்ற அந்தத் திட்டத்தையும் அறிவித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: Point of clarification. மாண்புமிகு பேரவைத் த்லைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏழையெளிய மக்களுக்கு இப்போது பட்டா வழங்குவதற்காகக் கொண்டு வந்திருக்கிற இந்தத் திட்டத்தை நிச்சயமாக வரவேற்கிறோம். ஆனால், 20 ஆண்டுகள் என்று நீங்கள் வைத்திருப்பது, ஏற்கெனவே 2 ஆண்டு 3 ஆண்டுகளுக்கு முன்னால்கூட ஒருவர் வீடு கட்டிவிட்டால், அந்த இடத்திலே இருக்கிற வீட்டையும் சென்று இடிக்கப்போவதும் இல்லை, அது அரசுக்கு வரப்போவதும் இல்லை. நம் உள்ளாட்சித் துறைகள் அவற்றிற்கு வரி போடாமல் இருந்துகொண்டு நட்டத்திலே



இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அந்த 20 ஆண்டுகள் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தப் பாலிசியைக் கொஞ்சம் நீங்கள் மாற்றியமைத்து, ஓராண்டு, ஈராண்டுகளுக்கு முன்னால் கட்டியிருந்தாலும்கூட, இனி நாம் இடிக்க முடியாதவற்றை நீங்கள் பட்டா கொடுத்துவிடுவதற்கு ஆவன செய்வதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கே. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே ஒரு முக்கியமான விஷயம். ஒரு மாநில ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பராயன் நீங்கள் ஒரு நிமிடம் உட்காருங்கள். உரையிலே மாண்புமிகு முதலமைச்சர் சொல்வதிலே ஏதாவது தெளிவில்லை என்றால் விளக்கம் கேட்கலாம். நீங்கள் புதுச் சலுகையைக் கேட்பதற்குப் பெயர் point of order-ஆ? இது நீங்கள் பேசும்போது சொன்னது, அதற்கு அவர்கள் பதில் சொல்கிறார்கள், பதில் இல்லை என்றால் பதில் இல்லை என்றுதான் அர்த்தம். Point of order என்று இதையெல்லாம் கேட்கக்கூடாது. நீங்கள் முறையில்லாமல் நடக்கிறீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

திரு. கே. சுப்பராயன்: Point of clarification. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதிலே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்:அப்படியென்றால் கேளுங்கள். இல்லாவிட்டால் நான் அனுமதிக்கமாட்டேன்.

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 20 ஆண்டுகளாகக் குடியிருக்கிற புறம்போக்கு நிலத்தை ஏழைகளுக்குப் பட்டா வழங்குவதற்கு எளிய வழிவகை செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதில், புறம்போக்கு என்று பொதுவாக சொல்லப்படுகின்றபோது நிலத்தின் classification-ல் பல பிரச்சினைகள் வருகின்றன. அதுகுறித்த விவரங்கள் முதலமைச்சர் அறிவிப்பிலே இல்லை என்பது ஒரு குழப்பத்தை ஏற்படுத்தும். ஏனென்றால் நடைமுறையிலே பட்டா வழங்குவதில் பெரும் சிக்கலே, மந்தைப் புறம்போக்கு, குட்டைப் புறம்போக்கு, ஆற்றோரப் புறம்போக்கு என்று இந்தமாதிரி பிரச்சினை இருக்கிறது. (குறுக்கீடுகள்) என்னுடைய பேச்சை முடித்து

விடுகிறேன். Please, நான் சொல்வது, ஸ்பீக்கரிடத்திலே பேசிக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) ஆம், நீங்கள் என்னோடு பேசிக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, நான் தெரிந்துகொள்ள விரும்புவது, பலவற்றையும் கணக்கில் எடுத்துக் கொண்டு அரசாணை வெளியிடுகிறபோது, இவையெல்லாவற்றையும் கணக்கில் எடுத்துக்கொண்டு எளிமைப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அதற்காகத்தான் ஆளுநர் உரையிலே இந்த அறிவிப்பு செய்திருக்கிறோம். நான் எதிர்பார்த்தேன், எல்லோரும் இதுபற்றி பேசுவீர்கள் என்று. யாரும் பேசவில்லை. இந்தத் திருத்தங்களை (குறுக்கீடு) நீங்கள் பேசினீர்களா? சில நண்பர்கள் பேசியிருக் கின்றீர்கள், எல்லோரும் இதைப்பற்றி பேசவில்லை. ஏனென்றால் இது மிக முக்கியமான அறிவிப்பு. இருந்தாலும்கூட இப்போது சொல்லப்பட்ட கருத்துக்கள், திரு. சி. ஞானசேகரன், திரு. கே. சுப்பராயன் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நண்பர்கள் அவர்களெல்லாம் சொல்லிய அந்தக் கருத்துக்களை மனதிலே வைத்துக்கொண்டு இந்தத் திட்டம் தயாரிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு முக்கியமான அறிவிப்போடு என்னுடைய பேச்சை முடிக்க இருக்கின்றேன். அரசுத் துறைகளிலே பணியாளர் நியமனம் செய்யும்போது சுழற்சி முறைப் பற்றி டாக்டர், அன்பிற்குரிய நண்பர், ராமதாஸ் அவர்களும் மற்றும் இங்கே பேசிய பாட்டாளி மக்கள் கட்சியின் உறுப்பினர்களும், தீரன் போன்றவர்களும்கூட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதையெல்லாம் மனதிலே வைத்துக் கொண்டு அரசுக்கும் இயல்பாக உள்ள அந்த உணர்வோடு இதை அறிவிக்கின்றேன்.

பிற்பகல் 12-50

அரசுத் துறைகளிலே பணியாளர் நியமனம் செய்யும்போது, எந்த இடத்திலே இட ஒதுக்கீடு சுழற்சி முறை பின்பற்றப்பட வேண்டும் என்பது குறித்து அரசின் நிர்வாகத் சீர்திருத்தத் துறை 13-8-1992-ல் ஒரு ஆணை, ஆணை எண். 280-ஐ வெளியிட்டுள்ளது. அதன்படி, முதல் 10 பணிகளுக்குத் தற்போது பின்பற்றி வரும் சுழற்சி



முறையின்படி பொதுப் பட்டியலிலே உள்ளவர்களுக்கு 4 இடங்கள் என்றும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 2 இடங்கள் என்றும், பிற்படுத்தப்பட்டோருக்கு 3 இடங்கள் என்றும், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒரு இடம் என்றும் இப்போது இருக்கிறது.

இந்த முறையை பொதுப் பட்டியலிலே உள்ளவர்களுக்கு 3 இடங்கள் என்றும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 2 இடங்கள் என்றும், பிற்படுத்தப்பட்டோருக்கு 3 இடங்கள் என்றும், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 2 இடங்கள் என்றும் மாற்றியமைக்கும்படி அரசுக்குக் கோரிக்கைகள் வந்திருக்கின்றன. இதுகுறித்து பரிசீலித்து உரிய ஆணை வெளியிடப்படும். எனவே, இந்தக் கோரிக்கைகளை ஏற்று இனிமேல் முதல் 10 இடங்களுக்கு சுழற்சி முறையைக் கணக்கிடும்போது மிகவும் பிற்படுத்தப் பட்டோருக்கு இதுவரை ஒரு இடம் என்பதற்குப் பதிலாக 2 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கான அரசாணை விரைவில் பிறப்பிக்கப்படும் என்று கூறி ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது உரையாற்றிய எல்லா உறுப்பினர்களுக்கும், எதிர்த்தும், ஆதரித்தும் பேசிய அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு - ஞானசேகரன் தூண்டிவிடுகிறார். Walk-out உண்டா என்று கேட்கிறார். ஆளுநர் உரையிலே walk-out மரபல்ல என்று அவருக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்டீர்கள். clarification கொடுத்துவிட்டேன்.

விவாதம் முடிவுற்றது. திருத்தங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

*திரு. பி. வெங்கடசாமி:* இல்லை.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* திரு. பி.வெங்கடசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

*திரு. ஐ. கணேசன்:* இல்லை.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* திரு. ஐ. கணேசன் அவர்களுடைய திருத்தம் பேரவையின அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"2000 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்." என்று மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் காஞ்சனா கமலநாதன் அவர்களால் 3-3-2000 நாளன்று முன்மொழியப்பட்ட தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகின்றது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 4. அரசினர் தீர்மானம்

### பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெற்று ஒத்திவைக்கப்பெறுதல்

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் அவையை ஒத்திவைக்கும் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.



*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(1)-ன்படி பேரவை இன்று (9-3-2000) ஒத்திவைக்கப்பெற்று மீண்டும் 2000 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும்."

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 2000 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 12-53 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

87. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் இருபத்தி எட்டாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

88. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு செய்தித்தாள்-காகித நிறுவனத்தின் பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம்

ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

89. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முப்பத்தி நான்காவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

90. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் இருபத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

91. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட்டின் ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின்(மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது ) (தமிழ், ஆங்கிலம்)

92. அண்ணா பல்கலைக்கழகத்தின் 1998-99 ஆம் ஆண்டுக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. (1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

93. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் இருபத்தி ஐந்தாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

94. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் இருபத்தி இரண்டாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

95. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகத்தின் இருபத்தி நான்காவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)





96. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் ஒன்பதாவது ஆண்டறிக்கை. (1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

97. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பீங்கான் நிறுனத்தின் இருபத்தி ஐந்தாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்**

15. 1998-99 ஆம் ஆண்டிற்கான சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் இருபத்தி ஒன்றாவது ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

16. பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்றி ஒன்பதாவது அறிக்கை, 1999-2000.

17. பொது நிறுவனங்கள் குழுவின் நூறாவது அறிக்கை, 1999-2000.

18. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றி ஒன்றாவது அறிக்கை, 1999-2000.